

# மகா கும்பாபிஷேக மலர்

## அருள்மிகு
## ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி அம்பாள் ஆலயம்
## எழுத்தூர் மன்னார்

19.08.2011

மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகாகும்பாபிஷேக மலர்



அருள்மிகு

## ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி அம்பாள் ஆலயம்

எழுத்தூர், மன்னார்

19.08.2011

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர் குழு

பிரம்மஸ்ரீ.வீ.விஜயபாபு சர்மா

பிரம்மஸ்ரீ.ம.தர்மகுமாரசர்மா

திரு.வை.அழகரத்தினம்

திரு.செ.விஜயன்

திரு.ந.சிவராசன்

திரு.வெ.பெருமாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

–திருமந்திரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அருள்மிகு ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி அம்பாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அருள்மிகு ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி அம்பாள் ஆலய பரிபாலன சபையினர்



இடமிருந்து வலமாக அமர்ந்திருப்போர் பொ.மாணிக்கவாசகர்(போசகர்) வெ.பெருமாள்(உபசெயலாளர்) இ.பாலஸ்கந்தவேல்(உபதலைவர்)
வை.அழகரத்தினம்(தலைவர்) செ.விஜயன்(செயலாளர்) ந.சிவராசன்(பொருளாளர்) வ.செல்வரட்ணம்(போசகர்)

நிர்வாக உறுப்பினர்கள் இடமிருந்து வலமாக திருமதி.பி.சிவபாதம்,அ.ரவிச்சந்திரன், சி.ரவிச்சந்திரன், சி.துரைராஜா, சி.கிருபானந்தன்,
செ.செல்வமகேந்திரன், சி.பாலசிங்கம், இரா.வெங்கட்ராகவன், திருமதி.க.நித்தியலோஜினி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலரின் இதழ்களில்....


- ஆசிச்செய்திகள் i-vi
- வாழ்த்துச்செய்திகள் vii-xiv
- அருளை அள்ளி வழங்கும் அருள்மிகு அகிலாண்டேஸ்வரி அம்பாள் ஆலய வரலாறு 01
- அகிலாண்டேஸ்வரி அருளாண்டருள் பதி 05
- அன்னையின் அற்புதத்தை வியந்து நிற்கிறேன் 16
- அடர்ந்த காட்டின் மத்தியிலிருந்து வெளிப்பட்ட அகிலாண்டேஸ்வரி 18
- எழுத்தூர் ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி அம்பாள் திருஊஞ்சல் பாமாலை 21
- அம்பாள் அருள்வேண்டி மனமுருகிப்பாடிய பக்திப்பாடல்கள் 27
- அகிலாண்டேஸ்வரியின் அடியிணைப் பணிந்தேன் 35
- அம்பாள் அருள்வேண்டி மனமுருகிப் பாடிய பாமாலைகள் 36
- ஸ்ரீ வரலட்சுமி விரத மகிமை 41
- பிரதிஸ்டை 44
- கிரக பலன்களும் அதற்குரிய பரிகாரங்களும் 46
- விவாகப் பொருத்தம் உள்ள நட்சத்திரங்கள் 48
- எமது மக்களுக்கு சில முக்கிய ஆசார முறைகள் 50
- மங்கையருக்கு சில குறிப்புக்கள் 52
- உணவு பரிமாறும் முறைகள் 53
- அறநெறிப்பாடசாலைகளும் அறநெறிக்கல்வியும் 54
- தாய்த் தெய்வ வழிபாட்டின் தொன்மையும் மகிமையும் 57
- ஆலய அமைப்பும் விளக்கமும் 65
- ஆகமங்கள் கூறும் ஆலய கிரியைகள் 69
- நன்றி நவிலல் 71
- மகா கும்பாபிஷேகத்திற்கு நிதியுதவி, பொருளுதவி வழங்கியோர் 74


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளின்

# அருளாசிச் செய்தி

அருளுடை அன்பர்களே

பாடல்பெற்ற சிவத்தலமான திருக்கேதீஸ்வரத்தினை தன்னகத்தே கொண்டு பெருமையுடன் திகழும் மன்னார் மாவட்டத்திலே எழுத்தூர் எனும் பதியில் கோவில் கொண்டு எழுந்தருளியிருக்கும் அன்னை அகிலாண்டேஸ்வரி அம்பிகைக்கு நடைபெறும் குடமுழுக்கு ஆலயத்தையும், அடியவரையும் உளமாயும் புனிதப்படுத்துவதாகும். அரிய மானிடப் பிறவியில் புண்ணியம் தரக்கூடியவை ஆலயவழிபாடாகும்.

ஆலயத்தினை செவ்வனே நடாத்தி தர்மப்பணிகளை செய்வதற்கு ஆலயங்கள் யாவும் முனைய வேண்டியது எமது சமய கடமையாகும். ஏழையினுடைய சிரிப்பில் இறைவனை காணமுடியும் என்பது எமது தர்மம். ஏழைகளுக்கு உதவுவது இறைவனுக்கு செய்வதாகும். இந்த நாட்டில் வாழும் துன்ப சுமையை சுமந்து கொண்டிருக்கும் ஒவ்வொருவருக்கும் உதவுவதும் ஆலயத்தின் கடமையாகும். இக்கும்பாபிஷேகத்தை தரிசித்து மக்கள் யாவரும் தெய்வநம்பிக்கை உள்ளவர்களாகவும் தர்ம சிந்தனையுள்ளவர்களாகவும் வாழவும் இக்கும்பாபிஷேகத்தினை செய்யும் சிவாசாரிய பெருமக்களுக்கும் ஆலய அறங்காவலர்களுக்கும், மன்னார்வாழ் மக்களுக்கும் அன்னையின் அருள் கிடைக்க பிரார்த்திக்கின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிகள்
நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனம்
நல்லூர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கும்பாபிஷேக பிரதிஸ்டா பிரதம குருவின் ஆசியுரை

"ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகை பொன்னம்பலவன்
ஞானகுருவாணி பதம் நாடு"
வேண்டத்தக்கதறிவோய் நீ
வேண்ட முழுதும் தருவோய் நீ
வேண்டும் அயன்மார்க்கறிவோய் நீ
வேண்டி என்னைப்பணி கொண்டாய்
வேண்டி நீயாதருள் செய்தாய்
யானும் அதுவே வேண்டின் அல்லால்
வேண்டும் பரிசொன்றுண்டெனில்
அதுவும் உந்தன் விருப்பென்றோ

அகிலாண்ட கோடிகளையும் சிருஷ்டித்தும் பின்னையும் கன்னி என மறை பேசும் ஆனந்தருபமயிலாம் அன்னை ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி அம்பாள் ஆலயத்தை புதிப்பித்தும் வர்ணம் தீட்டியும் புதுப்பொலிவொடு விளங்கும் திருக்கோயிலின் புனர் ஆவர்த்தன கும்பாபிஷேகம் நடைபெறவும் அதனை முன்னிட்டு வெளியிடப்பட இருக்கின்ற கும்பாபிஷேக மலரும் சிறப்பாக வெளிவரவும் அம்பாளின் திருவருள் கடாச்சம் கிட்டியுள்ளது. இவ் மலருக்கு என் மனமார்ந்த ஆசியை கூறுவதுடன். அம்பாளின் அருள்ளாட்சி என்றும் கிடைக்க வேண்டு கின்றேன்.

ஆலயம் என்பது ஆன்மாக்கள் வசப்படும் இடமாகும். உலகிலே பரந்து கிடக்கின்ற சூரியனின் ஒளியில் பஞ்சை வைத்தால் வெதும்பிவிடும். அதே சூரிய ஒளியில் சூரிய காந்தக் கண்ணாடி ஊடாக வருகின்ற ஒளியில் பஞ்சை வைத்தாள் எரிந்து சாம்பல் ஆகிவிடும். சூரிய காந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணாடியில் வருகின்ற ஒளி மிகவும் சக்தி வாய்ந்தது. அதேபோல பரந்து விரிந்து இருக்கின்ற இறைவனை ஆலயத்தின் மூலஸ்தானத்தில் யந்திரம், விம்பரூபமாக எழுந்தருளச் செய்து மந்திரங்கள் கிரியைகளினாலும் கும்பாபிஷேக விழாவாக ஏற்படுத்தி முழுத் திருவருளையும் பெறுவதுதான் கும்பாபிஷேகத்தின் பெருமை.

இப்பூவுலகில் உள்ள அனைத்து மனித சமுதாயதத்தினதும் ஆணிவேரான கலை, கலாசாரப பண்பாடு களின் மேம்பாட்டிற்கு முழுத் தொண்டாற்றி வருவன கோயில்களே. இவ்வழியே எமது ஆலயமும் பலவழிகளில் எமது சமுதாயத்திற்குக் கலைபண்பாட்டு விழுமியங்களை நிலை நாட்டி வருகின்றது. அவ்வழியே தமிழர்களின் பாரம்பரியக் கலைகளாம் பண்ணிசை, நாடகம், நாட்டியம் என்பவற்றை எமது சமுதாயத்தின் மத்தியில் வேரூன்றச் செய்வதுடன் கலை உலகின் பல சாதனையாளர்களை உருவாக்கி வருவது என்பது எமது சமுதாயம் பெருமை கொள்ள வேண்டிய விடயம்.

இவ் ஆலயம் ஆரம்பமாகிய காலத்தில் இருந்து இதுவரை உற்சவ பிரதமகுருவாக இருப்பது அம்பாளின் பாக்கியமே. இப்பாக்கியம் தொடர அம்பாளின் ஆசியை வேண்டுவதுடன் ஆலய பரிபாலன சபைக்கும் என்னுடைய வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

தேசபந்து, தேசசக்தி, தேசகீர்த்தி
ஆகமகிரியா பாவணர், சிவாச்சாரிய திலகம்,
கலாபூஷணம், சமூக ஒளி, சமூகரத்தினா
சிவஸ்ரீ.ச.மனோகரக்குருக்கள்
அகில இலங்கை சமாதான நீதவான்
மன்னார் மாவட்ட இந்துமத பிரதமகுரு,
மன்னார்.

உன்னிடம் இருக்கும் உன் சாஸ்திர அறிவை மற்றவர்களுக்கும் கொடு அதனால் பலருக்கு நன்மை ஏற்படும். உடம்பு இருக்கும் வரை ஏதாவது வேலை செய்யாமல் இருக்கமுடியாது. எனவே மற்றவர்களுக்கு நன்மை தரும் செயல்களைச் செய்வது நல்லது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆலய பிரதம குருவின்
# ஆசியுரை

திருச்சிற்றம்பலம்

கலையாத கல்வியும் குறையாத வயதும்
ஓர் கபடுவாராத நட்பும்
கற்றாத வளமையும் குன்றாத இளமையும்
கழுபிணி இல்லாத உடலும்
சலியாத மனமும் அன்பகலாத மனைவியும்
தவறாத சாந்தானமும்
தாழாத கீர்த்தியும் மாறாத வார்த்தையும்
தடைகள் வராத கொடையும்
தொலையாத நிதியமுங் கோணாத கோலும்
ஒரு துன்பம் இல்லாத வாழ்வும்
துய்யநின் பாதத்தில் அன்பும் உதவிப் பெரிய
தொண்டரோடு கூட்டுக் கண்டாய்
அலையாழி அறிதுயிலும் மாயனது நங்கையே!
ஆதிகடவூரின் வாழ்வே!
அமுதீசன் ஒருபாகம் அகலாத சுகபாணி
அருள்வாமி! அபிராமியே!
திருச்சிற்றம்பலம்

உலகம் அனைத்தையும் படைத்துக் காத்து ஊனுக்குள் உயிருக்குள் உணர்வாய் உருவாய் அருவாய் இவ்வுலகு அனைத்திலும் நீக்கமற நிறைந்து கனியில் சுவையாய் காற்றில் இயக்கமாய் நீருள் நெருப்பாய் நெருப்பும் நீராய் நிறைந்திருக்கும் அன்னை அன்பின் வடிவமுடையாள் ஆதலால் தான் இறைவனை வழிபடும் அடியார்கள் அம்மையே அப்பா என்று அன்னைக்கும் சிறப்பிடம் வழங்கி அழைக்கின்றனர். அவளும் பால் நிறைந்தூட்டும் தாயாக இருந்து உயிர்களின் தேவையை அறிந்து ஓடோடி வந்து உதவுகிறாள்.

கல்லினுள் தேரைக்கும் கருப்பையில் இருக்கும் உயிர்க்கும் புல்லுணவு அளிப்பவள் அவள் இவ்வுலகின் இயக்கமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளால் தான் நடைபெறுகின்றது. சக்தியானவள் இச்சா, கிரியா, ஞானாசக்திகளை உள்ளடக்கியதானவள் உயிர்குலம் தழைத்து வளர்வதற்கு சக்தி என்ற ஆற்றலே அடித்தளமாக அமைகிறது என்ற பொருளினை "அருளது சக்தியாகும்" என்ற சிவஞான சித்தியாரின் வாக்கால் அறியலாம்.

அகில உலகங்களை ஆளும் அகிலாண்டேஸ்வரி என்னும் நாமத்தோடு மன்னார் மாவட்டத்தின் திருக்கேதீஸ்வர புண்ணிய சேத்திரத்தின் பட்சிமபாகத்தில் எழுந்தூர் என்னும் திருப்பதியில் சக்தி ரூபமாக வீற்றிருக்கும் அகிலாண்டேஸ்வரி அன்னையின் திருத்தலம் புனராவர்த்தனம் செய்யப்பட்டு திருக்குடமுழுக்கு காண்பதில் பெரும் மகிழ்வடைகிறேன். மேலும் அன்னையினுடைய அருளாசி எல்லோருக்கும் கிடைக்க பிரார்த்திப்பதோடு இக்குடமுழுக்கு வைபவத்தை சிறப்புற நடாத்தித்தந்த பிரதம சிவாச்சாரி யாருக்கும். இதரகுருமார்களுக்கும் இவ்வாலயத்தை குறுகிய காலத்தில் அமைத்துத் தந்துதவிய ஸ்தபதியினருக்கும் மற்றும் சிற்பவேலை வர்ணவேலை, மங்கள இசை, சுவாமி அலங்காரம் வேலை போன்ற கலைஞர்களுக்கும் இவ்வாலயத்தை அமைத்து பெருஞ்சாந்தி விழா நடாத்த பொருளுதவி, நிதியுதவி, சரீர உதவி அனைத்தையும் தந்துதவிய அனைத்து அன்னையின் அடியார்களுக்கும் எனது நன்றியையும் அம்பிகையினுடைய அருளும் கிடைக்க அன்னையை வேண்டி ஆசி கூறுகிறேன்.

லோகா ஸமஸ்தா சுகினோபவந்து

நன்றி


இங்ஙனம்
ஆலயக்குருக்கள் பிரம்மஸ்ரீ.வீ.பாபுசர்மா
ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி அம்பாள் ஆலயம்,
எழுத்தூர் - மன்னார்

இனம், மதம் போன்ற வேற்றுமை எதுவும் இல்லாமல் எல்லோரிடமும் எல்லா நிலையிலும் நன்மையை விரும்பும் எண்ணம் (உணர்வு) உன் உள்ளத்தில் எழுமானால், நீ ஆன்மீக வாழ்க்கையில் முன்னேறிக் கொண்டிருக்கிறாய் என்பது நிச்சயம்.

-விவேகானந்தர்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**பேசாலை ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி**
**ஆலய பிரதம குரு**
**வித்யா சிரோண்மணி சமூக**
**ஜோதி பிரம்மஸ்ரீ.**
**ம.தர்மகுமார சர்மா அவர்களின்**

## ஆசிச்செய்தி

இந்துக்கள் வாழும் இடமெல்லாம் பிரதானமாய் காணப்படுவது கோயில் அங்கிங்கெனாதபடி எங்கும் நிறைந்த இறைவன் திருக்கோவில்களிலே எழுந்தருளி அருள் புரிகின்றான். ஏனைய இடங்களில் பாலில் நெய்போல மறைந்திருப்பான். யந்திர விம்ப ரூபமாக இறைவனை ஆலயத்தின் மூலஸ்தானத்திலும் எழுந்தருளச் செய்து பரிவாரத்திலும் மந்திரங்களாலும் கிரியைகளாலும் கும்பாபிஷேகம் செய்து முழுத் திருவருளையும் பெறுவது சிறப்பிற்குரியதே. இதுவே கும்பாபிஷேகத்தின் பெருமை. இந்த வகையில் அகிலங்களை ஆண்டு கொண்டிருக்கும் அன்னை அகிலாண்டேஸ்வரிக்கு எழுத்தூர் பதியிலே குடமுழுக்கு பெருஞ்சாந்தி நடைபெறுகின்றது. இக்கும்பாபிஷேகத்தினை சிறப்பாக நடாத்துவது மட்டுமன்றி இவ்வாலய புனர் நிர்மாண பணிகளை செவ்வனவே செய்து முடித்த ஆலய பரிபாலகர்கள், இறைபணியினர் களின் முயற்சி போற்றுதலுக்குரியது இவ்வால யத்தில் ஆலயகுரு, பிரம்மஸ்ரீ.வீ.பாபுசர்மா அவர்களின் பணியும் போற்றுதலுக்குரியது.

எதுவும் இறையருள் இன்றி நடக்காது. தெய்வ அனுக் கிரகத்தால் உந்தப்பட்டு பக்தர்களால் நற்காரியங்கள் நடைபெறு கின்றன என்பதற்கு இவ்வாலயம் நல்லதொரு முன்னுதாரணம். அடியவரின் தர்ம சிந்தனையும் இறைவனின் கருணையுமே இங்கு மிளிர்கின்றது.

நாம் துயரமின்றி வாழவேண்டுமேயானால் திருவருளே துணையாக அமையவேண்டும். திருவருளில் தோய்ந்தவர் களுக்கு இன்பமே எந்நாளும் துன்பமே இல்லை என்ற அனுபவம் பிறக்கும்.

இன்று புத்தொளியும், புன்னகையும் காட்டி அடியாரை வரவேற்று அருள்புரியும் அன்னையை எம்முள்ளே வரவேண்டி வணங்குவோம் வரம் பெறுவோம்

பிரம்மஸ்ரீ.ம.தர்மகுமார சர்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மன்னார் மாவட்ட
அரசாங்க அதிபர்
உயர் திரு.நா.வேதநாயகன்
அவர்களின்

# வாழ்த்துச்செய்தி

"கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்ற மூதாட்டியின் முதுரைக்கிணங்க எழுத்தூர் கிராமத்தில் எழுந்தருளி அருள் பரிபாலனம் செய்யும் அன்னை அகிலாண்டேஸ்வரி அம்பாளின் ஆலயத்தின் மகா கும்பாபிஷேகம் நடைபெறுவதனைக்காண கிடைத்தமை இப்பகுதி வாழ் இந்து மக்களின் பெரும்பேறாகும்.

புனிதமும், பக்திப் பொலிவும் நிறைந்த அம்பாள் ஆலயத்தில் நடைபெறுகின்ற குடமுழுக்குக் கிரியைகளும் அதனைத் தொடர்ந்து இடம்பெறவுள்ள மண்டலாபிஷேகக் கிரியைகளும் எம்மைச் சூழ்ந் திருக்கும் துன்பங்களையும், வேதனைகளையும் தணிக்க வல்லன. இதன் மூலம் இப்பிரதேச மக்கள் நல்வாழ்வு வாழ்வதற்கு வழிவகுக்குமென நம்புகின்றேன்.

அங்கிங்கெனாதபடி எங்கும் நிறைந்துள்ள இறை சக்தியை எளிதில் உணர்ந்து வழிபடுவதற்கு ஏற்ற இடமே ஆலயமாகும். ஆலயத்தில் திருவருட் சக்தி எப்போதும் நிறைந்திருக்க வேண்டும். இச்சக்தியை நிலை பேறுடையதாக்குவதற்கு கும்பாபிஷேகம் உதவுகின்றது. பஞ்ச பூதங்களிடமாகவும், இயங்கும் உயிர்கள், இயங்கா உயிர்கள் யாவற்றினிடமாகவும் வியாபகமாகவுள்ள இறைவனின் திருவருட் சக்தியை மந்திர பூர்வமாக வேதாகம கிரியை முறைப்படி மகா கும்பத்தினிடமாக ஈர்த்து அதனை மூலமூர்த்தி, பரிவார மூர்த்திகளிடமாக பதிப்பிப்பதற்காக மகா கும்பாபிஷேகங்கள் நிகழ்த்தப்படுகின்றன.

எனவே இப்பணி சிறப்புற நடைபெறுவதற்கு முன்னின்று செயற்படும் ஆலய பரிபாலன சபையினருக்கும் இப்பகுதி வாழ் மக்களுக்கும் என்றென்றும் அன்னையின் அருள்பாலிக்க வேண்டுமென அன்னை அகிலாண்டேஸ்வரி அம்பாளின் நல்லாசிகளை வேண்டி நிற்கின்றேன்.

நா.வேதநாயகன்
அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலாளர்
மன்னார் மாவட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மன்னார் மாவட்ட இந்து ஆலயங்களின் ஒன்றியத்தின் தலைவரின்

# வாழ்த்துச் செய்தி

ஈழவள நாட்டில் பாடல்பெற்ற கௌரி உடனுறை திருக்கேதீஸ்வர சிவதலம் உள்ள, நீர் வளமும், நிலவளமும் ஒழுங்கே அமைந்த இயற்கை எழில் மிகு மன்னார் நகரின் எழுத்தூர் கிராமத்தில் எழுந்தருளி, மூர்த்தி சிறிதாயினும் கீர்த்தி பெரிது என்னும் வகையில் துரித வளர்ச்சி கண்டு, இந்து மக்களுக்கு இறையுணர்வூட்டு, இன்னல்கள் அகற்றி வளம் பல பெருக்கி வாழ்வித்து அருள் பாலித்துவரும் அருள்மிகு அகிலாண்டேஸ்வரி அம்பாள் ஆலயம் புனராவர்த்தனம் செய்யப்பட்டு 19.08.2011ல் மகா கும்பாபிஷேகம் செய்யப்படுவதற்கு உறுதுணையாக நின்ற அகிலாண்டேஸ்வரி அம்பாள் ஆலய பிரதமகுரு பிரம்மஸ்ரீ. பாபு சர்மா, மஹா கும்பாபிஷேக பிரதம குரு தேசபந்து, கலாநிதி சிவஸ்ரீ. சபா மனோகர சர்மா இந்த ஆலய வளர்ச்சியில் தங்களை அர்ப்பணித்த முன்னாள் தலைவரும் இன்றைய உபதலைவருமான திரு.இ.பாலஸ்கந்தவேல், முன்னாள் செயலாளரும் தற்போதைய உப செயலாளர்.திரு. வெ.பெருமாள், புதிதாக தலைவராக தெரிவு செய்யப்பட்டு தன் தலைமைத்துவ பண்புகளை குறுகிய காலத்தில் வெளிப்படுத்திய தலைவர்.திரு. வை.அழகரெட்ணம் அமைதியின் வடிவாக இருந்து அம்பிக்கைக்கு அரும் பணியாற்றிவரும் செயலாளர் திரு.செ.விஜயன், இந்தக் கும்பாபிஷேக நிகழ்வில் மன்னார்வாழ் சைவமக்கள் அனைவரும் பங்கு கொள்ள வேண்டும் என்ற ரீதியில் நிதி சேகரிக்கும் திருப்பணியில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திய பொருளாளர்.திரு.ந.சிவராசன் மற்றும் இந்தக் கடமைகளில் எல்லாம் ஈடுபட்டு அரும்பணியாற்றிய அகிலாண்டேஸ்வரி ஆலய சிவதொண்டர்கள், மற்றும் பரிபாலன சபையினர் அனைவரையும் மனதார வாழ்த்துகின்றேன் வணங்குகின்றேன். இவர்கள் அனைவருக்கும் மன்னாரில் சைவத்தை வளர்க்கும் மன உறுதியையும், கடவுளின் மீது அசைக்க முடியாத இறை பக்தியையும், நீண்ட ஆயுளையும் அம்பாள் வழங்கவேண்டும் என பிரார்த்திக் கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண்ணகத்தே வரும் நன்னவும் மாட்டா இறை அருளை மண்ணகத்தே கொணர்ந்து நிலை நிறுத்துவதும் பிரதுவி, சுப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்னும் பஞ்சபூத வடிவில் யாகசாலை அமைத்து கும்பஸ்தானம் செய்து யாக குண்டத்தில் அக்கினியை ஆவாகனம் செய்து அக்கினியின் ஏழு நாக்குகள் மூலம் விசேட திரவியங்கள் கொண்டு ஆருதி செய்து நடைபெறும் குடமுழுக்கு அடியார்களுக்கு அருளின்பம் கொடுக்கும் நிகழ்வாகும்.

மதா பராசக்தி வையமெலாம் நீ நிறைந்தாய் ஆதாரம் உன்னை அல்லால் ஆர் எமக்கு பாரினிலே என்கிறான் மகாகவி பாரதி. அதற்கேற்ப புதுப்பொலிவு பெற்று சிறப்புடன் மிளிரும் பராசக்தியாகிய அகிலாண்டேஸ்வரி ஆலயம் சைவ மக்களுக்கு வேண்டிய சமய, சமூக, ஆன்மீக பணிகளை செய்யும் என்பதில் ஐயமில்லை. மிகக் குறுகிய காலத்தில் கும்பாபிஷேக மலர் ஒன்றை சிறப்பாக வெளியிட முன்வந்துள்ள மலர்குழுவினர்க்கு இறையாசி கிடைக்க பிரார்த்திக்கின்றேன். இம்மலர் மலர்ந்து திக்கெட்டும் சைவமணம் கமழவும், அன்பர்கள் இவ்வருள் வாசனையை துகர்ந்து அருள்ஞான இன்பம் பெற்று திகளவும், பல சிறப்புக்களோடும் இக்கும்பாபிஷேக விழா மலர் மலர்ந்துவர உறுதுணையாய் நின்ற அன்பர் அனைவருக்கும், கட்டுரைகள் வரைந்து உதவிய கலை வல்லாருக்கும் உரிய காலத்தில் ஒளிபெற்று வெளிவர உதவிய அன்பர் அனைவருக்கும், அத்தனைக்கும் மேலாக திருப்பணிக்கு வேண்டும் பொருளுதவி செய்து திருக்கோயிலைச் சிறந்தோங்கச் செய்த வன்மையாளர் அனைவருக்கும் அகிலாண்டேஸ்வரி அம்பாளின் பேரருள் பெருகிச் சிறக்கத் தொழுது நிற்கிறேன்.


இக் கும்பாபிஷேக கிரிகைகளை நடாத்தும் சிவாச்சாரிய பெருமக்கள், ஆலய அறங்காவலர்கள், ஆலய கட்டிட கலைஞர்கள், ஆலய சிவதொண்டர்கள், அடியார்கள் அனைவரையும் ஒன்று சேர்த்து இத் திருப்பணியை நிறைவாக்கிய அம்பாளின் அருட்கடாச்சம் இப்புண்ணிய செயலில் பங்கு கொண்ட அனைவருக்கும் கிடைக்க வேண்டும் என பிரார்த்தித்து, இப்பணியில் ஈடுபட்ட ஒவ்வொருவரையும் பாராட்டி "வாழ்க சைவம், வளர்க சைவ திருப்பணி என்று பாராட்டி வாழ்த்த கடமைப் பட்டுள்ளேன்.

"மேன்மை கொள் சைவநீதி
விளங்குக உலகமெல்லாம்"

தேசபந்து
வைத்திய கலாநிதி மு.கதிர்காமநாதன்
தலைவர்
மன்னார் மாவட்ட
இந்து ஆலயங்களின் ஒன்றியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**அருள்மிகு அகிலாண்டேஸ்வரி அம்பாள் ஆலய**

# பரிபாலனசபைத் தலைவரின் செய்தி

நிலவளமும், நீர்வளமும் ஒன்றிணைந்து மெருகூட்டும் இயற்கை எழில் மிகு மன்னார் நகரில் தாழ்வுபாடு வீதியில் உள்ள எழுத்தூர் கிராமத்தில் எழுந்தருளி மக்களுக்கு இறையுணர்வூட்டி இன்னல்கள் அகற்றி வளம்பல பெருக்கி வாழ்வித்து அருள் பாலித்துவரும் அருள்மிகு அகிலாண்டேஸ்வரி அம்பாளுக்கும் மற்றும் பரிவார மூர்த்திகளுக்கும் இந்த புனித நன்னாளில் 19.08.2011 மகா கும்பாபிஷேகம் நடைபெறுவதைக் காண பேரானந்தம் அடைகிறேன்.

சுமார் இருபத்தைந்து வருடகாலமாக இவ்விடத்தில் இருந்து அருள்பாலிக்கும் அம்பாளுக்கு புதிதாக கோபுரங்களுடன் சகல பரிவார மூர்த்திகளும் பிரதிஸ்டை செய்யப்பட்டு முழுமையான ஆலயமாக பரிணமித்துள்ளது. இன்று நடைபெறும் இந்த மகா கும்பாபிஷேகத்திற்காக நிதியுதவி அளித்த அனைத்து மக்களுக்கும் தொண்டர் சபை உறுப்பினர்களுக்கும் உதவிய குருக்கள், சிவாச்சாரியர்கள், சிற்பிகள், ஓவியர்கள், கலைஞர்கள் மற்றும் அமைச்சர்கள், பாராளுமன்ற அங்கத்த வர்கள், நகரசபை உறுப்பினர்கள், இந்துசமய கலாச்சார அலுவல்கள், திணைக்கள பணிப்பாளர் மற்றும் உத்தியோகத்தர்கள் இவர்களோடு இக் கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற உதவிய அனைத்து அன்பர்களுக்கும் சபையின் நன்றியறிதலை தெரிவித்துக் கொள்கின்றேன்.

"பொறுப்புகளை உரிய விதத்தில் ஆற்றுவதன் மூலம் மதம், சமுதாயம் மேன்மை அடையமுடியும் என்பதை இத்தருணத்தில் சுட்டிக்காட்ட கடமைப்பட்டுள்ளேன்.

வை.அழகரத்தினம்
தலைவர்
ஆலய பரிபாலனசபை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## முன்னாள் தலைவரின்
# வாழ்த்தும் பிரார்த்தனையும்

ஆலய வளர்ச்சி கருதி சேவை நல்கும் எல்லா மக்களுக்கும் பரிபாலன சபையினருக்கும் ஆலய தொண்டர் சபையினருக்கும், ஆலய குருக்கள் பிரம்மஸ்ரீ.பாபுசர்மா அவர்களுக்கும் மற்றும் எல்லோருக்கும் அன்னை அகிலாண்டேஸ்வரியின் அருளாசியை வேண்டி என் அன்பார்ந்த வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அற்புத அன்னை அகிலாண்டேஸ்வரியின் வரலாறு கூறுவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன். சில ஆண்டுகளுக்கு முன் இந்த ஆலயக் காணியானது பெரும் காடாக இருந்தது. இந்தக் காட்டுக் காணியை பாலஸ்கந்தவேலாகிய நான் கொள்வனவு செய்து கொண்டேன். மலைநாட்டு தொழிலாளர்களைக் கொண்டு துப்பரவு செய்யும் போது வேப்பமரத்தடியில் ஏற்கனவே வழிபாடு செய்து கைவிடப்பட்டதெனத் தோன்றும் இரும்பாலான சூலத்தைக் கண்டு நானும் தொழிலாளர்களும் மற்றுமுள்ளோரும் பிரஸ்தாப சூலத்தை வழிபடும் நோக்குடன் சிறிய ஆலயமொன்றை அமைத்து வழிபடும் நாளில் இவ்வாலயத்தின் அன்னை அகிலாண்டேஸ்வரி அம்மன் என என் தரிசனத்திலும் தோற்றவே அன்னை அகிலாண்டேஸ்வரி ஆலயமென தோற்றம் பெற்றது. இன்று பூசைக்குரிய சிலையாக விளங்கும் அம்மன் சிலை கூட அன்று அம்மன் கிருபையால் வாங்கி வழிபடக்கூடியதாக இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்பு சில ஆண்டுகள் நாட்டுப் பிரச்சனை காரணமாக ஆலயம் பராமரிப்பற்ற நிலையில் இருந்தது. 1983ல் இந்த பிரச்சனைகள் இருந்திருப்பினும் பரிபாலன சபைக்குள் இக்கோயில் நிர்வாகம் உள்வாங்கப்பட்டது இக்காலப்பகுதியில் ஆகும். 1992ம் ஆண்டளவில் மக்களின் பரவலான குடியேற்றத்தின் பின்னர் ஆலயம் சிறிது சிறிதாக வளர்ச்சி கண்டு வருகின்றது. கோயிலுக்கு உரித்தான காணியொன்று கொள்ளத்தக்க உறுதியானது. 2002ல் பரிபாலன சபையிடம் கையளிக்கப்பட்டது. அத்தோடு இக்காணியின் கிழக்குப்பக்கம் 2ம் வீதிக்காக 80 (அடி) நீளத்தை நீக்கொலஸ் என்பவருடன் கதைத்து நன்கொடையாகப் பெற்றுக் கொள்ளப்பட்டது. வசந்த மண்டபக் கட்டடம் 2ம் வீதியில் வந்தபடியால் செல்வராஜா என்பவரிடமும் காணி கொள்வனவு செய்யப்பட்டது.

அற்புதக் கோலம் கொண்ட அன்னையின் அருளால் ஆலயம் மெல்ல மெல்ல படிப்படியாக வளர்ச்சி கண்டுவருவது அன்னையின் நல்லாசியும், மக்களினதும் நிர்வாகத்தினதும் அரும்பெரும் சேவை என்பதில் எவ்வித ஐயப்பாடுமில்லை. கடந்த காலங்களில் முதன்மை தொண்டனாக விளங்கி தலைமைப் பொறுப்பேற்று பணியாற்றினேன். ஆயினும் எனது சுகவீனம், வயோதிபம் மற்றும் துரிதகெதியில் வேலைகளை முன்னெடுத்துச் செல்வதற்காகவும் சென்ற ஆண்டு நடைபெற்ற பொதுச்சபைக் கூட்டத்தில் நான் கேட்டுக்கொண்ட தற்கமைய இளம் துடிப்புள்ள இளைஞர்களை சபை தெரிவு செய்ய அவர்களால் மீண்டும் உபதலைவராக செயலாற்றும் பணி வழங்கப்பட்டது.

ஆலய பரிபாலன சேவையின் வளர்ச்சிப் படிகளில் நன்னீர் தொட்டி, கோயில் சுற்றுமதில், பூசகருக்கான விடுதி, மடப்பள்ளியறை, வாகனசாலை, விநாயகர், முருகன், நவக்கிரக ஆலயங்கள், எழுந்தருளி மண்டபம், மணிக்கோபுரம் என வளர்ச்சிப் படிநிலைகளில் இன்று அன்னையின் ஆலயமானது சாஸ்திரீக முறையில் ஆகம விதிப்படி புணரமைக்கப்பட்டு வரும் 19.08.2011ல் மகாகும்பாபிஷேகம் நடைபெறுவது மிக மிக மகிழ்வை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருகின்றது. ஆலய புரணமைப்பானது திட்டமிட்டவாறு மகா மண்டபம் வரை நிறைவுற்றுள்ளது. வெளிமண்டபமும் மக்களின் வழிபாட்டு இடம் கருதி மிக விரைவில் செய்து முடிக்க வேண்டிய அவசியம் எமக்குள்ளது.

இந்த புனரமைப்பு வேலைகளில் பாடுபட்ட ஆலயத் தொண்டர்களையும் பரிபாலன சபையினரையும் முழுமூச்சாக சிரமதானப் பணிகளில் ஈடுபட்டுழைத்த பரிபாலன சபையின் தலைவர் திரு.அழகரத்தினம் பொருளாளர், செயலாளர், தொண்டர் சபையினர் அதன் போசகரான ஆலயக்குருக்கள் பிரம்மஸ்ரீ.பாபுசர்மா அவர்களையும் உளமார வாழ்த்துவதோடு எல்லோருக்கும் அன்னை அகிலாண் டேஸ்வரியின் அருளாசிகிட்ட வேண்டுமென பிரார்த்திக் கின்றேன். அவ்வாறே கட்டட கலைஞர் திரு.விநோசிறி அவர்களையும் அவரது கட்டடத் தொழிலாளர்களையும், சிற்ப கலைஞரையும், மைப்பூச்சாளர் களையும், மனமார வாழ்த்துகிறேன். அத்தோடு சகலருக்கும் அன்னையின் அருள் கிட்ட பிரார்த்திக்கின்றேன். எனது அயராத சேவையும் கடைசிவரை அம்மன் சேவைக்கே தொடரவேண்டி என் வாழ்த்துரையை முடித்துக் கொள்கிறேன்.

நன்றி

இ.பாலஸ்கந்தவேல்
அருள்மிகு அகிலாண்டேஸ்வரி அம்பாள் ஆலய
பரிபாலன சபையின் முன்னாள் தலைவரும்
இன்னாள் உபதலைவரும்
அம்பாள் வீதி, எழுத்தூர், மன்னார்.

பெரியோர்களைத் தரிசிக்கச் செல்லும் போதும்
ஆலயத்திற்குப் போகும் போதும் வெறுங்கை
யனாய் ஒரு போதும் போகக் கூடாது.
பெரியோர்களுக்குச் சமர்ப்பிக்கும் பொருட்டு
ஏதேனுமொன்றைக் கொண்டு செல்லல்
வேண்டும். - ஸ்ரீ இராம கிருஷ்ணர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள்மிகு அகிலாண்டேஸ்வரி
# அம்பாள் ஆலய
# பரிபாலன சபையின்
# செயலாளரின் வாழ்த்துரை



"மாலற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயம் தானும் அரன் எனத் தொழுமே"

இந்து சமுத்திரத்தின் முத்து என் வர்ணிக்கப்படும் இலங்கைத் தீவின் மூச்சுவிடும் முக்கிய உறுப்புப் போன்று விளங்கும் மன்னார் தீவின் எழுத்தூர் கிராமத்தில் எழுந்தருளியிருக்கும் அருள்மிகு அகிலாண்டேஸ்வரி அம்பாள் ஆலயம் குறுகிய காலத்தில் மிகப் பெருமை மிக்க ஆலயமாக திகழ ஆக்கமும் ஊக்கமும், நிதியுதவியும், காணிகளும் வழங்கிய நல்ல உள்ளங்களுடன் கூடிய அம்பாளின் பக்தர்களுக்கு நன்றி தெரிவிப்பதுடன் வாழ்த்துக்களையும் தெரிவிப்பதில் மிக மகிழ்வடைகின்றேன்.

அடர்ந்த காட்டில் சூலாயுதத்துடன் காணப்பட்ட அகிலாண்டேஸ்வரி அம்பாள் சிறு கூரையுடனான கோயிலில் குடிகொண்டு தற்போது 19.08.2011 அன்று ஆகமவிதிப்படி அமைந்த கோபுரத்து ஆலயத்தில் குடிகொள்வதையிட்டு மகிழ்வடைகிறேன்.

மேலும் அகிலாண்டேஸ்வரி அம்பாளின் புனராவர்த்தன கும்பாபிஷேக வேளையில் கலசங்களில் ஊற்றப்படும் தீர்த்தம் அச்சூழலிலுள்ள எல்லா ஜீவராசிகளுக்கும் தெளிக்கப்பட்டு தூய்மையடைந்து அறிவும் ஆரோக்கியமும் கிடைக்க அருள்பாலிக்க வேண்டுகின்றேன்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

செ.விஜயன்
செயலாளர்
ஆலய பரிபாலன சபை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அருளை அள்ளி வழங்கும் அருள்மிகு அகிலாண்டேஸ்வரி அம்பாள் ஆலய வரலாறு

மன்னார் நகரிலும் அதை அண்மித்த கிராமங்களிலும் வாழும் இந்து மக்களின் முக்கிய வழிபாட்டுத் தலங்களில் ஒன்றாக அருள்மிகு அகிலாண்டேஸ்வரி அம்பாள் ஆலயம் விளங்குகின்றது. பிரஸ்தாப ஆலயம் மன்னார் நகரின் மேற்கு எல்லையாயும் எழுத்தூர் கிராமத்தின் கிழக்கு எல்லையாயும் உள்ள இடத்தில் அமைந்துள்ளது. மன்னார் நகர பேருந்து நிலையத்தில் இருந்து சுமார் ஒன்றரைக்கிலோ மீற்றர் தூரத்தில் மேற்கு திசையில் அதாவது தாழ்வுபாடு வீதிக்கு கிட்டவாக அமைந்துள்ள இவ்வாலயத்திற்கு "தாழ்வுபாடு" என்ற பெயர் பலகையுடன் புறப்படும் தனியார் வாகனங்களிலும்,இ. போக்குவரத்துச் சபைக்கான வாகனங்களிலும் ஆட்டோக்களிலும் வரமுடியும். அவ்வாறு வருவோர் தாழ்வுபாடு வீதியில் ஆலயவீதி, அல்லது அம்பாள்வீதி என்ற பெயர் பலகை உள்ள சந்தி ஒன்றில் இறங்கி சற்று வடக்குத் திசையில் வந்தால் ஆலயத்தை அடையமுடியும்.

சுமார் 25 வருடங்களுக்கு முன்பு ஆலயம் உள்ள பகுதியும் அதை சூழவுள்ள பெரிய நிலப்பரப்பும் பயங்கர காட்டுப் பகுதியாக இருந்தது. குறித்த காட்டுப்பகுதியில் உள்ள காணியில் சுமார் இரண்டேக்கர் வரையான காணியை மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும், மன்னாரை வசிப்பிடமாகவும் கொண்டிருந்தவரான திரு.இராசரெத்தினம்பிள்ளை பாலஸ்கந்தவேல் என்ற பெரியார் 1977ம் ஆண்டளவில் கொள்வனவு செய்திருந்தார். அவர் தாம் கொள்வனவு செய்திருந்த காணியின் அடர்ந்த காடுகளையும், முற்புதர்களையும் சில தொழிலாளர்களை வைத்து வெட்டி துப்பரவு செய்து வரும்போது அக்காணியின் தெற்கு எல்லைக்கு உட்பட்டதான இடத்தில் வேப்பமரமொன்றின் கீழ் இரும்பிலான சிறிய சூலமொன்று நடப் பட்டிருந்ததை கண்ணுற்றுள்ளனர். அந்த சூலத்தின் தன்மையினையும், அதன் பழமையினையும் அவதானித்தவர்களும் திரு.பாலஸ்கந்தவேல் ஐயா அவர்களும் குறித்த சூலம் ஏற்கனவே வழிபாட்டில் இருந்திருக்கலாமென கருதியதாலும் வேப்ப மரத்தின் கீழ் அந்த சூலம் இருந்தமையாலும் அதனை அம்மன் எனக்கூறி அகிலாண்டேஸ்வரி என்ற நாமத்துடன் அதற்கு வெள்ளி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செவ்வாய் போன்ற நாட்களில் விளக்கு வைத்து கற்பூரம் கொழுத்தி வழிபடலாகினர்.

காலப்போக்கில் இவ்வாலயத்துக்கு மக்களின் வரவு அதிகரிக்கத் தொடங்கியது. அம்மனில் பக்தியும் நம்பிக்கையும் அதிகரித்தது. பொங்கலும் பூசையுடன் மக்களால் நடாத்தப்படலாயிற்று. திரு.கறுப்பையா கணேசம்மா என்ற அம்பாளின் அடியார் ரூபா 3000/- த்தை திரு.பாலஸ்கந்தவேல் ஐயா அவர்களிடம் கொடுத்து அம்பாளுக்கு சிறிய மூலஸ்தான மண்டபத்தைக் கட்டுவிக்கும்படி கேட்டுக் கொண்டார். அதன்படி சிவஸ்ரீ.மனோகர சர்மா அவர்களது ஆலோசனையின் பிரகாரம் சிறிய மூலஸ்தான கட்டிடம் அமைக்கப்படலாயிற்று.

ஆரம்பத்தில் அம்பாளுக்கான பூசைகளை திரு.பாலஸ்கந்தவேல் ஐயா அவர்களால் நாடாத்தி வரப்பட்டதாகினும் பின்பு சிவஸ்ரீ. ஆரணன் சர்மா வயது 15 அவர்களால் நடாத்தப்பட்டது. இவர் தனது பாடசாலைப் படிப்பை முடித்த பின்பு மாலையில் பூசைகளை செய்துவந்தார். இக்காலகட்டத்தில் ஆலயத்துக்கு ஒரு பரிபாலன சபை அவசியம் என்பது உணரப்பட்டது. அதன்காரணமாக 1995ம் ஆண்டளவில் அருள்மிகு அகிலாண்டேஸ்வரி அம்பாள் ஆலய பரிபாலன சபை என்ற பெயரில் பரிபாலன சபை அமைக்கப்பட்டது. மங்களகரமாக செயற்படத் தொடங்கிய அருள்மிகு அகிலாண்டேஸ்வரி அம்பாள் ஆலயபரிபாலன சபையின் செயற்பாடுகளின் காரணமாக மூலஸ்தானத்துக்கு முன்னால் மண்டபங்கள் அமைக்கப்பட்டதுடன் 1998ம் ஆண்டு கார்த்திகை மாதம் 02ம் திகதி ஆலயத்துக்கான முதலாவது புணராவர்த்தன மகா கும்பாபிஷேகம் நடாத்தப்பட்டது.

அடுத்து எழுத்தூர் அம்பாள் வீதியில் வசித்தவரான திரு.திருநாவுக்கரசு செல்வநாதன் அவர்கள் தனது மகனுக்காக வைத்த நேர்த்திக்காக மகன் சுதந்திரனின் பெயரால் வைரவர் ஆலயம் ஒன்றைக்கட்டி அதில் வைரவர் விக்கிரகத்தை வைத்து பிதிஸ்டை செய்வித்தார். அதுமட்டுஅல்ல அவர் சுமார் 10 கிலோ வரை நிறையுடைய மணியொன்றையும் கொண்டு வந்து ஆலயத்துக்கு அன்பளிப்பு செய்தார். அவ்வாறே ஆலயத்தின் பரிபாலன சபை ஆலயத்தின் எதிர்காலத் தேவைக்கென 22 பேர்சஸ் காணியை கொள்வனவு செய்துள்ளது.

1998ம் ஆண்டு நடாத்தப்பட்ட புனராவர்த்தன கும்பாபிஷேகத்துக்குப் பின் வருடாவருடம் மணவாளக்கோல விசேட அபிசேகங்களும், விஷேட பூசைகளும் நடாத்தப்பட்டு வருவதுடன் ஏனைய விசேட தினங்களுக்கான பூசைகளும், நாளாந்த பூசைகளும் தவராமல் நடாத்தப்பட்டு வரப்படுகின்றது. அதிவிசேட பூசைகளையும், விசேட பூசைகளையும் கமல பூசனம் சிவஸ்ரீ. மனோகரக் குருக்களும், ஆலயக் குரு பிரம்மஸ்ரீ பாபு சர்மா அவர்களும் இணைந்து நடாத்தி வருகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளாந்த பூசைகளை நேரம் தவறாது ஆலயக்குரு பிரம்மஸ்ரீ.வீ.பாபு சர்மா அவர்களால் நடாத்தப்பட்டு வரப்படுகின்றது. திருமணக் காரியங்களும் ஆலயத்தில் நடாத்தி வைக்கப்படுகின்றது.

கடந்த 15 வருடகாலத்துள் ஆலய பரிபாலன சபை ஆலயத்துக்குத் தேவையான மகாமண்டபம், மடப்பள்ளியறை, வாகனசாலை, குருவுக்கான இல்லம், அறநெறி பாடசாலை, நூல் விலையம், நன்னீர் வசதி, மலசல கூடங்கள், பிள்ளையார் ஆலயம், முருகன் ஆலயம், வசந்தமண்டபம், சுற்றுமதில்கள், வீதி வசதிகள், மின்சார வசதி, நவக்கிரகங்களும், அவற்றுக்கான மண்டபமும், மணிக்கோபுரம் ஆகியவற்றை செய்துள்ளதுடன், ஆலயத்தையும், அறநெறி பாடசாலையினையும் முறைப்படி இந்து கலாச்சார திணைக்களத்தில் பதிவு செய்து கொண்டுள்ளது. ஆலயத்துக்கான வங்கிக் கணக்கு களையும் செயற்படுத்தி வருகின்றது.

பிள்ளையாார் ஆலயத்தை திரு.பி. தர்மராஜா அவர்களும், முருகன் ஆலயத்தை திரு.சி.தனபாலசிங்கம் அவர்களும் அமைத்து அதற்கான விக்கிரகங்களை பிரஸ்டை செய்துள்ளனர். தண்ணீர் வசதிக்கான கொள்கலங்களை சிறிதானியா நிறுவனமும், லாவன்யா நகை மாளிகையும் அமைத்துத் தந்துள்ளனர். தற்போது ஜோதிவிலாஸ் நிறுவனத்தினரால் சந்தான கோபாலர் ஆலயம் அமைக்கப்பட்டுள்ளதுடன் அதுவும் 19.08.2011ம் திகதி ஆலயத்தின் மகா கும். பாபிசேகத் தினததன்று பிரதிஸ்டை செய்யப்படவுள்ளது. குறித்த அம்பாளது ஆலயத்தில் சிங்கவாகனம் ஒன்று உண்டு அதிக செலவில் திரு.பொ. விஜயகுமார் குடும்பத்தாரால் செய்வித்து வழங்கப்பட்டுள்ளது. அதற்கான ஆசனத்தை திரு.காந்தி அவர்கள் செய்து வழங்கியுள்ளார். ஆலயத்துக்கு அவசியமாகத் தேவைப்பட்ட ஒலிபெருக்கி உபகரணங்கள் கௌரியம்பாள் முன்னாள் அதிபர் திரு.விஜயகுமார் அவர்கள் தந்து உதவியுள்ளார். அவ்வாறே ஆலய மதிலின் ஒரு பகுதியை செல்வன். பஞ்சலிங்கம் பத்மராஜா அவர்களால் உதவி வழங்கி அமைக்கப்பட நாகதாழ்வு திரு.பா.கதிர்காமநாதன் அவர்களால் மின்சார மேளம் வழங்கி உதவப்பட்டது.

வேப்பமரத்தைத் தள விருட்சமாகக் கொண்டுள்ள அருள்மிகு அகிலாண்டேஸ்வரி அம்பாள் ஆலயம் மேலே விபரிக்கப்பட்டவாறு மிகக் குறுகிய காலத்துள் துரித வளர்ச்சி கண்டுள்ளமை அம்பாளின் அருளும், அவவின் துணையும் இருந்துள்ளமையை மறப்பதற்கில்லை. அதுமட்டுமல்ல யுத்தகால பயங்கர கெடுபிடிகளுக்கு மத்தியில் இப்பகுதி மக்களை அம்பாள்தான் காவல்தெய்வமாக இருந்து காத்து வந்துள்ளார் என்பது இப்பகுதி வாழ் மக்களது வலுத்த நம்பிக்கையாகும். எத்தனையோ அடியார்கள் தங்களது நோய் பிணிகளை அம்பாள் நீக்கி வருவதாயும், திரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணக்காரியங்கள், வெளிநாட்டுப் பயணங்கள் கைகூடுவதாயும் அடியார்கள் கூறக்கேட்டு வருகின்றோம். தினமும் ஆலயத்துக்கு வரும் வழிபாட்டாளர்களின் தொகை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதுடன் செவ்வாய், வெள்ளி, சனி ஆகிய நாட்களில் மிக அதிகமான அடியார்கள் ஆலயத்துக்கு வந்து போகின்றார்கள். ஆலயத்தின் வளர்ச்சிக்கு பொதுமக்களின் அதிகமான பங்களிப்பும், அவர்களது சலிப்பற்ற ஆதரவுகளும் குறைவின்றி இருந்து வருவது போற்றுதற்குரியதாகும். மேலும் இந்து கலாச்சார திணைக்களமும் நாடாளுமன்ற உறுப்பினர் களும், அமைச்சுகளும் தங்களது பேராதரவுகளை தந்துள்ளனர். இனியும் தருவார்களென எதிர்பார்க்கப்படுகின்றது. இவர்களுக்கெல்லாம் பரிபாலன சபையின் உளம் நிறைந்த நன்றிகள் உரித்தாகட்டும்.

இந்து கலாச்சார அமைச்சால் தரப்பட்ட நிதி உதவியின் மூலம் ஐம்பொன்னால் ஆன அம்மனது எழுந்தருளி விக்கிரகம் ஒன்று செய்விக்கப்பட்டு வழிபாட்டில் இருந்து வருகின்றது. அன்னை திருவிழாக்காலத்தில் சிங்க வாகனத்தில் உள்வீதி, நகர் வலம் ஆகியவற்றை செய்து வருகின்றார்.

ஆலயத்தின் முதலாவது புனராவர்த்தன கும்பாபிஷேகம் நடாத்தப்பட்டு 12 வருடங்கள் பூர்த்தியாகியுள்ளதைத் தொடர்ந்து ஆலயம் ஆகம விதிகளுக்கு அமைவாக அழகான முறையில் புனரமைக்கப்பட்டு அதன் மகாகும்பாபிசேகம் 19.08.2011 திகதியான இன்று நடாத்தப்படுகின்றது. ஆலயம் புனரமைக்கப்படவும் மகாகும்பாபிசேகம் செய்யப்படவும் மக்களது பேராதரவும் பெரும் உதவிகளும் நன்றி உணர்வுபூர்வமாக பாராட்டத்தக்கனவாக அமைந்துள்ளது.

வாழ்க அடியார்கள்

வளர்க அன்னையின் நாமம்

ஆலய பரிபாலன சபை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அகிலாண்டேஸ்வரி அரசாண்டருள் பதி

"பயிரவி, பஞ்சமி, பாசாங்குசை, பஞ்சபாணி, வஞ்சர்
உயிர் அவி உண்ணும் உயர் சண்டி, காளி, ஒளிரும் கலா
வயிரவி, மண்டலி, மாலினி, சூலி, வராகி - என்றே
செயிர் அவி நான் மறை சேர் திரு நாமங்கள் செப்புவரே"

லம், கம், யம், ரம், வம், ஸம் என்னும் பீஜங்களால் ப்ருதிவ்யாத் மிகாவை கந்தம்: ஆகாசாத் மிகாயை புஸ்பம்: வாய்வாத் மிகாயை தூபம், அக்னியாத் மிகாயை தீபம்: அம்ருதாத் மிகாயை அம்ருதம் என்றவாறு சமர்ப்பணம் செய்யவும் பூஜித்து வழிபடவும், தூபிதது வணங்கவும், தீப வழிபாடாற்றவும், உபசரிக்கவும் உகந்ததான லலிதாம்பிகை பல ரூப தேவியாக உள்ளாள். இவளை காஞ்சியில் காமாட்சியாகவும், குடந்தையில் மங்களாம்பிகையாகவும், நாகையில் நீலாயதாட்சியாகவும், காசியில் விசாலாட்சியாகவும், மதுரையில் மீனாட்சியாகவும் காண்பர். மேலும் திருவானைக்காவில் அகிலாண்ட நாயகியாகவும் உள்ளாள்.

முத்துமாரி, விசாலாட்சி, செம்பகவல்லி, அபிராமி, விருத்தாம் பிகை என்றெல்லாம் பேசப்பட்டு பல நாமம் பல ரூபம் பெற்றாளாகிலும் எல்லாம் ஒரே உமையேயாகும். அவளே அகிலாண்ட நாயகி, அவளே ஈஸ்வரி.

"அளவறு பிழைகள் பொறுத்தருள் நின்னை
அணியருப் பாதியில் வைத்தான்
தளர் பிழை மூன்றே பொறுப்பவள் தன்னைச்
சடைமுடி வைத்தனன் அதனால்,
பிளவியல் திங்கள் சூடிய பெருமான்
பித்தனென் றொரு பெயர் பெற்றான்
களமர் மொய் கழநி சூழ் திருவானைக்
காலகிலாண்ட நாயகியே"

-அகிலாண்ட நாயகி மாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவானைக்காவின் அகிலாண்ட நாயகி: ஈழத்தில் அகிலாண்ட ஈஸ்வரியாக எழுந்தருளி அருள்புரியும் மகிமையை மன்னாரில் காண முடிகிறது.

## ஆலய அமைவிடம்

சிவபூமி என்று திருமூலர் அழைத்த ஈழ நாட்டின் வடக்கே மன்னார் மாவட்டத்து திருக்கேதீச்சரத் தெய்வீகம் கமழும் தொலைவில் மன்னார்த் தீவில் இத்தலம் அமைந்துள்ளது. மன்னார் நகர மத்தியிருந்து மேற்குத் திசையில் மன்னார் தாழ்வுபாடு வீதி வழியாக சுமார் இரண்டு கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்துள்ள எழுத்தூர் என்ற கிராமத்தில் இத்தலம் அமைந்துள்ளது.

## பண்டைய வரலாறு

1977ஆம் ஆண்டு இக்கோயில் இன்று காணப்படும் பகுதியோடு சேர்ந்த இரண்டு ஏக்கர் நிலப்பகுதி; மல்லாகத்தைச் சேர்ந்த திரு.இராசரத்தினம் பாலஸ்கந்தவேல் என்பவரால் கொள்வனவு செய்யப்பட்டது. அடர்ந்த காட்டுப் பகுதியாயிருந்த பிரதேசத்தைத் தொழிலாளரின் உதவியோடு வெட்டித் துப்பரவாக்கிய போது அதன் தெற்கு எல்லையில் நின்ற சிறு வேம்பு ஒன்றின் கீழ் சிறிய சூலம் ஒன்று இருப்பதைக் கண்ணுற்றனர்.

வேப்ப மரத்தின் கீழ்ப்பகுதியில் காணப்பட்ட சூலத்தின் பழமையும் சிறப்பும் அவரைக் கவரவே அதனை வேற்காட்டு அம்மனாகக் கருதி செவ்வாய், வெள்ளி தினங்களில் விளக்கேற்றி வழிபட்டு வரலானார். காலப்போக்கில் அன்னை அகிலாண்ட ஈஸ்வரி என்று தன்னை பாலஸ்கந்தவேல் அவர்கள் கனவில் தோன்றி வெளிப் படுத்தினாள் என்பது ஐதிகம் அன்று முதல் இவ்வாலயம் அகிலாண்டேஸ்வரி ஆலயம் என அழைக்கப்படலாயிற்று.

## ஆரம்பகாலக் கட்டடம்

1977இல் சிறு ஓலைக்குடில் ஒன்றே ஆலயமாகக் காணப்பட்டது. பூசைகளும் அங்கேயே நடாத்தப்பட்டன. பின் 1981இல் திருமதி.கறுப்பையா கணேசம்மா அவர்களின் நன்கொடையால் கிடைத்த மூவாயிரம் ரூபாவைக் கொண்டு ஒரு கருவறை வேப்ப மரத்தின் கீழ் அமைக்கப்பட்டது. இதனுள் 36 சென்ரி மீற்றர் உயர விக்கிரகம் ஆதி மூலமாகப் பிரதிஸ்டை செய்யப்பட்டது. இது சண்முகவடிவேல் ஆசாரியாரால் வடிவமைக்கப்பட்டு சிவஸ்ரீ.மனோகரக் குருக்களால் பிரதிஸ்டை செய்யப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1995இல் ஆலய பரிபாலன சபை ஒன்று உருவாக்கப்பட்டது. இச்சபையின் முயற்சியால் கருவறைக்கு முன்னால் அர்த்த மண்டபமும், மகா மண்டபமும் அமைக்கப்பட்டன. 1998 கார்த்திகை இரண்டில் முதலாவது புனராவர்த்தன கும்பாபிசேகம் செய்யப்பட்டது.

## தல விருட்சம்

வேப்பமரம் ஒன்று இவ்வாலயத்தின் தல விருட்சமாக கருவறையோடு அமைந்துள்ளது. சக்தி விருட்சம் எனப்படும் வேம்பு இவ்வாலயத்தினை மேம்படுத்துகிறது.

## இன்றைய ஆலயம்

அருள்மிகு அகிலாண்டேஸ்வரி ஆலயம் அதன் முன் புறத்தில்ஆலய வீதியையும் பின் புறத்தில் அம்பாள் வீதியையும் கொண்டுள்ளது. பழைய ஆலயத்தின் அமைவிடத்திலேயே இது கம்பீரமாகக் காட்சியளிக்கிறது. மன்னார்– தாழ்வுபாடு வீதியில் எழுத்தூர் கிராமத்தில் பிரதான வீதியிலிருந்து வடக்கு நோக்கி வரும் அம்பாள் வீதியில் அல்லது ஆலய வீதியில் எதில் நுழைந்தாலும் நூறு மீற்றர் தொலைவில் அம்பாளைத் தரிசிக்கலாம்.



## வளாகம்


150அடி நீளமும் 95 அடி அகலமும் கொண்ட செவ்வகக் காணி ஒன்றில் இவ்வாலயம் அமைந்துள்ளது. நான்கு புறமும் சுவர் எழுப்பப்பட்டுள்ளது. பின் புறச்சுவர் 5 $^1/_2$ அடி உயரமானது. சுமார் 14250 சதுஅடி நிலமே அம்பாளின் இன்றைய கட்டுக்கோப்பு வளாகமாக உள்ளது.

இவ்வளாகத்தின் தென்புற மதிற் சுவர் வழியாகவேனும் வடபுற மதிற் சுவர் வழியாகவேனும் 20அடி அகல உள் வீதி அமைந்துள்ளது. இவ் அளவுப் பிரமாணம் சில இடங்களில் வேறுபடுகிறது. அதாவது தென்புற வீதியின் முன் புறமாக 10 அடி பிரதேசத்தை அகலத்தாலும் 20 அடியை நீளத்தாலும் கைக்கொண்டுள்ள வாகன சாலையும் மடப்பள்ளி அறையும் ஆக்கிரமித்துள்ளன. அதேபோல் மேற்குப்புற 15அடி வீதியை நிருதி திசை விநாயகர் கோயிலும் வாயு திசை சுப்பிரமணியரும் அவற்றின் நடுவே அமைந்த சந்தான கோபாலர் ஆலயமும் சற்று ஆக்கிரமித்துள்ளன. இதனால் வாயு திசையில் கோண வாக்கில் 3 அடிகளும் நிருதி மூலையில் 4 அடிகளும் குறைக்கின்றன. சந்தானகோபாலர் வருகையால் தல விருட்சத்திலிருந்து 10 அடி வீதியே உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விநாயகர் ஆலயத்தை அண்டி 5 அடி இடைவெளி விட்டு 15 அடி அகலத்திலும் 15 அடி நீளத்திலும் நந்தவனம் ஒன்று அமைக்கப் பட்டுள்ளது.

**வளாக விருட்சங்கள்**

வளாகத்தின் உள்ளே மேற்குத்திசையில் தலவிருட்சமான வேம்பும் வடக்கில் மூன்று தென்னை மரங்களும் 3 நித்திய கல்யாணியும், கிழக்குத் திசை இடப்புறம் இரு தென்னை மரமும் ஒரு தேமாவும், தெற்கே ஒரு தென்னையும் கரும்புக்கூட்டமும் நந்தவனத்தை அண்டி செழித்துள்ளன.

**வீதிகள்**

இவ்வாலயத்துக்கு முறையாக அமைந்த உள்வீதி ஒன்றும் வருங்காலத்தினை நோக்கிய தேரோடும் வீதியொன்றும் உள்ளன. முழுவதும் திறக்கப்படாத நிலையில் உள்ளது. அதைவிட உற்சவ காலத்திலும் சுவாமி வீதி உலாப்போகும் மூன்றாம் வீதி ஒன்றும் உள்ளது.

முதலாம் வீதி உட்புறமாக 20 அடி அகலத்திலும், இரண்டாம் வீதி 22 அடி அகலத்திலும் உள்ளன. 2ஆம் வீதி கோயிலின் வெளிப்புறமாக குருக்கள் இல்லத்தை ஊடறுத்து கல்யாண மண்டபத்தின் தெற்குப்புறமாக நகர்ந்து அம்பாள் வீதியால் செங்கோணமாக வளைந்து மீண்டும் முருகன் ஆலயத்தால் திரும்பி வசந்த மண்டபக்கரையோடு சுற்றி கிழக்கு வாசலால் வருகிறது. மூன்றாம் வீதி ஆலய கீழ்த்திசை மதிற்சுவரிலிருந்து ஆலயவீதிவரை செல்லும் 30 மீட்டர் கொங்கிறீட் பாதையால் சென்று அவ்வீதி வழியே தார் வீதியை அடைந்து அதிலிருந்து அம்பாள் வீதியால் நகர்ந்து மேலும் 100 மீற்றர் சென்று வடக்கே 150 மீற்றர் சென்று கீழ்த்திசை வீதி வழியே 80 மீற்றர் பயணித்து முகப்பை அடைகிறது.

**மூர்த்தி**

இவ்வாலயத்தின் கருவறையில் எழுந்தருளியுள்ள மூர்த்தி பெயர் அகிலாண்டேஸ்வரி. இதன் தல விருட்சமான வேம்பின் கீழே புராதன சூலங்கள் இரண்டு உள்ளன. நேர்த்தி வைக்கும் அடியார்கள் துணியில் நாணயத்தை முடிந்து சூலத்தில் கட்டிச்செல்வர். பின் காரிய சித்தியானதும் நேர்த்திகளைப் பூர்த்தி செய்வதும் இங்கு நடைபெறு கின்றன. பேரருட்கடலான மூலமூர்த்தி பீடத்துடன் சேர்த்து 36 சென்ரி மீட்டர் உயரமானது. பீடம் 4 சென்ரிமீட்டர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தலச்சிறப்பு

நெய்தல் நிலத்தின் பரப்பையும், மருத நிலத்தின் பகுதியையும் ஒருங்கே கொண்ட இடத்தில் இவ்வாலயம் அமைந்துள்ளது. புராதன காலத்திலும் இப்பிரதேசம் கல்விச் சிறப்புப் பெற்றிருந்ததாகக் கூறப் படுகிறது. இதனால் இவ்வாலய வீதியை அச்சக வீதி (Printers Street) என்றும் தலத்தை எழுத்தூர் என்றும் அழைப்பர்.

## தீர்த்தம்

இவ்வாலயத்தில் மூன்று தீர்த்தக் கிணறுகள் உள்ளன. ஒன்று அந்தரான மண்டபத்தின் வடமுனையில் 4 அடி விட்டத்திலும் 12 அடி ஆழத்திலும் அமைந்துள்ளது. இக்கிணறு கருவறை மற்றும் பரிவார தெங்வங்களின் பூஜைகட்கான நீர் எடுக்கப்பயன்படுகிறது.

இக்கோயிலுக்கென அமைக்கப்பட்ட ஆரம்பகாலக் கிணறு ஒன்று முருகன் ஆலயத்தின் வடதிசையில் வடக்கு மதிலை மையமாகக் கொண்டு 6 அடி விட்டத்தில் பாதி வெளியேயும் பாதி உள்ளுமாக அமைந்துள்ளது. 14 அடி ஆழமான இக்கிணறு இன்று பாவிக்கப்படாமல் கைவிடப்பட்டுள்ளது.

ஆலயத்தின் முன்வாசலில் பைரவர் சந்நிதானத்திற்கு நேரெதிரே கிழக்குப் புறமாக 15 மீற்றர் தொலைவில் ஒரு கிணறு இரண்டாம் வீதிக்கும் மூன்றாம் வீதிக்கும் இடைப்பட்ட பகுதியில் அமைந்துள்ளது. கிணறாகத் தோண்டி பின் குளாய் இடிக்கப்பட்ட இக்கிணற்றுக்கு ஐங்கோண வடிவில் தொப்பி கட்டப்பட்டுள்ளது. அடியவர் கைகால் அலம்ப இது பயன்படுத்தப்படுகின்றது.

## கருவறை


இவ்வாலயத்தின் புதிய கருவறை தல விருட்சத்தின் 5 அடி முன் நோக்கிய இடைவெளியில் வெளிப்புறச் சுவரைக் கொண்டமைக்கப் பட்டுள்ளது. வெளிப்புற அடித்தளம் 12 அடி 3 அங்குல அகலமும் 1 அடி உயரமுமாக பிரதம தள வரியைக் கொண்டுள்ளது. உபானவரி அதையடுத்து 6 அங்குல உயரத்திலும் 11 ½ அடி நீளத்திலும், கண்டவரி அதைவிட ½ அடி குறைந்து, 1 ½ அடி உயரத்திலும், பண்டிகை வரி, உபானவரியின் அளவுப் பிரமாணத்திலும், கனதிவரி அரையடி உயரத்திலும், 11 அடி நீளத்திலும், அதிஸ்டானவரி 10 அடி 3 அங்குல நீளத்திலும், 1 அடி 4 அங்குல உயரத்திலும், வேதிகைவரி 4 அங்குல உயரத்தில் 10 அடி நீளத்திலும் அமைந்துள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருவறைப்பீடமான நிலத்தின் கீழ் 5½ அடி ஆழத்தில் கருங்கல் கொங்கிறீட் கலவையாலும் நிலமட்டத்திற்கு மேல் 5 அடி தள கலவையாலும் நிரப்பப்பட்டு கருவறை உயர்த்தப்பட்டுள்ளது.

இத்தூபியானது பீடத்திலிருந்து உத்தரமட்டம் வரை 8 அடி 3 அங்குலத்தையும், உத்தர மட்டத்திலிருந்து சிகர அந்தம் வரை 16 அடி 6 அங்குல உயரத்தையும் கொண்டுள்ளது. ஆகமொத்தம் 29 அடி 9 அங்குலம் உயரமுடையது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூபியின் நாற்புறமும் அம்மனின் வடிவங்களான வைஸ்ணவி, பிரம்மஶ்ரீ.அகிலாண்டேஸ்வரி திருவுருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. வடக்கே நான்கு முகங்களுடன் அன்னப்பறவை மீது பிராம்மியும், தெற்கே கழுகு வாகனத்தில் வைஸ்ணவியும், கிழக்கும் மேற்கும் அகிலாண்டேஸ்வரியும் காட்சி தருகின்றனர்.

மூலஸ்தானம் உட்புறம் 7 அடி 2 அங்குல அகலமும் 7 அடி 4 அங்குல நீளமுமான தளப்பகுதியைக் கொண்டுள்ளது. இத்தளம் 49.8 சதுர அடிப்பரப்பானது. பீடத்திலிருந்து ஒடுங்கிய ஸ்தூபியின் கலசதளம் வரை 24 அடி 9 அங்குல உயரம். பீடத்தின் வடக்கே 1 அடி 7 அங்குல பிரமாண கோமுகி துவார ஒதுக்கு உள்ளது.

கருவறை 20 தளங்களாக்கப்பட்டு ஒவ்வொன்றும் 2.4 சதுர அடிப்பரப்புளாக்கப்பட்டு பின் புற சுவர்ப்பகுதியுடன் கூடிய பதம் விலக்கப்பட்டுள்ளது. காரணம் இந்தப்பதம் பூதபிசாசு வாசஸ்த் தத்துக்குரிய தென்று தெய்வ பிரதிஸ்டா செய்யப்படவில்லை. அதுபோல் முன்னே 11ம், 12ம், 13ம், 14ம், 15ம் பதங்களும் விலக்கப்பட்டுள்ளன. இரண்டாவது பதத்திலிருந்து சுவாமி இருப்புகளுக்கு ஒதுக்கப் பட்டுள்ளன.


## தூபி புருஷ ரூபம்

ஆலயம் புருஷரூபம் என்பது போல தூபியும் புருஷ ரூபமே ஆலயம் தலையில் கையை ஊன்றி உடலை சற்றே சரித்து சயன தோரணையிலான புருஷ அமைப்பையும், தூபி நின்ற நிலையிலான புருஷ அமைப்பையும் கொண்டுள்ளன. அதன்படி கால் உபபீடம், முழங்கால்- அதிஸ்டானம், நாபி- கும்ப பஞ்சரம், கைகள்- படவர்க்கம், தோள்- பிரஸ்தரம், கழுத்து - களத்தி , முகம்- சிகரம், முடி- தூபி என்னும் இவ் எட்டு நிலையையும் கொண்டு அகிலாண்டேஸ்வரியின் தூபி ஆகமப்பாடு டையதாகிறது.

இவ்வாலய தூபி 1ம் கர்ணகூடு, பிரஸ்தரம், கௌம் சிகரம், கலசம் எனும் பகுதிகளையுடையது. இவைமொத்த அளவில் முறையே பின்வருமாறு அளவுகளாய் பகுக்கப்படுகின்றன. 5/16, 2/16, 3/16, 4/16, 2/16 இவ்வளவு பிரமாணங்களை கீழுள்ள கோட்டுப்படத்தில் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**அர்த்த மண்டபம்**

*16 அடி 3 அங்குல நீளமும் 16 அடி அகலமும் 256.5 சதுர அடி தளத்தையும் கொண்ட மண்டபம் இது 4 அடி 5 அங்குல அகல தெற்கு வாசல் உடையது. வாசலின் நேரெதிரே தெற்கு நோக்கி வடதிசைத் தூபியின் கீழ் தேவி மூர்த்திக்கான கர்ப்பக்கிரகம் அமைக்கப்பட்டுள்ளது. இது 5 அடி 10 அங்குல நீளமும் 4 அடி 7 அங்குல அகலத்தையும் 239.7 சதுர அடி தளத்தையும் கொண்டது.*

*அர்த்த மண்டபத்தின் உள்ளே கருவறையின் வெளியே உள்ள உச்சிக்கம்பு பீடத்தில் இரு துவார பாலகர் வடிவமைக்கப்பட்டுள்ளனர். இடப்புறம் உள்ளது நந்தி என்றும், வலப்புறம் உள்ளது மகாகாளர் என்றும் கூறப்படுகின்றன. எனினும் இவை பெண் காவலர்களே.*

*நந்தி தன் வலதுகாலை பீடத்தில் ஊன்றி நின்றவாறு இடதுகாலை மடித்து வலது காலிற்கு அப்பால் நுனிக்கால் மட்டும் பீடத்தைத் தொடுமாறு வைத்துக்கொண்டு நிற்கின்றார். மகாகாளர் அதற்கு எதிர்மாறாக நிற்கிறார். நந்தியின் இடது கரத்தில் தண்டியும், மகாகாளர் வலது கரத்தில் கதையும் உள்ளன. நந்தியின் முன்புற வலது கரம் சுட்டு விரலை மட்டும் நீட்டி மற்றைய விரல்களை மடித்துக் காணப்படுகிறது. இது உள்ள பொருள் ஒன்றே என்ற தத்துவத்தை உணர்த்துகிறது. மகாகாளர் வலது கரம் ஏதுமற்ற புறங்கையைக் காட்டி உட்திரும்பி உள்ளது. அது இதைத் தவிர வேறெதுவுமில்லை என்னும் தத்துவப் பொருளுடையது.*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகா மண்டபம்

அர்த்தம் மண்டபத்தை அடுத்து முன்புறமாக விரிந்த நிலையில் இம்மண்டபம் உள்ளது. இம்மண்டபத்தின் பின் சுவரோடு கூடி இரு கோயில்கள் அர்த்தமண்டப வாயிலின் இடமும் வலமுமாக அமைந்துள்ளன. இடப்புறம் கேதாரேஸ்வரரும் , வலப்புறம் கேதார கௌரியம்பாளும் உள்ளனர்.

மகா மண்டப முடிவில் இரு புறமும் பாதபெந்தபீடமும் நடுவை நோக்கி இரு பாதவர்க்க தூண்களும் உள்ளன. இத்தூண்கள் சித்திரவேலைப்பாடற்ற சதுர வடிவினதாக அமைந்துள்ளன.

பாதபெந்த பீடமானது உபானம், பத்மம், ஜெகதி , குமுதகம, கம்பு, கண்டம், கம்பு, பட்டியல், கம்பு என்னும் ஒன்பது பகுதிகளாலானது. இவ் ஒன்பது பகுதிகளும் செவ்வகச் சுவரோடு இணைக்கப்பட்டுள்ளன.

மகா மண்டபத்தின் முன்புறத்தில் 5 அடி ஆரையுள்ள வளைவு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இவ்வளையின் மேற்பதத்தில் 20 தாமரை இதழ்கள் பதிக்கப்பட்டுள்ளன. அவற்றின் நடுவே அழகிய கபோதம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

வளைவின் கீழே தள பீடத்தில் அன்னை அகிலாண்டேஸ்வரி தன்பின் இரு கரங்களிலும் தாமரை மலர்களைப் பிடித்தவாறு நின்ற நிலையிலுள்ளார். சுவாமியின் இருபுறமும் சேடியர் இருவர் சாமரை வீதகின்றனர். இவர்கள் தமது மறுகரத்தை மடக்கி இடுப்பை சற்று சரித்து, முறையே தம் வலது இடது தொடைகளில் தம் கைகளை ஊன்றியுள்ளனர்.

## பரிவார தெய்வங்கள்

திருக்கோயில் கிழக்கு வாசலில் கருவறையை நோக்கியவாறு நந்தி ஒன்று அமர்ந்துள்ள நிலையில் அமைக்கப்பட்டுள்ளது. இவரின் பின்னால் பலிபீடம் உள்ளது. நந்தியின் அனுமதி பெற்றே கோயிலினுள் நுழைய வேண்டும்.

அடுத்து முகப்பு வாயிலுக்கு அருகே உட்புறத்தில் காவலனாக இறைவி சந்நிதியை நோக்கியவாறு பைவரவர் கோயில் உள்ளது. இங்கு உள்ளது வடுக வைபரவர் என்பதாகும்.

கருவறையில் இறைவியின் வலப்புறமாக சிவனையும், கருவறைக்கு வெளியே அதன் நிருதி திசையில் கணபதியையும் வாயு திசையில் கந்தனையையும் பரிவார தெய்வங்களாகப் பிரதிஸ்டித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துள்ளனர். கந்தனுக்கும் விநாயகருக்கும் இடையில் சந்தான கோபாலர் கோயிலும் அமைந்துள்ளது.

ஆலயத்தின் ஈசானத்தில் நவக்கிரக கோயில் அமைந்துள்ளது. நவக்கிரகங்களில் சூரியன், சுக்கிரன், புதன் கிழக்கையும், செவ்வாய், ராகு, கேது தெற்கையும், சனி, சந்திரன் மேற்கையும், வியாழன் வடக்கையும் பார்த்தவாறு உள்ளன. நவக்கிரகங்களும் பரிவார தெய்வங்களே ஆகும்.

## பூசைகளும் விழாக்களும்

இக்கோயிலில் தினசரி இரண்டு காலப்பூசை நடைபெறுகிறது. சூரியன் உதித்து 7½ நாளிகைக்குள் காலைப்பூசையும், சூரியன் அஸ்தமன 3½ நாளிகைக்குள் சாயங்காலபூசையும் நடைபெறுகிறது.

கார்த்திகை மாதத்தில் மணவாளக்கோலவிழா நடைபெறுகிறது.

கௌரிவிரதம், கந்தசஷ்டி விரதம், நவராத்திரி விரதம், வரலட்சுமி விரதம், பிள்ளையார் கதை, திருவெம்பாவை, வருடப்பிறப்பு காலங்களில் விசேட பூசை வழிபாடுகள் செய்யப்படுகின்றன.

## தினப்பலி

இவ்வாலயத்தில் தினமும் அன்னப்பிரசாதம் மூலம் திருப்பலி செய்யப்படுகிறது. "நமஹ" என்றும் "ஸ்வாகா" என்றும் மந்திரத்தை உச்சரித்து மயில்முட்டைப் பிரகாரம் அன்னப்படையல் செய்வதால் இப்பலி உத்தமப்பலி எனப்படுகிறது. (எலுமிச்சம்பழ பிரகார படையல் மத்திமப்பலி என்றும், நெல்லிக்காய் பிரகாரம் செய்வது அதமப்பலி என்றும் கூறப்படும்.

அன்னை அகிலாண்டேஸ்வரி தன் ஆட்சிக்கரங்களை எழுத்தூரையும், மன்னாரையும் மட்டுமன்றி ஈழத்தையும் ஆட்சி செய்து அருள் சுரக்கின்றாள். அவளின் ஆட்சி மகிமை பூவுலகெங்கும் பரந்து மணம் பரப்ப எல்லாம் வல்ல அன்னை அடிகளில் இறைஞ்சுவோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உசாத்துணை நூல்கள்

01. கைலாசநாதக்குருக்கள், கா. (1992) சைவத்திருக்கோவில் கிரியை நெறி. ஸ்ரீ முத்துவிநாயகர் கோயில், கொழும்பு.

02. நடராஜதாசன், (1984) சித்தியருளும் சக்தி வழிபாடு, நர்மதா பதிப்பகம், சென்னை.

03. சோமஸ்கந்தகுருஜி, (2006) ஆகமச் சித்திரங்கள் - பாகம்- 3 மொன்றியல் துர்க்கை அம்மன் கோயில்

04. கோபாலகிருஷ்ண ஐயர், ப (1995) இந்துப்பண்பாட்டு மரபுகள் யாழ்ப்பாண பல்கலைக்கழகம்.

05. மோகநாதன், செ. (2003) சைவசித்தாந்த மரபில் மனித மேம்பாட்டுச் சிந்தனைகள் இந்துநாகரிகத்துறை, யாழ்பல்கலைக்கழகம்.

ஆய்வாளர்

செ.மோகநாதன் M.Phil, M.Ed
வலயக்கல்விப்பணிமனை,
மன்னார்.

### அர்ச்சனைத் தட்டு எதற்காக?

கோயிலுக்கு அர்ச்சனைத் தட்டு கொண்டு போகும் போது நேரே அர்ச்சகர் வாங்குகிறார். கத்தியால் தேங்காயை உடைக்கிறார். உடைத்ததையும், பழம் முதலியவைகளையும் சுவாமிக்கு நைவேத்தியம் செய்கிறார், கர்ப்பூரத்தை ஏற்றிச் சுவாமிக்கு முன் பிடித்து நம்மைத் தரிசிக்கும்படி செய்கிறார்.

அருச்சகர்- ஞானகுரு, கத்தி- திருவருட் சக்தி, கருப்பூரம்- ஞானம், மூர்த்தி- சிவம், தேங்காய்- ஆணவம், பழம் முதலிய மற்றவைகள்- கன்ம, மாயா மலங்கள், எனவே, ஞானாசாரியருடைய ஞானோபதேசத்தினால் திருவருட் சக்தி தோன்றி ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களை அழித்து,அவைகளை அர்ப்பணம் செய்ய சிவஞானம் தோன்றும். அந்த ஞானப் பிரகாசத்தினாலேயே சிவத்தை தரிசிக்க வேண்டும். இவ்வாறு இவற்றின் பொருள்களைக் கூறுகின்றனர்.

பழங்கள்: தட்டில் கொண்டுபோன பழங்கள் நறுஞ்சுவைகள் உடையன. அவை பக்தனுடைய நல்வினைப் பயன்களைக் குறிப்பன. அவ்வினைகளையும் இறைவனிடம் சமர்பிக்க வேண்டும் என்பதாம்.

வெற்றிலை, பாக்கு, முகவாசம்: இவை ஆன்மாவைப் பொருந்திய இராசதம், தாமதம், சாத்விகம் என்னும் முக்குணங்களைக் குறிப்பன. இக்குணங்களை விட வேண்டும் என்பதாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அன்னையின் அற்புதத்தை வியந்து நிற்கின்றேன்

நல்லை நகர் ஆறுமுகநாவலரை நமக்களித்த யாழ்ப்பாண மண்ணிலே சைவசமய பாரம்பரியங்களுக்கும், கலாச்சார விழுமியங் களுக்கும் ஓர் எடுத்துக்காட்டாக மிகவும் குறுகிய காலத்திலே கீர்த்திபெற்று எழுந்து வரலாறு படைத்த பெருமை தெல்லிப்பளை துர்க்கை அம்மன் ஆலயதத்திற்கேயுரியது. "துர்க்காதுரந்தரி" யினதும் அவருக்குத் துணை நின்ற சைவச் சான்றோர்களினதும் கடின உழைப்புக்குச் சான்றாக அவ்வாலயம் விளங்குகின்றது.

அதேபோன்று "மாந்தையிலே மறைந்துள்ள தேன் பொந்து" என நாவலர் பெருமானால் அன்று அடையாளம் காட்டப்பட்ட அருள்மிகு திருக்கேதீச்சரத் திருத்தலத்தைத் தன்னகத்தே கொண்ட தனால் சைவப்பேருலகிலேயே மாட்சிமை பெற்று விளங்கும் மன்னார் மாவட்டத்திலே, எழுத்தூர்க் கிராமத்தில் எழுந்த இந்த "அருள்மிகு அகிலாண்டேஸ்வரி அம்பாள் ஆலயம்" மிகமிகக் குறுகிய காலத்திலேயே புதுமை மிக்க ஆலயமாக பக்தர்களின் நம்பிக்கைக்குரிய ஆலயமாக சைவ சமயத்தவர்களால் மட்டுமல்ல பிற சமயத்தைச் சார்ந்தவர்களினாலும் கூட மதிக்கப்படும் நிலைக்கு உயர்ந்து நிற்பது அம்பாளின் அற்புதங்களில் ஒன்று என்றே எனக்குத் தோன்றுகின்றது.

பதினைந்து பதினாறு ஆண்டுகளுக்கு முன்பு அன்னையின் ஆலயம் இருந்த தோற்றம் இன்னும் என் மனக்கண் முன் நிழலாடுகின்றது. ஆலயத்திருப்பணிகளை முன்னெடுப்பதற்காக அதிஸ்டலாபச் சீட்டு மூலம் நிதி திரட்ட அன்னையின் தலவிருட்ச நிழலின் கீழ் அமர்ந்து அதிஸ்டசாலிகளை அன்றைய நிர்வாகிகளும் நானும் தேர்ந்தெடுத்த காட்சி இப்போதும் என் கண்களுக்குத் தெரிகின்றது.

அந்த நிலையிலே இருந்த இந்த ஆலயம் இன்றைக்கு பல லட்சம் ரூபாய்களைச் செலவிட்டு குடமுழுக்கு வைபவத்தை நடாத்தும் அளவுக்கு தலைநிமிர்ந்து நிற்கின்றது என்றால் இந்த அற்புதத்தின் பின்னால் அன்னையின் அருளும், மெய்வருத்தம் பாராது கருமமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணாக இப் பணிக்கெனத் தமது கடின உழைப்பினைக் காணிக்கை ஆக்கிய ஆலய நிர்வாகிகளினதும் அர்ப்பணிப்பும், மனவளமும் தான் காரணம் என்ற செய்தியினை வரலாற்று ஆவணமான இந்த மலரிலே பதிவு செய்து கொள்வது எனது தவிர்க்கமுடியாத கடமையென நான் கருதுகின்றேன்.

இராமருக்கு சேது அணை அமைக்க உதவிய சிறு அணில் போல, இந்த ஆலயச் செயற்பாடுகளிலே பொதுவாக கடந்த பல ஆண்டுகளாகவும் குறிப்பாக இந்த ஆலய நிர்வாக சபையின் காப்பாளர்களில் ஒருவராக கடந்த ஆறு வருடங்களாகவும் என்னால் முடிந்த பங்களிப்பினை வழங்க எனக்கு அருளிய அன்னையின் பேரருளுக்குத் தலை வணங்கி இப்பணியில் பங்களிப்புச் செய்த அனைவரையும் குறிப்பாக இளைஞர்களுக்குரிய துடிப்புடன் செயற்பட்ட எமது இரு "பெரியவர்களையும் எண்ணிய எண்ணியாங்கு எய்திடும் செயல் வீரர்களான என் இனிய இளந் தலைமுறையினரையும் உள்ளடங்கிய இன்றைய நிர்வாகத்தையும் பாராட்டி இந்தக் குடமுழுக்கு விழாவிலே கலந்து கொண்ட பாக்கியசாலிகளான அனைத்து மெய்யடியார்களுக்கும் அம்பாளின் திருவருள் பாலிப்பதாக எனப் பிரார்த்தித்து நிறைவு செய்கின்றேன்.

வே.பொ.மாணிக்கவாசகர்
காப்பாளர்
ஆலய பரிபாலனசபை
அருள்மிகு அகிலாண்டேஸ்வரி அம்பாள் ஆலயம்,
எழுத்தூர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அடர்ந்த காட்டின் மத்தியிலிருந்து வெளிப்பட்ட அகிலாண்டேஸ்வரி

மன்னார் எழுத்தூர் அம்பாள் வீதியில் எழுந்தருளியுள்ள அகிலாண்டேஸ்வரி அம்பாளது புனராவர்த்தன அஸ்டபந்தன நவகுண்ட பட்ச கும்பாபிசேகம் நிகழும் கர வருடம் ஆவணிதிங்கள் பஞ்சமி திதியும் அமிர்த யோகமும் அச்சுவினி நட்சத்திரமும் கூடிய வெள்ளிக்கிழமை காலை நடைபெறவுள்ளது. மன்னார் மாவட்டத்தில் வரலாற்றுப் பெருமையும் புகழும் கொண்ட திருக்கேதீஸ்வரத்துடன் மேலும் 116 சைவ ஆலயங்கள் உள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இவற்றுள் எழுத்தூர் அகிலாண்டேஸ்வரி அம்பாள் ஆலயமும் அடங்கும். இது மன்னார் நகரிலும் அதை அண்மித்த கிராமங்களிலும் வாழும் இந்துக்களின் நம்பிக்கைக்கும், பக்திக்குமுரிய வழிபாட்டுத் தலங்களில் ஒன்றாக விளங்கி வருகின்றன.

இவ்வாலயமானது மன்னார் தாழ்வுபாடு வீதியில் மன்னார் நகரில் இருந்து ஒன்றரை கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள எழுத்தூர் என்னும் இடத்தில் அமைந்துள்ளது. ஆலயம் புராதனமானது. ஆகினும் அதன் அண்மைக்கால வரலாறு ஏறத்தாழ 25 வருடங்களுக்கு முன்பிருந்தே ஆரம்பித்ததாக உள்ளது. இக்காலப் பகுதியில் இப் பிரதேசம் காடுகள் அடர்ந்த பகுதியாகக் காணப்பட்டது. அக்காட்டுப் பகுதியில் திரு.வலத்தி சந்தியாப்பிள்ளை என்பவருக்கு சொந்தமாயிருந்த காணியில் சுமார் இரண்டேக்கர் வரையான காணியை மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் மன்னாரை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த திரு.இராசரெட்ணம்பிள்ளை பாலஸ்கந்தவேல் அவர்கள் கொள்வனவு செய்து காட்டை வெட்டிய வேளை காணியின் தெற்கு எல்லைக்கு அணித்தாக வேப்பமரமொன்றின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட திரி சூலமொன்றைக் கண்ணுற்றுள்ளனர். அன்றிருந்தே அவ்விடம் ஆலய வழிபாட்டுக்குரிய இடமாக மாறலாயிற்று. வேப்பமரத்தின் கீழ் திரி சூலம் காணப்பட்டதால் அது அம்மனுடைய குறியீடாகக் கருதப்படலாயிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆம் அதுதான் இன்று அருள்மிகு அகிலாண்டேஸ்வரி அம்பாளுடைய ஆலயமாக தோற்றம் பெறலாயிற்று.

அருள்மிகு அகிலாண்டேஸ்வரி அம்பாளின் ஆலயம் பக்தர்களை புளங்காகிதமுறப் பண்ணும் பக்திமயமான ஆலயமாக உள்ளதுடன் அதன் அற்புதங்கள் நம்பிக்கைக்குரிய செவிவழித் தகவல்களாக ஏராளமாகக் கிடைக்கின்றது. அம்பாளுடைய ஆரம்பகால கட்டிடத்துக்கு எழுத்தூரைச் சேர்ந்த திருமதி.கணேசம்மா கறுப்பையா அவர்கள் வழங்கிய ரூபா 3000/= ஆரம்பகால நிதியுதவிகூட அம்பாளின் அருட்செயற்பாடொன்றின் அடிப்படையிலேயாகும். காலப்போக்கில் ஆலயத்துக்குக் கிட்டவாக இருந்த காடுகள் அழிக்கப்பட்டு அங்கு அரசால் பெரியகமம் குடியேற்றத்திட்டம் உருவாக்கப்பட்டது. இதனால் மக்கள் அடர்தியாக வாழக்கூடிய நிலை உருவாகியது. நாளாந்தம் அம்பாளுடைய அருட்கடாச்சியமும் புகழும் பரவலாயின. ஆரம்பத்தில் திரு.பாலஸ்கந்தவேல் அவர்களால் செய்யப்பட்டு வந்த மரபுரீதியான பூசைகள் பின்னர் சிவஸ்ரீ.ஆரணன் சர்மா அவர்களால் மேற்கொள்ளப் படலாயிற்று.

1995ம் ஆண்டளவில் ஆலயபரிபாலன சபை உருவாகியது. ஆலயத்துக்குத் தேவையான பல முற்போக்குடைய நடவடிக்கைகளை அது எடுத்து செயலாக்கியுள்ளது. காலப்போக்கில் அப்பரிபாலன சபையில் போசகர்களில் ஒருவராக அடியேனும் உள்வாங்கப்பட்டு ஆலயத்துடன் நெருக்கமாக தொடர்புபட வேண்டி ஏற்பட்டது. திரு.பாலஸ்கந்தவேல் அவர்களுடன் திரு.வெ.பெருமாள் அவர்களது உழைப்பும் மற்றும் மக்களது ஒத்துழைப்பும் இவ்வாலய ஆரம்பகால நிர்மான பணிகள் நிறைவு பெற்று 1998ம் ஆண்டு கார்த்திகைத் திங்கள் 02நாள் தனது நூதானப் பிரதிஸ்டா மகாகும்பாபிசேக பெருஞ்சாந்தி விழாவைக் கண்டுள்ளது. குறித்த விழாவை சிவஸ்ரீ.மனோகர சர்மா அவர்களால் நடாத்தி வைக்கப்பட்டுள்ளது.

பின்னர் எழுத்தூர் திரு.திருநாவுக்கரசு செல்வநாதன் அவர்களது உபயமாக வைரவர் பிரதிஸ்டை நிறைவேற்றப்பட்டு ஆலயத்துக்கு மணியொன்றும் உபயமாக வழங்கப்பட்டுள்ளது. ஆலயம் வளர்ந்து வியாபிக்க திரு.இ.பாலஸ்கந்தவேல் அவர்களால் வழங்கப்பட்ட காணியுடன் நல்ல உள்ளம் கொண்ட வேற்று மத அன்பர்களும் தங்களது காணியில் குறிப்பிடத்தக்க அளவிலான காணிகளை சாசனம் பண்ணி உதவியுள்ளார்கள். அவர்களது உதவிகளுக்கு ஆலய பரிபாலன சபையின் நன்றியறிதல் என்று உரித்தானதாக இருக்கும். பனை தென்னைவள கூட்டுறவு சங்கத்துக்கு சொந்தமான 2 பரப்பளவு காணியை ஆலயபரிபாலன சபை ஆலயத்தின் நலன்கருதி கொள்வனவு செய்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டுள்ளதுடன் குறித்த சங்கத்திற்கு அதன் பயன் பாட்டுக்கான வேறு ஒரு காணியை வாங்கிக் கொடுத்துள்ளது.

தற்போதைய நிலையில் ஆலயம் ஆகம விதிகளுக்கமைவாக புனரமைப்பு செய்யப்பட்டு புதுப் பொலிவுடன் காட்சி தருவதோடு அது தளவிருட்சமாகிய வேப்பமரத்தின் கீழ் துவிதள விமானத்துடனும், மூலஸ்த்தானம், அர்த்தமண்டபம், மகாமண்டபம், நிருத்த மண்டபம், ரிசபம், பலிபீடம் மற்றும் விநாயகர், வள்ளி தேவசேனா சமேத சுப்பிரமணியர்,சந்தான கோபாலர், வைரவர், நவக்கிரகங்கள், வசந்த மண்டபம், மணிக்கோபுரம் என்பவற்றுடன் பக்திமயமான சூழலில் அமைந்துள்ளது. ஆலயத்தை அடுத்து அகிலாண்டேஸ்வரி அம்பாள் அறநெறி பாடசாலையும், ஆலயக் குருக்களுக்கான விடுதியும், மடப்பள்ளியறை, வாகனசாலை ஆகியனவும் அமைந்துள்ளது. 2002ம் ஆண்டில் இருந்து யாழ்ப்பாணம் நீர்வேலியைப் பூர்வீகமாகக் கொண்ட சிவஸ்ரீ.வீரசிங்கக் குருக்கள் பாபு சர்மா அவர்களால் நியமம் தவறாது ஆகம முறைப்படி நித்தியநைமித்திய கிரியைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த ஆலயதத்தின் தோற்றம் வளர்ச்சி, எளிமை, பெருமை முதலான அனைத்துக்கும் தோன்றித் துணையாக உள்நின்று இயக்கும் அகிலாண்டேஸ்வரி அம்பாளின் அருள்கடாட்சமும், கருணையும் காரணமான விடயங்களாகும். அதேவேளை இவ்வாலய முன்னேற்றத் திற்கு நிர்வாகக் குழுவினரது கூட்டு ஒத்துழைப்பும், அயராத முயற்சியும் காரணமாக அமைந்துள்ளது. தொடர்ந்தும் இந்நிலை நீடித்து நிலைபெற வாழ்த்தி அம்பாளின் பாதார விந்தங்களை பணிந்து நிற்கின்றேன்.

இங்ஙனம்
வை.செல்வரத்தினம்
போசகர்
அருள்மிகு.அகிலாண்டேஸ்வரி அம்பாள் ஆலய பரிபாலன சபை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எழுத்தூர் ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி அம்பாள் திருஊஞ்சல் பாமாலை

## காப்பு

தமிழ் அமுதப்பாற் கடலில் திரளும் வெண்ணை
தரும் அரிய கவி மணிகள் தேவி தன்னின்
அருள் பெருகு ஊஞ்சல் பா அடியேன் நாவில்
அமுதமென ஊறி வர அழகும் ஒளியும்
வரவேண்டி இளம் களிறு விக்னம் நீக்கி
வரமருள வேண்டுமென வேண்டிக் கெஞ்சி
அருள் பெருகு எழுத்தூரின் அழகுத்தேவி
அகிலாண்ட ஈஸ்வரியின் ஊஞ்சல் காப்பதாமே.

கற்கண்டுச் சுவை கொண்டு ஊஞ்சல் பாவை
கலயத்தில் எடுத்திங்கு கொட்டித்தீர்க்கும்
சொற்கொண்டு சுந்தரத்தேன் தமிழைக்கொண்டு
சோடித்து அமுதமெனச் சுவைக்கும் உம்பர்
நக்குண்ட பூஜை பாற்கடலின் பாங்கில்
நகக்குண்ட படியின்றிப் படியின் மேலாய்
மிக் கொண்டு மிடுக்கோடு ஊஞ்சல் பாவை
முழங்கிட வி நாயகனே காப்புத்தாமே

## நூல்

வேப்பமர நிழலினிலே வெம்மை நீங்கி
விரும்பியுறை வேப்பிலையின் தேவி இங்கு
யாப்பரிய பீடத்தை யாத்து உவந்து
யாபேரும் அருள் பெறவே என்று தந்து
காப்பெனவே காண்கின்ற ஊஞ்சல் தன்னில்
கவலையெல்லாம் போக்கியருள் செய்துநின்று
எப்போதும் அருள் பொழியும் எழுத்தூர் தேவி
அகிலாண்ட ஈஸ்வரியே ஆடீர் ஊஞ்சல். 01



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரிக் முதல் நால் வேதங்கள் ஊஞ்சல் ஆக
ரீங்கார சாம கலை சலங்கை கொஞ்ச
திக்கெட்டும் தேவி ஸ்ரீ பீடம் ஆக
தேவேந்தும் ரிஷிபலரும் மந் திரங்கள் பாட
முக்கனியும் மூவுலகும் வடங்கள் ஆக
மேலுலகாம் சொர்க்கத்தோர் வாழ்த்திப் போற்ற
எக்கால சொர்ண திரு ஊஞ்சல் ஏறி எழுத்தூர் ஸ்ரீ
அகிலாண்ட ஈஸ்வரியே ஆடீர் ஊஞ்சல் 02

ஆணவத்தை அடியொற்றும் கன்மம் மாயை
ஆன திரி மலமகலும் அருளும் ஆகும்
தேனமுதப் பக்தி நெறி செறிந்துண்டாகும்
தேவி திரு வருளில் திருவும் சேரும்
ஞானமொடு நியாயமெனும் ஊஞ்சல் தட்டில்
நயத்தோடு தேவியுனை இருத்தி ஆட்டி
வானவரும் போற்றும் இறை எழுத்தூர் தேவி
அகிலாண்ட ஈஸ்வரியே ஆடீர் ஊஞ்சல் 03

வில் நாணாய் வளைந்திலங்கு புருவமிங்கு
விளை நுதலாம் எனும் தங்க முத்துஇலங்கு
பல் ஞான ஒளி திலங்கு அருவ ரூப
பல வேஷமிடு மாயைத் தாயை இங்கு
எல்லோரும் பல்லோராய் புகழ்ந்து (உ) வந்து
எழிலழகாய் போற்று கவிப்பீட மஃதில்
இல்லோரும் தேவோரும் ஏற்றிநிற்கும் எழுத்தூரின்
அகிலாண்ட ஈஸ்வரியே ஆடீர் ஊஞ்சல் 04

கரியுரிபோர் பரமனணி கழலும் ஆட
கயிலை சிவன் காதிலணி குழையுடமாட
அரி பிரமா இந்திரரும் அசைந்து ஆட
அரவமணி பரம சிவ பதமும் ஆட
இரவு பகல் என விளங்கும் இரவி ஆட
எழில் உவமை ஆன உமை அசைந்தே ஆட
கரமதிலே பாசத்தைக் கொண்ட தேவி
அகிலாண்ட ஈஸ்வரியே ஆடீர் ஊஞ்சல் 05



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்பிலங்கு பதக்கமொடு பொன்னாண் ஆட
மலர் முத்துவைரமொடு ஆரம் ஆட
சீர் செம்பொற் குண்டலமும் குழலுமாட
சிரத்திலணி மணி முத்துச் சரங்கள் ஆட
வார்சடையும் வைரமிறைபட்டும் ஆட
வளர்சடையும் வலுநிறையும் குழமாட
ஊர் என்னும் எழுத்தூரின் தேவி மாலி
அகிலாண்ட ஈஸ்வரியே ஆடீர் ஊஞ்சல். 06

திருக்கேதீச்சர நாதன் உறையும் பூமி
திருவான மன்னாரில் எழுத்தூர் மேவி
விருப்போடு அருள் பொழியும் தேவி ராஜி
வெற்றிகளும் சித்திகளும் செய்யும் மாலி
திருக்கோடு பற்று பரன் தேவி எந்தத்
தேவர்களும் போற்றி மகிழ் ஆதி ராணி
இருப்போடு எழுத்தூரில் அருளைமேவும்
அகிலாண்ட ஈஸ்வரியே ஆடீர் ஊஞ்சல். 07

பாசத்தை ஒரு கையில் தாங்கிக் கொண்டாய்
பற்றிய அங்குசத்தை மறுகை கொண்டாய்
ஞானத்தைத் தரும் கை கரும்பு மென்றாய்
யாவரையும் காப்பதையே அபயம் என்றாய்
வேலைத்திரு முருகன் கையில் தந்தாய்
வெற்றிகளைத்தரும் சிந்தை தன்னைச்செய்தாய்
ஆலத்தை உண்டவரின் துணையே என்றாய்- எழுத்தூர்
அகிலாண்ட ஈஸ்வரியே ஆடீர் ஊஞ்சல். 08

ஈசனவன் தேவியுனை ஊஞ்சல் தன்னில்
இருத்தி கலைவாணி ஒரு பக்கம் ஆட்ட
நேசமுடன் நிறைசெல்வத் தேவி லக்ஷ்மி
நீள் அருளாய் மறுபக்கம் நின்றே ஆட்ட
மாசறு மற்றுயர் ரிஷிகள் மகிழ்ந்து ஆட்ட
மன்னவரும் தேவர்களும் மனதில் ஆட்ட
ஆசறு நற்பதியென்னும் எழுத்தூர் தேவி
அகிலாண்ட ஈஸ்வரியே ஆடீர் ஊஞ்சல். 09



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கௌரி மனோகரி ஆடீர் ஊஞ்சல்
கைலையின் நாயகியே ஆடீர் ஊஞ்சல்
செவ்விள எழிலினி ஆடீர் ஊஞ்சல்
சீர்நிறையே தேவி நீ ஆடீர் ஊஞ்சல்
கொவ்வை செந்நிறத்தினளே ஆடீர் ஊஞ்சல்
கோமகன் பார்பதி ஆடீர் ஊஞ்சல்
எவ்வுலகின் தாயவளே ஆடீர் ஊஞ்சல்
எழுத்தூரின் ஈஸ்வரியே ஆடீர் ஊஞ்சல் 10

## வாழி

*எழுத்தூரின் இள நகையும் எழிலும் வாழி!*
*எவர்க்கும் அருள் செய்யுமிறை தேவி வாழி!*
*வாழ்த்துகிற வேதியரும் வளமும் வாழி!*
*வாழுகின்ற பக்தர்களும் சகமும் வாழி!*
*அள்ளியருள் செய்யும் இறை தேவி வாழி!*
*உள்ளமது உருகிடவே அருளைச் சேர்க்கும்*
*எழுத்தூர் அகிலாண்ட ஈஸ்வரியே வாழி! வாழி!*

## எச்சரிக்கை

அனந்த பராந்தகி ஆனந்த சுந்தரி எச்சரிக்கை
அகிலாண்ட ஈஸ்வரி எழுத்தூர் தயாபரி எச்சரிக்கை
ஞானந்தரும் தய நாயகி நாரணி எச்சரிக்கை
ஞாலமும் நியாயமும் நாட்டிடும் மா நிதி எச்சரிக்கை... 01

அகிலமும் காத்திடும் அருவுரு புராதனி எச்சரிக்கை
ஆயிரம் கண்ணவள் ஆதி மனோகரி எச்சரிக்கை
பகலிரவானவள் பார்பதி காயத்திரி எச்சரிக்கை
பண்புறுதேவி அகிலாண்டேஸ்வரி எச்சரிக்கை 02

எழுத்தூர் நாயகி அகிலாண்டேஸ்வரி எச்சரிக்கை
இம்மையும் அம்மையும் செம்மையுமானவள் எச்சரிக்கை
வழுத்திட அருளும் வான்புகழ்தேவி எச்சரிக்கை
வலிமையும் செழுமையும் வழங்கிடும் நாயகி எச்சரிக்கை 03

பார்பதி நாயகி பண்பனி சுந்தரி எச்சரிக்கை
பாருலகேற்றிடும் பரன்துணை ரூபினி எச்சரிக்கை
கார்குழலம்மை கண்ணணின் தங்கை எச்சரிக்கை
கையிலையின் அரசி கனகமணி தாய் எச்சரிக்கை 04



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்ணவர் விண்ணவர் மகிழ்ந்திடு தேவி எச்சரிக்கை
மயிலவன் மகிழும் மாலவன் சோதரி எச்சரிக்கை
மன்னாரிலங்கு எழுத்தூர் நாயகி எச்சரிக்கை
மலரவன் எங்கள் அகிலாண்ட ஈஸ்வரி எச்சரிக்கை 05

பராக்கு

அன்புறு தேவி அகிலாண்ட ஈஸ்வரி பராக்கு
ஆனந்த மருளும் அற்புத தேவி பராக்கு
இன்ப மருளும் எழுத்தூர் நாயகி பராக்கு
ஏற்றமே செய்திடும் ஈஸ்வரி பூரணி பராக்கு 01

சங்கரி சுந்தரி சங்கரன் தேவி பராக்கு
சந்தமும் சுந்தர ரூபமானவள் பராக்கு
அங்கயற்கண்ணி அருள் தரு தயாபரி பராக்கு
எழுத்தூர் தேவி அகிலாண்ட ஈஸ்வரி பராக்கு 02

அங்கவி சங்கவி அருந்ததி கண்ணகி பராக்கு
அரசசவை தரு முரு கானந்த மானவள் பராக்கு
தங்க மருந்தளி கண்ணகி சுதந்தரி பராக்கு
தயாபரி எழுத்தூர் அகிலாண்டேஸ்வரி பராக்கு 03

வாலி

அகிலாண்ட ஈஸ்வரிக்கு வாலி சுபவாலி
எழுத்தூரின் தாய் தனக்கு வாலி சுபவாலி
ஜெக மாதா ஆனவர்க்கு வாலி சுபவாலி
ஜெயம் யாவும் அருள்பவர்க்கு வாலி சுபவாலி... 01

அட்ட திக்கு மானவர்க்கு வாலி சுபவாலி
ஆனந்தத் திருவினிற்கு வாலி சுபவாலி
இட்ட சித்தி செய்பவர்க்கு வாலி சுபவாலி
அகிலாண்ட ஈஸ்வரிக்கு வாலி சுபவாலி 02

சர்வ லோக நாயகிக்கி வாலி சுபவாலி
சர்வ சித்து செய்பவர்க்கு வாலி சுபவாலி
கர்வ பங்க தாய்தனக்கு வாலி சுபவாலி
காய நலம் அருள்பவர்க்கு வாலி சுபவாலி 03

எழுத்தூரின் நாயகிக்கு வாலி சுபவாலி
எக்கணமும் அருள் பவர்க்கும் வாலி சுபவாலி
அழுத்தங்கள் தீர்ப்பவர்க்கு வாலி சுபவாலி
அகிலாண்ட ஈஸ்வரிக்கு வாலி சுபவாலி 04



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மங்களத்து நாயகிக்கு வாலி சுபவாலி
மன்னாரின் அன்னையிற்கு வாலி சுபவாலி
எங்கும் எழுந்தருள்பவர்க்கு வாலி சுபவாலி
அகிலாண்ட ஈஸ்வரிக்கு வாலி சுபவாலி.. 05

**மங்களம்**

**பல்லவி**

அகிலாண்ட ஈஸ்வரிக்கு ஜெயமங்களம்
எழுத்தூர் எனும் பதிக்கு சுப மங்களம்

**சரணம்**

கேது வணங்கிய கேதீச்சரர்க்கும்
கூட உடனுறை கௌரியம்மைக்கும்
தீதுகளை களை சித்தி விநாயகர்க்கும்
தேவி இரா ராஜேஸ்வரி தனக்கும்
ஞாலமும் காக்கும் பால முருகனுக்கும்
ஞான மருள் ஞானவைரவர்க்கும்
சீல மிகவுறு ஆலடி விநாயகர்க்கும்
சீர் பலவுமருள் செல்வநகர் உமைக்கும்

செ.மோகனநாதன், M.Phil,MEd
உதவிக்கல்விப்பணிப்பாளர்,
வலயக்கல்விப் பணிமனை,
மடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மன்னார் எழுத்தூர் அருள்மிகு அகிலாண்டேஸ்வரி அம்பாள் அருள்வேண்டி மனமுருகி பாடிய பக்திப்பாடல்கள்

## அம்மா அம்மா நீயே

இராகம்:- கெம்பீர நாட்டை  தாளம்:- ரூபகம்

*அம்மா அம்மா நீயே*
*அகிலாண்டேஸ்வரி தாயே*
*அடைக்கலம் புகுந்தோம் நாமே*
*ஆறுதல் தருவாய் அம்மா - அம்மா*

*கள்ளமில்லா அடியார்கள் - தம்*
*கவலைகள் கூறி வரும் போது*
*கடைக்கண் பார்வையாலே*
*அவரவர் கவலையை போக்கிடுவாய் - அம்மா*

*வேப்ப மரத்து நிழலினிலே*
*நிமிர்ந்து நிற்கும் உன் அருட்காட்சி*
*பார்ப்போர் மனதினிலே என்றும்*
*பரவசம் ஊட்டுதம்மா - அம்மா*

*வாழும் மனிதர் இவ்வுலகில் - அன்னையை*
*வணங்கி வாழ வேண்டும்*
*நேரும் துன்பம் எல்லாம்*
*அன்னையின் நினைவாலே ஓடும் - அம்மா*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கருணை தாரும் அம்மா

**இராகம்:- பூர்வ கல்யாணி** **தாளம்:- ரூபகம்**

### *பல்லவி*

*கருணை தாரும் அம்மா – இந்த*
*எழுத்தூர் பதியில் உதித்த*
*அகிலாண்டேஸ்வரித் தாயே*
*கருணை தாரும் அம்மா – கருணை*

### *அனுபல்லவி*

*காக்கும் கரங்கள் உடையவளே*
*கடைக்கண் பார்வையாலே குறை களைபவளே*
*போற்றும் அடியவர்க்கு துணை இருப்பவளே*
*இப்புவியில் வாழ அருள் தாரும் அம்மா*
*– கருணை*

### *சரணம்*

*மூத்தவனை உலகில் முதல்வனை*
*நாராயணனை மயிலேறும் முருகனை*
*காவலனை ஞான வைரவனை*
*நவக்கிரகங்களையும் கண்டு இங்கு வணங்க*
*– கருணை*

*நாம் பாடும் ஒலிகள் கேட்கலையோ*
*வாடும் எமதுள்ளம் தெரியலையோ*
*கோயில் மணியோசை கேட்கும் போது – உந்தன்*
*கோபுர வாசலை நாடிவர அம்மா*
*– கருணை*

*****

## அகிலாண்டேஸ்வரி எமைக்காக்கும் ஈஸ்வரி

**இராகம்:- பிருந்தாவன சாரங்க** **தாளம்:- ஆதி**

*அகிலாண்டேஸ்வரி அகிலாண்டேஸ்வரி*
*எம்மைக் காக்கும் ஈஸ்வரி*
*அல்லலுறும் போதெல்லாம்*
*அமைதி தரும் தாயே நீ – அகிலாண்டேஸ்வரி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகழகாய் நகையணிந்து
ஆடையிட்டு பொட்டு வைத்து
பல விதமாய் ஒலிகள் கேட்க
அன்ன நடை பயிலும் அம்மா - அகிலாண்டேஸ்வரி

கையிலொரு சூலம் ஏந்தி
கயவர்களின் பகைமை வென்று
சிங்கமதில் அமர்ந்து கொண்டு
பார்த்திருப்பாயே- உந்தன்
பக்தர்களின் குறை தீர்க்க
காத்திருப்பாயே -அம்மா - அகிலாண்டேஸ்வரி

கேதீஸ் வரத்தில் கௌரியுமாய்
உப்புக்குளத்தில் ராஜேஸ்வரியாய்
செல்வ நகரில் மாரியுமாய்
வீற்றிருப்பவளே- இங்கே
அகிலமாளும் ஈஸ்வரியாய்
அமர்ந்திருக்கின்றாய் அம்மா - அகிலாண்டேஸ்வரி

முகத்தில் உள்ள கண்ணிரண்டை
மூடிக்கொண்டு பார்க்கையிலே
மனதில் உள்ள கண்களிலே
நீ வருவாயே- உந்தன்
உதட்டில் மலரும் புன் சிரிப்பை
காட்டி நிற்பாயே அம்மா - அகிலாண்டேஸ்வரி

****

## எழுத்தூர் வந்து பாருங்கள்

**இராகம்:- அடானு** **தாளம்:- ரூபகம்**

### பல்லவி

எழுத்தூர் வந்து பாருங்கள்- எங்கள்
அன்னையின் கோயிலை நாடுங்கள்
விழித்தோம் என்று நினையுங்கள்- அன்னையின்
விழியினை கொஞ்சம் நோக்குங்கள்
- எழுத்தூர்

### அனுபல்லவி

பகைத்தோர் உள்ளம் பணபடுமாம்
பாசமில்லா நெஞ்சம் நெகிழ்ந்திடுமாம்
துதிப்போர் துன்பம் சீர்தூக்கி- எங்கள்
எழுத்தூர் அன்னை அருள் கொடுப்பாள்
- எழுத்தூர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சரணம்

அனைத்தும் அவளே காக்கின்றாள்- இங்கு
அகிலாண்டேஸ்வரியாய் இருக்கின்றாள்
மனத்தை அவளிடம் அர்ப்பணித்தால்- நல்ல
வரத்தை எமக்கு தந்திடுவாள்
- எழுத்தூர்

சந்தன குங்குமம் மலர்சாத்தி
சரிகை பட்டாடை தனை அணிவாள்
கற்பூர தீப ஒளியினிலே அன்னையின்
அற்புதக்கோலம் காண வாரீர்
- எழுத்தூர்

****

## சிந்தனை செய்

இராகம்:- ரஞ்சினி   தாளம்:- ஆதி

### பல்லவி

அகிலாண்டேஸ்வரி அன்னையை - நீ
அனுதினமும் செய்வாய் சிந்தனை
- அகிலாண்டேஸ்வரி

### அனுபல்லவி

நாடி வா அன்னையின் கோயிலை
நல்குவாள் எமக்கு நன்மையை
- அகிலாண்டேஸ்வரி

### சரணம்

குறைகளை கேட்டு நொந்திடுவாள்
கொடுமைகளைக் கண்டு வெந்திடுவாள்
கோபத்தினால் ருத்திர வடிவம் பெற்று
வீறு கொண்டு சூலம் ஏந்திடுவாள்
- அகிலாண்டேஸ்வரி

குங்குமம் அன்னையின் நினைவைத் தரும்
கும்பிட்டால் பலகோடி பலனைத் தரும்
கல்வியும் செல்வமும் நிறையத் தரும்
கருத்தினில் கொண்டால் நல்வாழ்வு தரும்
- அகிலாண்டேஸ்வரி

துதிப்போர் துன்பம் நீங்கி விட
துயர் இல்லாவாழ்வு வாழ்ந்து விட
இடுக்கண் களைவது உண்மையென்று - அவள்
கடைக்கண் பார்வை சொல்லுமன்றோ
- அகிலாண்டேஸ்வரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அம்மா நீ அருள் புரிய வா

இராகம்:- சாருமதி தாளம்:- ஆதி

***பல்லவி***

அம்மா நீ அருள்புரிய எமை நோக்கி வரவேண்டும்
ஆறாத பேரின்பம் நாம் காண உன்துணை வேண்டும்
- அம்மா

***அனுபல்லவி***

சிம்மாசனம் போன்ற சிங்க மீது வீற்றிருந்து
அஞ்சாதே எனக்கூறும் அகிலாண்டேஸ்வரி தாயே - அம்மா

***சரணம்***

மாறாத அன்பு பேண உன் நினைவைத் தரவேண்டும்
ஆறாத துயர் தீர உன் அருள் வேண்டும்
சீரான வாழ்வு காண கடைக்கண் பார்வை வேண்டும்
தீராத நோய்கள் தீர உன்னை தொழுதெழ வேண்டும்
- அம்மா

தெவிட்டாத உன் நாமம் சொல்லி மகிழ்ந்திடவே
தேன் சிந்தும் பூக்களால் பூசித்து வணங்கிடவே
வாராத துன்பம் வருமுன் காத்திடவே
கேளாயோ எங்கள் குறை விரைவில் நீங்கிடவே - அம்மா

ஓராறு கரங்கொண்டு எம்மைக் காக்கின்றாய்
எண்ணற்றோர் உள்ளத்தில் வீற்றிருக்கின்றாய்
சொல்லாற்றல் இல்லை அம்மா பாடித்துதித்திடவே
உந்தன் நல்லருள் வேண்டும் அம்மா உன் தொண்டு செய்திடவே
- அம்மா

பொல்லாத காலமம்மா இப்புவியில் நடக்குதம்மா
சொல்லொணாத் துன்பமெல்லாம் துயரோடு வருகுதம்மா
வல்லரசி நீயே எமக்கு நல்வாழ்வு கொடுத்தருள
வல்லாம்பிகை நீயே வந்திங்க தோன்றும் அம்மா - அம்மா

****



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எழுத்தார் தழைத்தோங்குக

**இராகம்:- ரேவதி** **தாளம்:- ஆதி**

***பல்லவி***

எழுத்தூர் தழைத்தோங்க எண்ணிவிடு தாயே
ஏற்றத்தாழ்வு நீங்க வழி செய்யும் தாயே

***அனுபல்லவி***

வருந்துவோர் துன்பம் நீங்க அருள் வழங்கு தாயே
பரிந்துபகாரம் செய்ய நினைத்திடுவாய் தாயே - எழுத்தூர்

***சரணம்***

எல்லா நோய்களையும் களைந்திடுவாய் தாயே
எமக்கிடையில் பொறாமையை ஒழித்திடுவாய் தாயே
வஞ்சகம் சூதினை அழித்திடுவாய் தாயே
வாயாரப்புகழ்வோர் குறை தீர வரம் கொடு தாயே - எழுத்தூர்

அன்பும் அறமும் வளர துணை புரிவாய் தாயே
ஆணவம் அகங்காரம் நீங்க செயல்புரிவாய் தாயே
நற்குணங்கள் வளர்ந்திட வகை புரிவாய் தாயே
நல்லதோர் வாழ்வு காண வந்திடுவாய் தாயே - எழுத்தூர்

மனித குலம் மாண்பு பெறச் செய்திடுவாய் தாயே
மறைகள் யாவும் மறையாதிருக்க பார்த்திடுவாய் தாயே
சண்டையும் சச்சரவும் தீர வழிசெய்திடுவாய் தாயே
சாந்தியும் சமாதானமும் காண எழுந்தருள்வாய் தாயே
- எழுத்தூர்

***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எழுத்தார் நாயகி

இராகம்:- சாருகேசிரி　　　　　　　　　　தாளம்:- ஆதி

### பல்லவி

அகிலத்தை ஆளும் ஈஸ்வரியே – எம்
எழுத்தூர் பதியின் நாயகியே அம்மா　　　　– எங்கள்

### அனுபல்லவி

இறைவனின் இடபாகம் அமர்பவளே– எங்கள்
இடர்களை போக்கும் தாயவளே　　　　– அகிலத்தை

### சரணம்

மனதில் உன் நினைவு நிலைத்து விட்டால்
மயக்கங்கள் இல்லை எம் வாழ்வில்
இன்பமும் துன்பமும் தருபவளே இந்த
அகிலம் வாழ நல்லாட்சி செய்யுமம்மா　　　　– அகிலத்தை

பொய்களை உரைப்போரும் இங்குள்ளார்
மெய்களை மறைப்போரும் இங்குள்ளார்
நன்மையும் தீமையும் விளையு தம்மா– இங்கு
நல்லாட்சி புரிந்து அருள் செய்யுமம்மா　　　　– அகிலத்தை

****

## எங்கள் அன்னை

இராகம்:- பகுதாரி　　　　　　　　　　தாளம்:- ஆதி

### பல்லவி

அன்னையே அகிலாண்டேஸ்வரி – தாயே – உன்
அருள்வேண்டி தினம் வணங்குகின்றோம்
– அன்னையே

### அனுபல்லவி

எம்மையே உன் கடைக்கண்ணால் பார்க்க
ஏன் இன்னும் எண்ணவில்லையோ　　　　– அன்னையே

### சரணம்

முன்னையே யாம் செய்த பாவங்கள்
முடிவுற வில்லையோ இவ்வுலகில்
அன்னையே அருள் புரியுமம்மா
அனு தினமும் உன் கோயில் வர　　　　– அன்னையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்பிடும் போது குறைகள் சொல்வோம் தாயே
குறைகளை விரைவில் நிறைவு செய்யும் தாயே
எழுத்தூர் பதியில் எழுந்தருளிய அம்பிகையே
என்றும் நீயே எங்கள் அன்னையம்மா

- அன்னையே

****

## மணியோசை

**இராகம்:- பாகேஸ்வரி** **தாளம்:- ஆதி**

*பல்லவி*

அம்மன் கோவில் மணியோசை - மன
ஆறுதல் தருகின்ற மணியோசை - அம்மன்

காலையில் எழுந்து கடமையைத் தொடர
காதினில் கேட்கும் முதல் ஓசை - அம்மன்

அழுகையும் சிரிப்பும் மனதைக் கவரும்
மழலைகள் எழுப்பும் குரலோசை
அம்மா அம்மா என்று கதறும்
கன்றுகள் அழுகின்ற குரல்லோசை
மக்கள் உள்ளத்தைத் தொடுகின்ற ஓசைகளே
எங்கள் வாழ்வனில் கிடைக்கும் இன்பங்களே
- அம்மன்

நிம்மதி குலைந்து வருந்தும் போது
சந்நிதி அழைக்கும் மணியோசை
வந்தனை செய்து வருகின்ற போது
வல்லமை தருகின்ற மணியோசை
பத்திபரவசம் ஊட்டும் மணியோசை- எழுத்தூர்
அம்மன் கோயில் மணியோசை - அம்மன்

ஆக்கம்:- திரு.க.சிவம்
தாழ்வுபாடு வீதி,
மன்னார்.

இசையமைப்பு:-
திருமதி.A.பேபிசரோஜா
ஆத்திக்குழி,
நானாட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அகிலாண்டேஸ்வரியின் அடியினைப் பணிந்தேன்

வேதத்தின் முதல்வனாகி வேணியன் எனவுமாகி
வேங்கையின் தோலுடுத்தி வேழத்தோல் அதைப்போர்த்து
மாதாவாம் கௌரியம்மை பக்கத்திலே இருந்துநாளும்
பணிவிடைகள் செய்யப்பாம்பைக் கழுத்தினிலே அணிந்தஈசன்
கேதாரன் ஆதிகாலம் தொட்டருளைப் பொழிந்து ஆளும்
மாதோட்ட மாநகராம் மன்னாரின் தீவகத்திற்
பூதலமும் புகழுமுராம் எழுத்தூரிற் கோயில் கொண்ட
அகிலாண்ட ஈஸ்வரியின் பொன்னடியை நான்பணிந்தேன்

தில்லையிலே சிவகாமியாய்க் கைலையிலே பார்வதியாய்க்
காமாட்சி ஆகிநின்றாய் காஞ்சிமா நகரமதில்
எல்லையிலாப் புகழ்படைத்த காசியில்நீ விசாலாட்சி
மாணிக்க மூக்குத்தியின் ஒளியினிலே ஆட்சிசெய்யும்
தொல்நகராம் மதுரையிலே மீனாட்சி ஆனவளே
பொன்நகையும் புன்னகையும் கொண்டழகு மேனியுடன்
கல்மனதும் கசியும்வண்ணம் எழுத்தூரில் உறைபவளே
அகிலாண்ட ஈஸ்வரியே உன்னடியை நான்பணிந்தேன்!

மலைமகள் நீ அலைமகள் நீ கல்விதரும் கலைமகள் நீ
மகமாயி கருமாரி கற்பகம் நீ அபிராமி
நிலையில்லா நிலமதிலே நிலையான தெய்வமென
நிற்பவளே நிந்தனையை நீறாக்கும் உமையவளே
அலையெனவே எழும்துயரை அடக்கவல்ல தலைமகளே
அவனியிலே அன்பரெலாம் நம்புகின்ற அம்பிகையே
சிலைவடிவில் எழுத்தூரில் இருந்தெம்மைக் காப்பவளே
அகிலாண்ட ஈஸ்வ[illegible]ன் பூவடியை நான்பணிந்தேன்!

ஆக்கம்:- சின்னையா சிவபாலன்
தொழில்நுட்பச் சேவையாளர்,
இலங்கை மின்சாரசபை,
மன்னார்.

செல்வநகர், எழுத்தூர்,
மன்னார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மன்னார் எழுத்தூர் அருள்மிகு அகிலாண்டேஸ்வரி அம்பாள் அருள் வேண்டி மனமுருகி பாடிய பாமாலைகள்

## அருள் மாரி

அருள் வாரி கொடுக்கின்ற கருமாரி
இருக்கின்றாள் எழுத்தூரில் உருமாறி
அகிலாண் டேஸ்வரியே அவள் நாமம்
அனு தினமும் துதிப்போர்க்கு துயர்போகும்
– அருள்

பரமசிவன் பாகத்தாள் சிவகாமி
வரம் தருவாள் பழவினை தனைப்போக்கி
பொல்லாத வினையேனோ இனி நமக்கு
அன்னையின் பாதத்தில் அதையிறக்கும் – அருள்

கண்ணீரில் உருகிடுவாள் எம் அன்னை
கவலைகளை கூறி விடு அவள் முன்னே
படுகின்ற மரம் கூட துளிர்விடுமே
பக்தியில்லார்க்கும் பயபக்தி பெருகிடுமே – அருள்

அவள் பார்வை எனக்கென்றும் மருந்தாகும்
அவள் நாமம் எனக்கென்றும் விருந்தாகும்
தஞ்ச மது பிறிதில்லை நீ யன்றி- அம்மா
கெஞ்சுகிறேன் காத்திடுவாய் அருள் தந்து – அருள்

## துயரம் நெருங்காது

அகிலாளும் அன்னை உன்னைப் பார்த்தால்
துன்பம் நெருங்காது
உன்னை போற்றி பாட இந்த ஜென்மம்
ஒன்றே போதாது – அகிலாளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னைப் பார்த்த விழியை கூட
இமைகள் மூடாது
உன் புகழைப் பாட உலகில் என்றும்
வார்த்தைகள் போதாது! - அகிலாளும்

அழுதேன் தொழுதேன் உந்தன் பாதம்
வேறாறுதல் கிடையாது
மனதால் தினமும் பேசியே நின்றேன்
மனக்குறை எனக்கேது - அகிலாளும்

காஞ்சி காமாட்சி மதுரை மீனாட்சி
உருவம் பல நூறு
ஆயிரம் விழியாள் கடைக்கண் பார்த்தால்
துயரம் ஏது கூறு? - அகிலாளும்

****

## பாவ வினைகள் விலகி ஓடும்

பார்த்தால் போதும் உன் உருவம்
பசியை மறப்பேன் நானும் தினமும்
தொழுதால் போதும் அன்னை பாதம்
பாவ வினைகள் விலகி ஓடும் - பார்த்தால்

கண்கள் ஆயிரமாம் தாய் உனக்கு
விண் மண் யாவையும் அளப்பதற்கு
அகிலான்டேஸ்வரியே நீ எமக்கு
அருளைப் பொழிந்தே துயர் விலக்கு- பார்த்தால்

பிறவிப் பயனோ சொல்லம்மா- நாளும்
நான் பாடும் தெய்வம் நீயம்மா
காணும் உருவம் யாவிலுமே
உன் உருவம் தெரியுது தாயம்மா - பார்த்தால்

****



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாயவள்

திரிசூலி மாயவளே
பத்திர காளி நீயே
மீனாட்சி சுந்தரியே
அபிராமித் தாயவளே

காமாட்சி நீதானோ
விசாலாட்சி அன்னை தானோ
எழுத்தூரில் எழில் கொஞ்சும்
அகிலம்மா நீதானோ

வாருங்கள் துதிபாட
கேளுங்கள் துயர்நீங்க
காருண்ய தாயவளே
காப்பாள் வரம் தந்தே

தஞ்சமது நீயென்றால்
கருணைவிழி திறப்பாய்
எம்மை உயர்த்தி வைத்து
உள்ளம் மகிழ்ந்திடுவாள்

இனியொரு குறையில்லை
தாயிருக்க பயமில்லை
தனியிருந்து வருந்தாதே
அன்னை துணையிருப்பாள்

நன்மை பெருகிவிடும்
துன்பம் விலகிவிடும்
அன்னை அடிசேர்ந்தால்
இன்பம் கூடிவரும்

***

## பாதம் தொழுவோம்

தொல்லைகள் நீக்கும் தாயே என்றும் எழுத்தூர் அகிலம்மா
அல்லல் படுவோர் துன்பம் நீக்கும் உள்ளம் பெரிதம்மா
சொல்லிக் கொண்டால் உந்தன் நாமம் இல்லை துயரம்மா
வாழ்வில் என்றும் இன்பம் என்றால் நீயே அகிலம்மா - தொல்லை

எண்ணம் எல்லாம் இனிக்க உன்னை தினம் பாடி
எண்ணம் முழுதும் உன்னை வைத்தேன் வண்ணம் பல கோடி
கன்னம் சிவந்த தாயே வருவாய் உலகை விளையாடி
வருவேன் நானும் உந்தன் பின்னால் புகழை தினம் பாடி - தொல்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாராய் முகமாய் இருந்தால் நானும் எங்கே போய் சேர
வாராய் தாயே வளங்கள் பெருகி இன்பம் தழைத்தோங்க
காணா இன்பம் காணவேண்டி வீணாய் அலைவானேன்
அன்னையின் பாதம் தொழுதால் போதும் ஆறுதல் அடைவோமே
- தொல்லை

## பாவங்கள் நீக்கும் அன்னை

அகிலம் ஆழ்கின்ற அகிலாண்டேஸ்வரியே
எழுத்தூரில் எழுந்தருளி எம்மைக் காக்கும் நாயகியே
தொழுமடியார் துயரனைத்தும் போக்கிடும் புவனேஸ்வரியே
பாவங்கள் நீக்கிடுவாள் எம்மன்னை பரமேஸ்வரியே - அம்மா

அம்மா என்று சொன்னால் அன்பிலுருகி விடுவாள்
கண்ணீர் விட்டு அழுதால் கவலைதனை தீர்ப்பாள்
கருனை விழிகாட்டி என்றும் அவள் சிரிப்பாள்
இருள்தனைப் போக்கும் எழுத்தூரின் அம்பாள் - அம்மா

வேப்பமரத்து அடியில் விரும்பி அவள் அமர்ந்தாள்
வேண்டுமடியவருக்கு வெற்றியையே கொடுப்பாள்
நம்பினோர்கள் நெஞ்சம் நோக விடமாட்டாள்
நாடி நீங்கள் துதித்தால் நல்வழியே கொடுப்பாள் - அம்மா

மருத்துவரைக்கூட நோய்க்கு நம்பவில்லை
மருந்தாக வருவாள் எழுத்தூரின் அம்பாள்
தாயின் முகம் பார்த்தால் நோயும் விலகியோடும்
தினமும் நீயும் தொழுதால் மனமும் அமைதி காணும் - அம்மா

***

## பூலோக நாயகி

பூலோக நாயகியே நீயம்மா!
உலகமெல்லாம் உந்தன் புகழ் தானம்மா
அபிராமி சுந்தரியும் நீயம்மா
அருள்வடிவின் தாயவளே பாரம்மா

எழுத்தூரின் ஒளிவி[illegible] நீயம்மா
ஏழ்மை துன்பம் இ[illegible]நம[illegible]க்கு ஏதம்மா
அகிலாண்டேஸ்வரியே தாயம்மா
அன்பின் வடி[illegible] உன்உருவம் தானம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடிசையிலே அன்றிருந்தாய் நீயம்மா
கோபுரமாய் தானுயர்ந்தாய் இன்றம்மா
உன் அருளால் நான் உயர்வேன் பாரம்மா
என்று வரும் இந்த திருநாளம்மா

அருள் கொடுக்கும் தாயிடத்தில் வாருங்கள்
இருகரத்தை நீட்டி வரம் கேளுங்கள்
இருள் அகன்று இன்பமங்கே கூடிடும்
வரும் துன்பமெல்லாம் தூர விலகி ஓடிடும்

ஆக்கம்
திருமதி.ரவிச்சந்திரன் (ஜெயம்)
ஆலய வீதி, எழுத்தூர்,
மன்னார்.

***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஸ்ரீ வரலட்சுமி விரதமகிமை

சூதபௌராணிகள் சொல்கிறார்,

- சிவஸ்ரீ. சாம்பசிவ ஐயப்பதாசக்குருக்கள்

தேவர்கள் வசிக்கும் கைலாஸ பர்வத சிகரத்தில் பரமசிவன் பார்வதியுடன் சொக்கட்டான் ஆடிக்கொண்டிருக்கின்றார். அச் சமயம் பார்வதி, "நாதா, நான் தங்களை ஜெயித்துவிட்டேன்." என்றார். இப்படி இருவருக்கும் வாக்குவாதம் முற்றியது.

அப்பொழுது அங்கிருந்த சித்திரநேமி என்ற கணதேவதையை இருவரும் மத்தியஸ்தம் கேட்க அவன் பஸபாதத்தால் பரமசிவன்தான் வெற்றி கொண்டார் எனக்கூறினான். அதற்குப் பார்வதி அவன் மீது கோபம் கொண்டு "நீ பொய் சொன்னதால் குஸ்டரோகியாகி ஒளியிழந்து தவிப்பாயாக." என்று சபித்தாள்.

இதற்குப் பரமசிவன் வருந்தி "தேவி இந்த சித்திர நேமி எப்பொழுதும் பொய் என்பதே பேசாதவன். அவன் உண்மையைத்தான் கூறினான். நீ அவனை வீணாகச் சபித்து விட்டாயே! அவன் மீது நீ அருள் கூர்ந்து அவன் சாபத்தை அகற்றுவாயாக" என்று அவளை வேண்டினார். அதற்கு மனமிரங்கிய பார்வதி தேவி எப்பொழுது அழகிய தடாக தீர்த்தத்தில் தேவ கன்னிகைகள் புண்ணியமான ஒரு விரதத்தை அனுஸ்டிப்பார்களோ, அப்பொழுது உன் சாபம் நீங்கும் என்று கூறினாள். உடனே கீழ் சாய்ந்து விட்டான். பிறகு சித்திரநேமி சில தினங்களில் ஒரு தடாகக்கரையில் குஸ்டரோகியாகி அங்கு வாசம் புரிந்து வந்தான். ஒரு நாள் அங்கே வந்த தேவப்பெண்களைக் கண்டான்.

தேவி அந்தப் பூஜையில் ஈடுபட்ட அந்தப் பதிவிரதைப் பெண்கள் தேவியை வணங்கி வழிப[illegible]தைக்கண்டு அம்மையீர் தாங்கள் செய்யும் பூஜை யாது? இதை நான[illegible] சய்யலாமா? நான் பார்வதியின் சாபத்தால் குஸ்டரோகியாகித் துன்புற்[illegible]ருக்கிறேன். என் துன்பம் நீங்கும் வழியைத் தாங்கள் கூறியருள வேண்டும் என்று வேண்டினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்ஸரப் பெண்கள் கூறியதாவது: நாங்கள் இன்று வரலட்சுமி விரதம் என்னும் விரதத்தை அனுஸ்டிக்கின்றோம். இது திவ்வியமானது. கோரும் வரங்களை அளிக்கக் கூடியது. சூரியன் கடகத்தில் இருக்கும் போது, அதாவது கங்கையும் யமுனையும் சேரும் காலத்தில் துங்க பத்ரா நதிக்கரையில் சிராவண மாதத்தில் சுக்ல பட்சத்தில் வெள்ளிக்கிழமை அன்று முறைப்படி மகாலட்சுமியைப் பற்றியதான இந்த விரதத்தைத் தொடங்க வேண்டும்.

தங்கத்தினால் நான்கு கைகளுடன் லட்சுமியின் பிரதிமையைச் செய்யவேண்டும். வீட்டைத் தோரணங்கள், கோலங்கள் முதலியவைகளால் அலங்கரிக்கவேண்டும். வீட்டின் கிழக்குத் திக்கில் முக்கியமாக ஈசானிய மூலையில் ஒரு படி அரிசியைப் பூமியில் பரப்பி அதன் மீது ஒரு கலசத்தை வைத்துத் தீர்த்தத்தை நிரப்பவேண்டும். பொன்னையும், பழங்களையும் தளிர்களையும் அதன் மீது வைத்து புதிய வஸ்திரத்தைச் சுற்றவேண்டும். அந்தக் கலசத்தின் மீது லட்சுமியின் பிரதிமையை வைத்து முறைப்படி பூஜை செய்ய வேண்டும்.

இவ்வாறு தேவ கன்னிகைகள் செய்த இந்தப் பூஜையை சித்திரநேமி இமை கொட்டாமல் பார்த்து வந்தான். கோமப் புகையை நுகர்ந்தாலும், நெய்த்தீபத்தைக் கண்டதாலும் அவனுடைய குஸ்ட நோய் நீங்கித் தங்க நிறம் பெற்றான்.

இவ்வாறு மன அமைதியுடன் இந்த விரதத்தை மேற்கொண்டு ஐந்து வகையான தானம் செய்து கதையைக் கேட்கவேண்டும். பிறகு மௌனமாக இருந்து ஐந்து வகையான ஆரார்த்திகளை செய்து பூஜிக்க வேண்டும்.

பிறகு பிராமணனுக்கும், சன்னியாசிக்கும், தெய்வத்திற்கும், பிரமச்சாரிக்கும் சுவாசினிக்கும் முறையே ஐந்து வகையான தானங்களைச் செய்தான். அதன் பிறகு நமஸ்காரம் செய்து இருப்பிடம் சென்றான். பிறகு கைலாசம் சென்று பார்வதி பரமேஸ்வரரை வணங்கி அவரருகில் நின்று தேவி வரலட்சுமியின் அருளால் தங்கள் திருவடியைக் காணும் பாக்கியம் எனக்கு கிடைத்தது என்று கூறி வணங்கினான்.

அப்போது பரமசிவன் இன்று முதல் நீ இந்த கைலாயத்தில் சகல போகங்களையும் அனுபவித்துக்கொண்டிருப்பாயாக. பிறகு இந்த விரதத்தின் மகிமையால் வைந்த லோகம் சேருவாய் என்றார். முன்பு பார்வதியும் ஸத் புத்திர லாபத்திற்காக இந்த விரதத்தினை அனுஸ்டித்து அதன் மகிமையால் சண்முகம் தோன்றினான். இந்த விரதத்தை பதிவிரதைப் பெண்கள் அனுஸ்டிப்பார்களாக மற்றும்குண்டினம் என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகரத்தில் சாருமதி என்ற பெண் இந்த வரலக்சுமி விரதத்தை உபதேசிக்கப் பெற்று சிராவண மாதம் சுக்கிர பட்ச பூர்ணிமையுடன் கூடிய வெள்ளிக்கிழமை அன்று தேவியை தரிசித்து சகல பாக்கியங்களையும் பெற்றாள்.

விக்கிரமாதித்தன் நந்தனிடமிருந்து ராஜ்ஜியத்தைப் பெற்றான். மனைவி இல்லாத நந்தன் இந்த விரதத்தைச் செய்து அழகியமனைவியை அடைந்தான். அவன் மனைவியும் பிள்ளைப் பேற்றுக்காக விரதமிருந்து உலகைக்காக்கும் மகனை அவள் பெற்றாள். இப்படிப்பலர் அனுஸ்டித்ததால் அது முதல் இச் சிறந்த வரலட்சுமி விரதம் இவ்வுலகில் பரவியது.

-சிவஸ்ரீ.சாம்பசிவ ஐயப்பதாசக்குருக்கள்
சர்வதேச இந்துமத குருபீடம் கொழும்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகா கும்பாபிஷேகக் காட்சிகள்











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதிஷ்டை

கும்பாபிஷேகம் அநாவர்த்தனம், ஆவர்த்தனம், புனராவர்த்தனம், அந்தரிதம் என நான்கு வகைப்படும்.

அநாவர்த்தனம் - ஆலயங்கள் இல்லாவிடத்து ஆலயங்களை புதிதாக ஆகம விதிப்படி அமைப்பது அங்கு விக்கிரகங்களை பிரதிஷ்டை செய்தல் - அநாவர்தனா பிரதிஸ்டை எனப்படும்

ஆவர்தனம் - பன்நெடுங்காலத்திற்கு முன் அமைக்கப்பட்ட ஆலயத்தில் நெடுங்காலமாக நித்திய நைமித்த கிரியைகள் நிகழ்ந்து வரும் வேளையில் எதிர்பாராதவாறு காடுபடர்தல், மண்மாரி, தீ போன்றவை நிகழ்வது ஆலயம் மறைக்கப்பட்ட போது அதனை வெளியாக்கியோ அல்லது முன்போல ஆலயம் ஒன்றை நிர்மானித்தோ அங்கு விக்கிரகங்களை பிரதிஷ்டை செய்தல் ஆவர்தன பிரதிஷ்டை எனப்படும்

புனராவர்த்தனம் - நித்திய நைமித்திய பூஜைகள் நடைபெற்று வரும்வேளை விமானம், மண்டபம், கோபுரப் பிரகாரம் ஆலய விக்கிரம் ஆகியவற்றில் எவையேனும் வெடித்தோ பிளந்தோ சிறில மடையின் பாலஸ்தாபனம் செய்து பழுதடைந்த கட்டிடங்களை பலமாகவும் அழகாகவும் திடமானதாகவும் அமைத்து பிரதிஷ்டை செய்வது புனராவர்தன பிரதிஷ்டை எனப்படும்.

அந்தரித பிரதிஷ்டை - ஆலயத்தில் மக்கள் மிருகங்கள் இருப்பினும் வருனாசிரம தர்மம் தவறி பிரவேசம் நிகழினும் திருடர், பைத்தியர்களும் மிலேச்சர்கள் நுழைவினும் செய்யப்படும் பிரதிஷ்டை அந்தரித பிரதிஷ்டை ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அநாவர்த்தன பிரதிஷ்டைக்குரிய அம்சங்கள்

முகூர்த்த நிர்னயம் சல்ய உத்தாரணம், திரவிய பாகம், கர்பநியாசம், கணேசபூஜை, அனுஞ்ஞை, கிராமசாந்தி, பிரவேசபலி, ரக்ஷோக்ன ஹோமம், திஷா ஹோமம், சாந்தி ஹோமம், மூர்த்தி ஹோமம், வாஸ்து சாந்தி, நவக்கிரமகம், மிருத்சங்கிரணம், அங்குராப்பணம், ரஷாபந்தனம், ஜலாதிவாசம், தான்யாதி வாசம், நயனோன்மீலனம், கிராமபிரட்சனம், சயனாரோபனம், அக்னிகார்யம், நாமகரணம், பிம்பசுத்தி, பிம்பபிரதஷினம், கர்ப்பகிரக பதலின்யாசம், ரத்னநியாசம் யந்திரஸ்தாபனம் பிம்பஸ்தாபனம், அஸ்டபந்தனம் ஷடத்தவ நியாசம், சாங்கோ பாங்க பிரத்தியங்க நியாசம் யாகமுடிவில் ஸபர்சாகுதி, யாத்திராதானம், கும்ப உத்விசனம் ஸ்தூபி பிராசாதம், துவாரம் மண்டபம் பிரகாரம், துவிஷம் பலிபீடம் முதலியவற்றின் தாபனங்கள், இலங்கத்திற்கு நவதநுகல்பனம், சகளீகரனம் ஆவாகனம், கும்பாபிஷேகம், ஆசீர்வாதம், ரஷாவிசர்ஜனம், அவபிருதம், ஆசார்போத்தவம், மண்டலபூஜை, மண்டல பூஜோத்சவம், மண்டலபூர்த்தி.

ஆவர்த்தன பிரதிஷ்டைக்கு

சல்யோத்தாரணம், ஜலாதிவாசம், தான்யாதி வாசம், நயனோன் மீலனம், புரப்பிரதக்ஷினம், சயனாரோபனம், நாமகரனம் ஆகிய கிரியைகள் கிடையாது.

புனராவர்த்தன பிரதிஷ்டைக்கு

ஆவர்த்தனப் பிரதிஷ்டையை போன்று கிரியைகள் உண்டு. சாங்கோபாங்கப் பிரத்தியங்கம் எனப்படும் மூவகை அனுஞ்ஞை களும் உண்டு. தாபனமாகி யுள்ள மூர்த்தியை விடுத்து வேறுவகையான கலாகர்ஷனம்செய்யகூடாது.

அந்தரெ பிரதிட்சைக்கு

எவ்வெவ் சமய மயங்களில் எவ்வெவ்வாறு பிராயச்சித்த வடிவமாக பிரதிஷ்டை நடைபெற வேண்டுமோ அவற்றை அவ்வவ்வாறு அனு சரித்து செய்வது அந்தரித பிரதிஷ்டை ஆகும். மேற்கூறிய மூன்று பிரதிஷ்டைகளும், சுபமுகூர்தத்திலே நிகழவேண்டும். அந்தரித பிரதிஷ்டைக்கு சுபமுகூர்த்தம் கிடையாது.

செல்வி.ரஞ்சினி தர்மகுமாரசாமி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிரக பலன்களும் அதற்குரிய பரிகாரங்களும்

குரு பகவான் ஒரு பூரணமான சுபகிரகம் ஆண் தன்மையுள்ள அற்புதமான கிரகம். நவக்கிரகங்களில் பொன்னவன் என போற்றப்படும் குரு பகவான் ஒருவருடைய ஜாதகத்தில் ஏற்படக்கூடிய தோசங்களை தனது சுபப்பார்வையில் நிவர்த்தி செய்வார். குரு பார்க்க கோடி நன்மை என்பது அனுபவ ரீதியில் உண்மையாகும்.

**குரு தோசமுடையவர்கள் செய்யும் பரிகார வழிபாடுகள்**

ஒவ்வொரு வியாழக்கிழமையும் குருபகவான் அல்லது தட்சணாமூர்த்திக்கு மஞ்சள் நிற பூக்களால் அர்ச்சனை செய்யவும் தொடர்ந்து 5 வாரம் அல்லது 9 வாரம் அல்லது 11 வாரம் விரதம் இருந்து மஞ்சள் நிறப்பட்டு கடலை, மாலை போன்றவற்றால் அர்ச்சனை செய்து வரவும் குருதோசம் விலகும்.

**சனி தோசமுடையவர்கள் செய்யும் பரிகார வழிபாடுகள்**

ஒரு மனிதனுடைய வாழ்க்கையில் ஆயுளுக்குரிய கிரகம் சனி பகவானே. சனிபகவானுக்கு ஈஸ்வரன் என்ற பட்டம் உண்டு. அவர் ஒரு மனிதனை 3 முறை பிடிப்பார். 7 ½ வருடங்கள் வரை பிடிப்பார். 1வது 2½ வருடம் விரையச்சனி, 2வது 2 ½ வருடம் ஜென்மசனி, 3வது 2 ½ வருடம் குடும்ப சனி, சனி ஒருவருக்கு 8ம் இடத்தில் வருவது அட்டமத்தில் சனி ஆகும். ஏனைய வரும் சனிகள் பாதிப்பை ஏற்படுத்தாது.

**சனி தோச பரிகாரங்கள்**

7 ½ வருட சனி பிடிப்பவர்கள் மாதம் 2 முறை தொடர்ந்து 5 சனி அல்லது 9 சனி அல்லது 11 சனி விரதம் பிடிக்கவும். சனிக்கு எள்ளெண்ணெய் தீபம் ஏற்றவும் அன்றைய தினம் விரதம் இருந்து காகத்திற்கு அன்னம் வைத்து வழிபடவும், ஏனையவர்கள் புரட்டாதி மாதத்தில் வரும் சனிக்கிழமைகளில் எள்ளெண்ணெய் தீபம் ஏற்றவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சர்ப்ப தோசமுடையவர்கள் செய்யும் பரிகார வழிபாடுகள்**

ராகு, கேது என்ற கிரகங்கள் சாயாக் கிரகங்கள் ஆகும். இந்த கிரகங்கள் ஜாதகரின் எந்த வீட்டில் இருக்கிறதோ அந்த வீட்டில் உள்ள பலாபலன்களை செய்யும். உதாரணமாக மீனராசி குருவினுடைய வீடு மீனராசி இருக்கும் ராகு, கேது குருவினுடைய பலன்களை செய்யும் சர்ப்பதோசம் உள்ளவர்கள் 2 வகைப்படுவர். பகையில் இருக்கும் ராகு, கேதுவுக்கு தோசம் அதிகம். நட்பில் இருக்கும் ராகு, கேதுவுக்கு தோசம் குறைவு. பகையில் இருக்கும் ராகு கேது தோசமுள்ளவர்கள் கரும்பாம்பு, செம்பாம்பு செய்து அதை கிண்ணத்தில் வைத்து நல்லெண்ணெய் விட்டு செவ்வாய்க்கிழமை அல்லது சனிக்கிழமையில் தொடர்ந்து 4 வாரம் விரதம் இருந்து கற்பூரதீபம் ஏற்றி வழிபடவும். 5வது வாரம் அதை எடுத்துக்கொண்டு நவக்கிரகம் உள்ள கோயில்களில் சென்று நவக்கிரகங்களை 3 முறை அல்லது 5 முறை வலம் வந்து ஐயரிடம் கொடுக்கவும். அத்துடன் அர்ச்சணைக்குரிய பொருட்கள் மரக்கறி, தேங்காய், சிவப்பு அல்லது நீலப்பட்டு கொடுத்து அர்ச்சனை செய்யவும்.

நட்பில் உள்ள ராகு, கேது தோசம் குறைந்தவர்கள் கரும்பாம்பு, செம்பாம்பை பசுப்பாலில் அல்லது தேங்காய்ப்பாலில் வைத்து தலை தெரியும் அளவுக்கு கிண்ணத்தில் பால் ஊற்றவும். அதை 4 வாரம் வீட்டில் வைத்து பூஜை செய்து 5வது வாரம் மேற்குறிப்பிட்டபடி வழிபாடுகளை செய்யவும். இந்த வழிபாடுகள் திருமணத்தடை உள்ளவர்களுக்கும், குழந்தை பாக்கியத்தடை உள்ளவர்களுக்கும், கல்வியில் தடை உள்ளவர்களுக்கும் பொருந்தும்.

**செவ்வாய் தோசமுடையவர்கள் செய்யும் பரிகார வழிபாடுகள்**

ஒரு பெண்ணுக்கு செவ்வாய் தோசம் இருந்தால் அப்பெண் செவ்வாய் கிழமைகளில் விரதம் இருந்து தொடர்ந்து 7 வாரம் அம்மனுக்கு நெய் விளக்கு இடவேண்டும். தேசிப்பாதியில் நெய் தீபம் ஏற்றவேண்டும். தாலி தோஷம் உள்ளவர்கள் அம்மனுக்கு தாலி செய்து கொடுத்து தோசத்தை நீக்கவும். செவ்வாய் தோசம் கடுமையாக உள்ளவர்கள் அதற்குரிய பரிகாரங்களை ஐயரிடமோ அல்லது சோதிடரிடமோ சென்று பரிகார பூஜை செய்யவும். புத்திர தோசமுள்ளவர்கள் எமது அகிலாண்டேஸ்வரி அம்மன் கோயிலில் உள்ள சந்தான கோபாலருக்கு அர்ச்சனை செய்யவும் 108 வெள்ளை பூக்கள் எடுத்து ஒவ்வொரு செவ்வாய் அல்லது வெள்ளிக்கிழமைகளில் 7 வாரங்கள் அல்லது 9 வாரங்கள் தொடர்ந்து அர்ச்சனை செய்யவும் புத்திர பாக்கியம் கிடைக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவாகப் பொருத்தம் உள்ள நட்சத்திரங்கள்

| பெண்ணுடைய நட்சத்திரம் | பொருந்தக்கூடிய ஆணின் நட்சத்திரம் | பொருந்தாத ஆணின் நட்சத்திரம் |
|---|---|---|
| 01. அஸ்வினி<br>மகம்<br>மூலம் | பரணி, ரோகிணி, பூசம்<br>திருவாதிரை, பூரம்<br>அத்தம், சுவாதி, அனுஷம்<br>பூராடம், திருவோணம்,<br>சதயம், உத்திரட்டாதி | கார்த்திகை, மிருகசீரிடம்<br>புனர்பூசம், உத்தரம்<br>சித்திரை, விசாகம்<br>உத்திராடம், அவிட்டம்<br>பூரட்டாதி |
| 02. பரணி<br>பூரம்<br>பூராடம் | கார்த்திகை, மிருகசீரிடம்<br>புனர்பூசர், ஆயுல்யம்<br>உத்தரம், சித்திரை,<br>விஷாகம் கேட்டை,<br>உத்தராடம் அவிட்டம்,<br>பூரட்டாதி, ரேவதி | ரோகிணி, திருவாதிரை<br>பூசம்,அத்தம், சுவாதி<br>அனுஷம், திருவோணம்<br>சதயம், உத்திரட்டாதி |
| 03. கார்த்திகை<br>உத்தரம்<br>உத்தராடம் | ரோகிணி, திருவாதிரை<br>பூசம், மகம், அத்தம்<br>சுவாதி, அனுஷம், மூலம்<br>திருவோணம்,<br>சதயம், உத்தரட்டாதி,<br>அஸ்வினி. | மிருகசீரிடம், புனர்பூசம்<br>ஆயில்யம், சித்திரை<br>விஷாகம், கேட்டை,<br>அவிட்டம், பூரட்டாதி,<br>ரேவதி. |
| 04. ரோகிணி<br>அத்தம்<br>திருவோணம் | மிருகசீரிடம், புனர்பூசம்<br>ஆயில்யம், பூரம், சித்திரை<br>விசாகம், கேட்டை, பூராடம்<br>அவிட்டம், பூரட்டாதி,<br>ரேவதி, பரணி | திருவாதிரை, பூசம்,மகம்<br>சுவாதி, அனுஷம், மூலம்<br>சதயம், உத்தரட்டாதி,<br>அஸ்வினி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 05. மிருகசீரிடம் சித்திரை அவிட்டம் | திருவாதிரை, பூசம், மகம் உத்தரம், சுவாதி, அனுஷம் மூலம், உத்தராடம், சதயம், அஸ்வினி, கார்த்திகை | புனர்பூசம், ஆயுல்யம் பூரம், விசாகம்,கேட்டை பூராடம், பூரட்டாதி, ரேவதி, பரணி |
| 06. திருவாதிரை சுவாதி சதயம் | புனர்பூசம், ஆயில்யம் பூரம், சதயம், சித்திரை விசாகம், கேட்டை, பூராடம், திருவோணம், பூரட்டாதி, ரேவதி, பரணி, ரோகிணி | பூசம், மகம், உத்தரம் அனுசம், மூலம், உத்தராடம் உத்திரட்டாதி, அஸ்வினி கார்த்திகை |
| 07. புனர்பூசம் விசாகம் பூரட்டாதி | பூசம், மகம், உத்தரம் சித்திரை, அனுஷம், மூலம் உத்தராடம், அவிட்டம், உத்தரட்டாதி, அஸ்வினி கார்த்திகை, மிருகசிரிடம் | ஆயுல்யம், பூரம், அத்தம் கேட்டை, பூராடம் திருவோணம், ரேவதி பரணி, ரோகிணி |
| 08. பூசம் அனுஷம் உத்திரட்டாதி | ஆயிலியம், பூரம், அத்தம் சுவாதி, கேட்டை, பூராடம் திருவோணம், சதயம், ரேவதி, பரணி, ரோகிணி, திருவாதிரை | மகம், உத்தரம், சித்திரை மூலம், உத்தராடம், அவிட்டம், அஸ்வினி கார்த்திகை, மிருகசீரிடம் |
| 09. ஆயில்யம் கேட்டை ரேவதி | மகம், உத்தரம், சித்திரை விஷாகம், மூலம், உத்தராடம், அவிட்டம், புரட்டாதி, அஸ்வினி, கார்த்திகை, மிருகசீரிடம், புனப்பூசம். | பூரம், அத்தம், சுவாதி பூராடம், திருவோணம், சதயம், பரணி, ரோகிணி, திருவாதிரை |

சோதிடக்கலை நிபுணர்
விஸ்வப்பிரம்மஸ்ரீ.அழகர்சாமி ரவிச்சந்திரன்,
ஆலய நிர்வாக உறுப்பினர்.
அம்பாள்சந்தி,
எழுத்தூர், மன்னார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## எமது மக்களுக்கு
## சில முக்கிய ஆசார முறைகள்

- கோயில் இல்லாத ஊரில் குடியிருக்கக் கூடாது.
- தனது இடது கையினால் ஆசனம் போட்டால் ஆயுள் குறைவு. தனது இடது கையினால் எண்ணெய்தேய்த்தும் கொணடால் புத்திரர் அழிவு. இடது கையால் சாப்பாடு போட்டுக்கொண்டால் செல்வம் அழியும். தனது இடது கையால் படுக்கை போட்டால் இருப்பிடம் சேதமாகும்.
- ஜோதிடர், குரு, நோயாளி, கர்ப்பிணி, மருத்துவம், சந்நியாசி முதலியவர்களுக்கு அவர்களுடைய ஆபத்துக் காலத்தில் கண்டிப்பாக உதவவேண்டும்.
- பசு, தேர், நெய்க்குடம், அரசு, வில்வம், அரசுடன் சேர்ந்த வேம்பு, இவைகள் எதிரில் குறுக்கிட்டால் வலது புறம் சுற்றிச்செல்ல வேண்டும்.
- கும்பஸ்தன் ஒரு துணியுடன் உணவு உட்கொள்ளக் கூடாது. ஒருகையை தரையில் ஊன்றிக்கொண்டு சாப்பிடக்கூடாது. துணியில்லாமல் குளிக்கக்கூடாது. சூரியனுக்கு எதிரில் மலசலம் கழிக்கக்கூடாது.
- கன்றுக்குட்டியின் கயிற்றைத் தாண்டக்கூடாது. மழை பெய்யும் போது ஓடக்கூடாது. தண்ணீரில் தன் உருவத்தைப் பார்க்கக்கூடாது. நெருப்பை வாயால் ஊதக்கூடாது.
- வானவில்லைப் பிறருக்குக் காட்டக்கூடாது.
- ஈரக்காலுடன் படுக்கக்கூடாது.
- வடக்கிலும், தென்கிழக்கு, தென்மேற்கு, வடமேற்கு, வடகிழக்கு எனும் திசைகளில் தலைவைத்துப் படுக்கக்கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பிணப்புகை, இளவெயில், தீபநிழல் இவை நம்மீது படக்கூடாது.
- நெல்லிக்காய், ஊறுகாய், இஞ்சி, தயிர் இவற்றை இரவில் சாப்பிடக்கூடாது.
- ஆலயத்திற்குச் செல்லும் ஆண்களும், பெண்களும் அவர்களுக்குரிய கலாச்சார ஆடைகளுடன் செல்லுதல் வேண்டும். நவநாகரீக ஆடைகளுடன் ஆலயத்திற்குச் செல்லுதல் கூடாது.

## சிந்திக்க சில வரிகள்

- பிறர் செய்வதில் எது உனக்கு பிடிக்கவில்லையோ அதை நீ மற்றவர்களுக்குச் செய்யாதே.
- நல்லதையோ தீயதையோ எதை ஒருவன் செய்தாலும் அதன் விளைவுகள் அவனைத் தொடர்ந்து கொண்டே இருக்கும்.
- பணம் இல்லாதுவிட்டால் உன்னை யாருக்கும் தெரியாது. பணம் இருந்தால் உன்னை உனக்கே தெரியாது.
- நீ சந்தோசமாக இருக்கும் போது வாக்குறுதிகளைக் கொடுக்காதே. கவலையோடு இருக்கும் போது கடிதங்களை எழுதாதே.
- தோல்வியைக் கண்டு அஞ்சுபவர்களிடம் இருந்து வெற்றி தானாகவே ஒதுங்கிக் கொள்கின்றது.
- சோம்பலின் விளைவு வறுமை. முயற்சியின் விளைவு மூலதனம் நெற்றியைக் காயப்படுத்துவதை விட முதுகை வளைத்துச் செல்வது நல்லது.
- விழுவது வெட்கமல்ல விழுந்து கிடப்பதே வெட்கம்
- அறிவு இல்லாத கண்ணியம் பலவீனமானது பயனற்றது. ஆனால் கண்ணியம் இல்லாத அறிவு ஆபத்தானது அஞ்சத்தக்கது.
- நல்ல அறிவு எந்த மூலையில் எவ்வளவு தூரத்தில் இருந்தாலும் அதைத் தேடிச்செல்.
- அதி சிறந்த நாள் இன்றைய நாள், மிகப்பெரிய பலவீனம் பயம், மிகக் கீழ்மையான உணர்வு பொறாமை.
- குழப்பத்தை விளைவிப்பது மேலதிகப்பேச்சு, சிறந்த மனிதன் சரியென உணர்ந்ததைச் செய்பவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மங்கையருக்கு சில குறிப்புகள்

- சுமங்கலிகள் நெற்றியில் குங்குமம் இல்லாது இருக்கக்கூடாது.
- இரவில் வீட்டைப் பெருக்கிக் குப்பையை வெளியே போடக்கூடாது.
- பெண்கள் பூசணிக்காயை வெட்டக்கூடாது. கர்ப்பிணிப் பெண்கள் தேங்காயை உடைக்கக்கூடாது.
- வாசல் படிகளில் தலைவிரிகோலமாக உட்காரக்கூடாது.
- தலைவிரி கோலமாக வீட்டில் இருப்பதும், வெளியில் செல்வதும் தவிர்க்கப்படவேண்டும்.
- வீட்டிற்கு வரும் சுமங்கலிப் பெண்களுக்கு இல்லத்தரசிகள் குங்குமம் கொடுத்து வழியனுப்ப வேண்டும்.
- ஒட்டுப் பொட்டுக்களைத் தவிர்த்தல் வேண்டும்.
- அதிகாலையெழுந்து வீடுவாசல் பெருக்கி நீர் தெளித்து வாசலில் கோலமிட வேண்டும்.
- மாலை விளக்கு வைக்கும் நேரத்தில் வெளி இடங்களுக்கும் செல்லாது விளக்கு வைத்து தூபமிட்டு வழிபாடு செய்வது நல்லது.
- கோலம் போடும் போது சுப காரியங்களுக்கு இரண்டு கோடும், அசுப காரியங்களுக்கு ஒரு கோடும் போடப்படவேண்டும்.
- உரல், அம்மி, முறம், வாசற்படி, உலக்கை இவற்றின் மீது உட்காரக்கூடாது.
- சுமங்கலி கணவனின் அனுமதி பெற்றே விரதமிருக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உணவு பரிமாறும் முறைகள்

- பரிமாறும் பொழுது வலமிருந்து இடமாக பரிமாறிக் கொண்டு வரவேண்டும்.
- பரிமாறும் போது உப்பு, நெய், சாதம் ஆகியவற்றை கையால் எடுத்துப் பரிமாறக்கூடாது.
- தலை வாழையிலை, உட்காரும் எமக்கு இடப்பக்கம் இலையின் தலைப்பக்கம் இருக்கவேண்டும்.
- தண்ணீர் வைக்காமல் உணவு பரிமாறக்கூடாது.
- வாழையிலையை மூடும்போது எமக்கு எதிரே உள்ள இலைக் கரையை எம்மை நோக்கியவாறு மடிக்கவேண்டும்.
- வாசல் படிக்கு நேரே அமர்ந்து உண்ணக்கூடாது.
- சாப்பிட்ட பிறகு கையலம்புங்கள் என்று கூறித் தண்ணீர் கொடுக்க வேண்டும். கை கழுவுங்கள் என்று கூறக்கூடாது.
- சாப்பிடும் போது முதலில் இனிப்பு, உவர்ப்பு, புளிப்பு, கசப்பு பதார்த்தங்களை வரிசையாகச் சாப்பிட்டு பின்பு நீர் அருந்த வேண்டும்.
- சாப்பிடும் போது தவிர மற்ற நேரத்தில் இடது கையால் தண்ணீர் அருந்தக்கூடாது.

திருமதி.பி.சிவபாதம்
அருள்மிகு.அகிலாண்டேஸ்வரி
ஆலயபரிபாலனசபை,
உறுப்பினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அறநெறிப்பாடசாலைகளும் அறநெறிக் கல்வியும்

பிரம்மஸ்ரீ.ம.தர்மகுமாரசர்மா

அறம் எனப்படுது தர்மம் அல்லது நீதி எனப்பொருள் கொள்ளப்படுகின்றது. இதனாலேயே எமது சமயத்தினை சனாதன தர்மம் என்று சைவநீதி என்றும் பொதுவாக அழைக்கின்றோம். எனவே இந்து சமயமானது அறம், தர்மம், நீதி ஆகியவற்றைக் கொண்ட ஒரு வாழ்க்கை நெறிமுறை எனலாம். அந்த வாழ்க்கை நெறிமுறையினை சிறுபராயத்தில் இருந்து சிறந்த முறையில் வாழ்வதற்கு தோற்றுவிக்கப்பட்டதே அறநெறிப் பாடசாலைகள்.

எனவே இன்றைய காலகட்டத்தில் மாணவர்கள் மத்தியில் அறநெறிச் சிந்தனைகளையும், வாழ்க்கையின் விழுமியங்களையும் கற்பதற்கு வழி சமைத்துக் கொடுப்பதுடன் அறநெறிப் பாடசாலைகள் ஊடாக எமது இந்து சமய சிந்தனைகளை ஊட்டி சிறந்த நற்பண்புள்ள சமுதாயத்தினை கட்டியெழுப்புவதே இன்றைய அறநெறிப் பாடசாலைகளினது முக்கிய நோக்கமாகத் திகழ்கின்றது.

ஒரு மனிதன் எவ்வளவுதான் கல்வி கற்றவனாக இருந்தாலும் அவனிடம் அறநெறிப் பண்புகள் இல்லாமல் போனால் அந்தக் கல்வியால் எந்தவித பயனும் ஏற்படப் போவதில்லை. பிள்ளைகளை அறநெறிப் பாடசாலைகள் ஊடாக வளர்த்தெடுக்கப்படுகின்ற பொழுதே அப்பிள்ளையானது எதிர்காலத்தில் பெற்றோருக்கும், சமூகத்திற்கும் பயன்படக்கூடிய சிறந்த பிள்ளையாக திகழமுடியும். அறநெறிப் பாடசாலையே ஒரு மாணவனை பூரண மாணவனாக உருவாக்குகின்றது.

ஒரு மனிதன் நல்வாழ்க்கை வாழ்வதற்கு அறநெறிப் பண்புகள் அவசியம் இதனையே வள்ளுவப் பெருந்தகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அறத்தான் வருவதே இன்பம் மற்றெல்லாம்
புறத்த புகழும் இல"

என தனது திருக்குறளில் கூறுகின்றார். அதாவது ஒருவன் அறநெறியில் நின்று வாழ்வதன் பயனாகவே வருவதே இன்பமாகும். மற்றவையெல்லாம் இன்பம் ஆகாது என்பதுடன் புகழும் அல்லாதது என்பதையே மேற்சொன்ன குறளின் பொருளாக எடுத்துக் காட்டப் படுகின்றது.

எனவே மேற்படி வாழ்வினை வாழ முற்படுகின்ற பிள்ளைகள் அறநெறிக் கல்வியினை சிறந்த முறையில் கற்பதற்கு அறநெறிப் பாடசாலைகள் கிராமங்கள் தோறும் தோற்றுவிக்கப்பட்டு சகல வழிகளுடனும் அறநெறிக் கல்வித் திட்டத்திற்கு அமைவாக சிறந்த முறையில் கற்பிக்கப்பட்டு வருகின்ற பொழுதும் பல பெற்றோர்களும், மாணவர்களும் இவ் அறநெறிப் பாடசாலைக் கல்வியில் அக்கறை காட்டாமல் இருப்பது பிள்ளைகளுடைய எதிர்கால நல்வாழ்க்கைக்கு ஊறுவிளைவிப்பனவாகவே அமையும் என்பதோடு அறநெறிப் பாடசாலைக்கு முறையாகச் சென்று அறநெறிப் போதனைகளுடன் கல்வி கற்கின்ற பிள்ளைகளே எதிர்காலத்தில் பெற்றோர்களுடைய இலட்சியக் கனவினை நனவாக மாற்றக்கூடியவர்கள் என்பது திண்ணம்.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான் உறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"

என்பதற்கு இணங்க இவ்வுலக வாழ்க்கையினை வாழ்கின்ற ஒருவன் அறநெறிப் பண்புகளைக் கடைப்பிடித்து வாழ் அவன் வான் உலகம் செல்கின்ற பொழுது அவன் தெய்வதற்கு சமமாக வைத்து மதிக்கப் படுவான் என கூறப்படுகின்றது. இவ்வாறான ஒரு உயரிய வாழ்க்கையினை வாழவேண்டும் எனில் எமக்கு உதவுவது அறநெறிக் கல்வியே ஏனைய கல்விகள் எமது அறிவினை வளர்க்க உதவுமே அன்றி ஒழுக்கத்தினையும் ஆத்மீக சக்தியினையும், மன அமைதியினையும் ஒரு போதும் தராது, எனவே சமய பெரியார்கள் எமக்குக் காட்டிய அறநெறி வழிகளை இளம் சிறார்களுக்கு காட்டி அவர்களை வாழ்க்கையின் குறிக்கோள்களையும் இலட்சியங்களையும் அடைய நல்வழிப்படுத்துவதே அறநெறிப் பாடசாலைகளின் நோக்கமாக இருப்பதோடு இதனையே புதியகல்வி சீர்திருத்தங்களிலும் வலியுறுத்தப்பட்டு வருகின்றமையினையும் காணலாம்.

எனவே பெற்றோர்களும் சமய,சமூக ஆர்வலர்களும் இந்நோக்கத்தினை நிறைவேற்ற அறநெறிப் பாடசாலைகளோடு இணைந்து அதனை வளர்த்தெடுக்க வேண்டியது எம் அனைவருடைய கடமை என்பதனை மறந்துவிட வேண்டாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இந்துக்களே! எம்மையும் எம் சமயத்தினையும் வளர்க்க வேற்றுக்கிரகத்தில் இருந்து எவரும் வரப் போவதில்லை. நாமே எம்மையும் எம் சமயத்தினையும் வளர்க்கவேண்டும் என்பதை நினைவிற் கொண்டு எமது சோம்பேறித்தனங்களை உதறித் தள்ளிவிட்டு இலட்சிய நோக்குடன் இன்றே புறப்படுங்கள்"

பிரம்மஸ்ரீ.ம.தர்மகுமாரசர்மா
தலைவர்
அறநெறிப்பாடசாலைகள் இணையம்,
மன்னார் மாவட்டம்.

1. இல்லை என்று ஒரு போதும் சொல்லாதே
உன்னால் இயலாது என்றும் ஒரு நாளும் எண்ணாதே

2. ஒரு மலரில் முள்ளும் உண்டு, மணமும் உண்டு
ஒரே மனிதனிடம் குறையும் உண்டு, குணமும் உண்டு.

3. பணத்தை நாம் ஆளவேண்டும்
பணம் நம்மை ஆளவிடக்கூடாது.

4. பாதை வகுத்தபின் பயந்து என்ன லாபம்?
பயணம் நடத்திவிடு, கிடைத்திடும் லாபம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தாய்த் தெய்வ வழிபாட்டின் தொன்மையும் மகிமையும்

**தோற்றமும் வளர்ச்சியும்**

"யாதொரு தெய்வம் கொண்டீர் அத்தெய்வமாகியாங்கே
மாதொரு பாகனார் தாம்வருவார்"

எல்லாவற்றிலும் மேலான இறை பரம்பொருளை சைவர்களாகிய நாங்கள் தாயாகவும், தந்தையாகவும் போற்றிவழிபடுவது வழமையானதாகும். இதனையே சம்பந்தர் "தாயுநீயே தந்தைநீயே சங்கரனே..." எனவும் "தாயினு(ம்) நல்ல தலைவரென் றடியார்..." எனவும், நாவுக்கரசர் " ஆணாகிப் பெண்ணாய வடிவு தோன்றும்..." எனவும் பலவாறாக இறைவனின் மேலான திவ்விய சக்தியை பெண் உருவம் கொடுத்து வழிபட்டதனாலேயே இன்று சைவ சமயத்தில் சக்தி வழிபாடானது சிறப்புற்று விளங்குவதினை நோக்க முடிகின்றது. அந்த வகையில் சைவசமயத்தில் தாய்த்தெய்வ வழிபாடானது பின்வரும் கால கட்டங்களாக பிரித்து நோக்க முடியும். அவை

1. வரலாற்றுக்கு முற்பட்டகாலம்
2. வரலாற்றுக்காலம் என்பனவாகும்

வரலாற்றுக்கு முற்பட்டகால தாய்த்தெய்வ வழிபாட்டினை நோக்கும் போதுஅவை பின்வரும் கால ஒழுங்கில் நோக்க முடிகின்றது. அவை

1. சிந்துவெளிகாலம்
2. வேதகாலம்
3. புராண இதிகாசகாலம் என்பவையே அவையாகும். அந்தவகையில் சிந்துவெளி காலத்தில் தாய்த்தெய்வ வழிபாடு நடைபெற்றுள்ளதினை அக்காலத்தில் கண்டெடுக்கப்பட்ட தொல்பொருள் அகழ்வுகளில் இருந்து அறியமுடிகின்றது. அக்காலத்தில் இத் தாய்த்தெய்வ வழிபாடானது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. தரைப்பெண் வழிபாடு
2. தாய் தெய்வ வழிபாடு
3. மரதேவதை வழிபாடு

எனப் பலவகையில் வழிபட்டிருக்கலாம் என சிந்துவெளி தொல் பொருள் ஆய்வின் தந்தை சேர்ஜோன் மர்ஷல் குறிப்பிட்டுள்ளார். அதாவது அகழ்வுகளின் போது ஒரு பெண் தலைகீழாக நிற்பவளாகவும், அவளது தொப்பிளில் இருந்து ஒரு செடி முளைத்துள்ளதாகவும் இதிலிருந்து தாயானவள் "புவி ஏழையும், பூத்தவள்..." எனக்கருதி தரையை தாயாக கருதி வழிபட்டதினை அறியமுடிகின்றது.

மேலும் அகழ்வுகளின் போது பல பெண்ணுருவச் சிலைகள் கண்டெடுக்கப்பட்டதாகவும், அவை சாந்தமான கோரமான முகத்தோற்றத்தினை உடையனவான சிலைகளாக காணப்பட்டன. எனவே ஆய்வாளர்களின் கூற்றுப்படி சாந்தமான முகத்தோற்றத்தினை உடையவை இன்றுவழிபடும் சரஸ்வதி, இலக்குமி போன்ற பெண் தெய்வங்களாகவும், கோரமான முகத்தோற்றத்தை உடையவை. துர்க்கை, காளி போன்றனவாகவும் இருக்கலாம் எனக்கூறுகின்றனர்.

மேலும் மரதேவதை வழிபாட்டினை நோக்கும் போது இலட்சினை ஒன்றிலே மரத்தின் மீது பெண்கள் நிர்வான கோலத்தில் நிற்பதாகவும் அதனை மக்கள் வழிபடுவதாகவும் காணப்படுகின்றது. இதிலிருந்து மரதேவதை வழிபாடு அக்காலத்தில் இடம் பெற்றதினை அறிய முடிகின்றது. எனவே இதிலிருந்து சிந்துவெளி காலத்தில் சக்தி வழிபாடு இடம்பெற்றதினை அறியமுடிகின்றது.

தேவகாலத்தில் தாய்த்தெய்வ வழிபாடு இடம்பெற்றதினை அறிய முடிகின்றது. எனவே இதிலிருந்து சிந்துவெளி காலத்தில் சக்திவழிபாடு இடம்பெற்றிருப்பதினை அறியமுடிகின்றது.

வேதகாலத்தில் தாய்த்தெய்வ வழிபாடு இடம்பெற்றிருப்பதனை நோக்கும்போது இக்காலத்தில் உஷை, அதிதி, இராத்திரி, சந்தியா, சரசுவதி, பிருதுவி போன்ற பெண்தெய்வங்கள் இக்காலத்தில் வழிபடப்பட்டதினை அறிய முடிகின்றது. பிற்பட்ட வேதகாலத்தில் உமா, துர்க்கா, காளி, சரஸ்வதி என்ற பெயரில் சக்தி வழிபாடு செய்யப்பட்டது.

பிராமணவேத காலத்தில் குறிப்பாக கேனோப உபநிடதத்தில் சக்தியின் மகிமை முதன்முதலாக பரம்பொருள் நிலைக்கு உயர்த்தப்பட்டு வழிபாடு செய்யப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புராண இதிகாசங்களிலும் சக்தி வழிபாடு மிகவும் சிறப்பாக நடைபெற்றதினை அறியமுடிகின்றது புராண காலத்தில் சாக்தபுராணம்/ சாக்த தந்திரங்களில் சக்தி வழிபாட்டின் மகிமை எடுத்துக்கூறப் படுவதோடு, தேவியானவள் ஆன்மாக்களின் நன்மை கருதி மகிடாசுரனை சங்கரித்த வரலாறும் விரதங்களாக அனுஸ்டிக்கப்பட்டு வருவதினை அறியமுடிகின்றது.

இதிகாச காலங்களில் சக்தியானவள் பார்வதி, தாட்சாயினி, சீதையம்மன், திரௌபதை அம்மன் என்பன இக்காலத்தில் வழிபடப்பட்டன. இவ்வாறு வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலேயே தாய்த் தெய்வ வழிபாடானது. சிறப்புற்றுக் காணப்பட்டதினை அறியமுடிகின்றது.

அடுத்து தாய்த் தெய்வ வழிபாட்டின் தொன்மையினை வரலாற்றுக் காலத்தில் இருந்து நோக்கும் போது முதலில் சங்க காலத்தில் ஐவகை நிலங்களில் ஒன்றான பாலை நிலத்திற்குரிய தெய்வமாக கொற்றவை என்ற பெயரில் வழிபாடு செய்யப்பட்டாள். மேலும் பழையோள் என்ற சிறப்புப் பெயருடன் முருகனின் தாயாக சக்தி வர்ணிக்கப்பட்டு வழிபாடு செய்யப்பட்டாள்.

சங்க மருவிய காலத்திலும் குறிப்பாக சக்தி வழிபாடானது சிறப்புற்று விளங்கியமை சிலப்பதிகாரத்தில் மகாலட்சுமி, துர்க்கை என்ற பெயர்களும் கண்ணகி அம்மன் என்ற பத்தினித் தெய்வ வழிபாடும் சிறப்புற்று விளங்கியமையினை நோக்க முடிகின்றது. மேலும் மணிமேகலையில் காளி, மகாசரஸ்வதி என்ற பெயர்களும் சக்தியைக் குறிப்பனவாக அமைகின்றது. இவ்வாறு அக்காலத்தில் தாய்த்தெய்வ வழிபாடு சிறப்புற்றதினை அறியமுடிகின்றது.

பல்லவர் காலத்தில் சக்தி வழிபாடு சிறப்புற்று விளங்கியதினை நோக்கும் போது அக்காலத்தில் அழியாப் பொருட்களைக் கொண்டு சக்திக்குரிய ஆலயங்கள் கட்டப்பட்டதாகவும், குறிப்பாக திரௌபதை அம்மன் இரதக்கோயில் காணப்பட்டதினை அறியமுடிகின்றது. சம்மந்தருக்கு இறைவனால் பொற்றாளங் கொடுக்கப்பட்ட போது அதற்கு இறைவியே ஓசை கொடுத்து பின்னர் "ஓசை கொடுத்தநாயகி" எனச் சிறப்பிக்கப்பட்டாள். இதிலிருந்து அக்காலத்திலும் சக்திவழிபாடு சிறப்புற்று விளங்கியமையினை அறியமுடிகின்றது.

சோழர் காலத்தில் சக்தி வழிபாடானது சிறப்புற்று விளங்கியதனை அக்காலத்தில் தோற்றம் பெற்ற சிறப்பான ஆலயங்களில் இருந்து அறிய முடிகின்றது. குறிப்பாக விஜயாலய சோழனால் துர்க்கை அம்மனுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயில் கட்டியமையினை நோக்க முடிகின்றது. அத்தோடு நிசம்பசூதனி என்னும் ஓர் அம்மன் ஆலயமும் சிறப்புப் பெற்று விளங்கியது.

வரலாற்றுக் காலத்தில் குறிப்பாக நாயக்கர் காலத்தில் சக்தி வழிபாடானது மிகவும் பிரசித்தி பெற்றதினை அக்காலத்தில் மன்னர்களால் சக்திக்குரிய நவராத்திரி விழா சிறப்பாகக் கொண்டாடப் பட்டதினை நோக்கமுடிகின்றது. குமரகுருபர சுவாமிகளின் மீனாட்சி அம்மன் பிள்ளைத்தமிழ், சகலகலாவல்லி மாலை ஆகியனவும், அபிராமிப்பட்டரின் அபிராமி அந்தாதியும் சக்தி வழிபாட்டின் தொன்மையினை வெளிப்படுத்தி நிற்கின்றது.

தற்காலத்திலும் சைவர்கள் சிவனின் சக்தியாக கருதி உமையைப் போற்றி வழிபாடு செய்வதும் ஆகம மரபில் விக்ரக அமைப்புகளுடன் கோயில் கட்டி வழிபாடு செய்வதும் சக்தி வழிபாட்டின் முதன்மையை வெளிப்படுத்தி நிற்கின்றது. கிராமங்களிலும், மாரி அம்மன், முத்துமாரி அம்மன், காளி, துர்க்கை, கண்ணகி அம்மன் என சக்தி ஆனவள் கிராமிய மக்களின் வழிபாட்டிலும் சிறப்பாகப் போற்றப் படுவதினை அறிய முடிகின்றது.

**பிரமாண நூல்கள்**

சக்தி வழிபாட்டின் மகிமையினைக் கூறுகின்ற நூல்களாக பின்வருவன காணப்படுகின்றன.

சாக்த ஆகமங்கள் இவை ஸ்ரீ தந்திரங்கள் எனப்படும்.

- ஆனந்த லகரி
- சௌந்தர லகரி
- தேவி பாகவதம்
- ருத்திய யாமனம்
- ஞான வர்ணம்
- தந்திர ராரம்
- சாரதா திலகம்
- பிரபஞ்ச சாரம்
- திரிபுர ரகசியம்
- காமகலா விலாசம் போன்றவற்றை குறிப்பிட்டுக் கொள்ளலாம்.

## சக்தி தத்துவம்

எல்லாம் வல்ல இறைவனின் மேலான பரம்பொருளை சக்தியாகக் கருதி வழிபடுகின்றோம். அந்த வகையில் சக்தியின் தத்துவத்தினை நோக்கும் இடத்து சக்திதான் தெய்வத்திற்கெல்லாம் தெய்வம் சக்தி இல்லாமல் சிவத்துவம் ஒன்றையும் இயக்க மாட்டாது. முடிவான உள்பொருளும் சக்தியும் பிரமுமே ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சக்தி ஆனவள் இவ் உலகெங்கனும் நீக்கமற நிறைந்துள்ளாள். சக்தியும் சக்தியினை உடைய பொருளும் அதுவே வேறானவையல்ல.

சக்தி ஆனவள் படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் முத்தொழில்களையும் புரிகின்றாள்.

சக்திக்கு இரு அம்சங்கள் உள்ளன. அவை விருத்தி என்னும் சித் சக்தியும், அவித்தியை என்னும் மாய சக்தியும் ஆகும். இதில் சித் சக்தி ஒளிமயமானது. அறிவு மயமானது மாயா சக்தி தன்னை மறைத்து உலகை வெளிக்காட்டுவது அச் சக்தியே எல்லாவற்றையும் உண்டாக்குகிறது.

சக்தி ஆனது தூலம், சூக்குமம், பரம் என்னும் மூன்று ரூபங்களை உடையது. கரசரணாதி அவையங்களோடு கூடியது தூலம். மந்திர அட்சரங்களால் மாயமாய் இருப்பது சூக்குமம். வாசனா மயமாயிருப்பது பரம் ஆகும்.

வெளியில் தெரியாத உருவம் உள்ள தேவியானவள் காளி உருவெடுத்து உலகை சிருஷ்டிக்கின்றாள். இலக்குமியாக இருந்து உலகுக்கு வளத்தையும், செல்வத்தையும் கொடுக்கின்றாள். சரஸ்வதி உருவில் இருந்து அறிவைக் கொடுக்கின்றாள். உலகை அழிக்கும் போது மகாமாரி உருவெடுக்கின்றாள். இவ்வாறு சக்தி தத்துவங்கள் பல்வேறு வகையில் பொருள் உணர்ந்து கூறப்படுகின்றது.

**சக்தி வழிபாட்டு முறைகள்**

இறைவனது வழிபாடுகளில் தாய்த்தெய்வ வழிபாடானது மிகவும் சிறப்பு வாய்ந்தது ஆகும். சக்தி ஆனவள் ஸ்ரீ லலிதா சகஸ்ட நாமங்களினால் அர்ச்சித்தும் சகலகலாவல்லி மாலை அபிராமி அந்தாதி போன்ற தோத்திரப் பாடல்களைப் பாடியும் வழிபாடு செய்வர். சக்திக்கு ஸ்ரீ சக்கரம் அல்லது யந்திர தகட்டில் மேரு, கைலாசம். பூமி என மூன்று விதமான ரேகைகளைக் கொண்டு மூன்று வலயங்கள் 43 முக்கோண ங்கள் என்ற அமைப்பில் உருவகித்து வழிபாடு செய்வர்.

மேலும் பூதசுத்தி, நியாசம், பிராணபிரதிட்சை, முத்திரை என்னும் அம்சங்களை உள்ளடக்கிய சடங்குகளோடு கூடிய வழிபாட்டினை மேற்கொள்ளல் இங்கு பூத சுத்தி என்பது ஒருவர் தனது உடலை முதலில் சுத்தம் செய்தல் வேண்டும். நியாசம் என்பது மந்திரங்களை உச்சரித்துக் கொண்டு உடலின் பல பாகங்களையும் விரல் நுனியாலும், வலக்கையை உள்ளங்கையாலும் தொடுதல். பிராண பிரதிட்சை என்பது விக்கிரகத்தில் தெய்வப் பிரசண்ணத்திற்காக வேண்டி வழிபாடு செய்தல் முத்திரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பது வழிபாடு செய்பவன் தன் மனதில் உள்ள எண்ணங்கள் ஆசைகளை கைகளின் மூலம் வெளிக்காட்டுவதனைக் குறிக்கின்றது.

சக்தி வழிபாட்டில் சமயதீட்சை, விரத அனுட்டானங்களை மேற்கொண்டு வழிபாடு செய்தல் மிகவும் சிறப்பானதாகும். ஒரு குழந்தை ஆனது தனது பிரச்சனையைத் தீர்ப்பதற்கு முதலில் தாயை அனுகுகின்றாள். அவ்வாறு எமக்கு ஏற்படும் பிறவித்துன்பத்தில் இருந்து நாம் விடுபட வேண்டுமாயின் சக்தி வழிபாட்டினை மேற்கொள்ள வேண்டும். மேலும் விரதத்தை வேண்டி துர்க்கையையும், செல்வத்தை வேண்டி இலக்குமியையும், கல்வியை வேண்டி சரஸ்வதியை இம்மைப்பயனை வேண்டியும் சக்தி வழிபாடாற்றப்படுகின்றாள்.

## சக்திக்குரிய விரதங்கள்

சக்திக்குரிய விரதங்களாகப் பின்வருவன காணப்படுகின்றன. அவை

1. உமா சுக்கிரவார விரதம் (வெள்ளிக்கிழமை விரதம்)
2. சாவித்திரி விரதம்
3. சுவர்ண கௌரி விரதம்
4. காரடையா நோன்பு
5. வரலட்சுமி விரதம்
6. நவராத்திரி விரதம்
7. கேதார கௌரி விரதம் முதலியவற்றைக் குறிப்பிட்டுக் கொள்ளலாம்.

## சக்திக்கு வழங்கப்படும் மறு பெயர்கள்

தேவி, பார்வதி, கௌரி, சகி,, துர்க்கை, பைரவி, சாமுண்டி, குமாரி, காளி, கபாலி, சண்டி, கார்த்தி யாயினி, பவானி, அகிலாண்டேஸ்வரி, முத்துமாரி போன்ற நாமங்களைக் குறிப்பிடலாம்.

## சமய சமூக முக்கியத்துவம்

சைவசமய வழிபாடுகளில் சக்தி வழிபாடானது சிறப்புற்று விளங்குவதற்குக் காரணம் சிவபிரானின் சக்தியாக உமை உருவகிக்கப்பட்டு வழிபாடு செய்யப்படுகின்றது.

சைவ சித்தாந்த தத்துவத்திலே சிவபெருமானுக்கு உண்மைப் பொருளாக பராசக்தியும் உடமைப் பொருளாக திரோதான சக்தியும் (சுத்தமாயை) கொள்ளப்படுகின்றது. மேலும் இறைவனின் திருவருளே பராசக்தி அவளைத் துணையாக கொண்டே இறைவனை ஆன்மாக்கள் அடையலாம் என்ற தத்துவமும் சித்தாந்தத்தில் வலியுறுத்தப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாக்த தரிசனத்தில் பெண்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப் பட்டுள்ளது. பெண்களை இம்சிப்பதையும், சாதி வழக்கத்தையும் தடை செய்கின்றது. வேள்விகளில் பெண் மிருகங்கள் கொல்லப் படக்கூடாதெனக் கூறகின்றன. கோ்நிர்விர்ணத் தந்திரத்தில் தன்னுள் மனைவியை கொடூரமாகப் பேசுபவனும், திருமணத்திற்கு முன்பு பெண்களின் கல்வியைக் கட்டுப்படுத்துபவனும் ஒருநாள் முழுவதும் உண்ணா நோன்பும் இருக்கவேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

வட இந்தியாவில் புரட்டாதி மாதத்தில் வரும் நவராத்திரியை "தசரா" என்று அழைத்து சிறப்பித்து வழிபாடு செய்வர். அக்காலங்களில் கொலுக்களை வீடுகளில் வைத்து வழிபாடு செய்வர். பத்துவயதிற்குட் பட்ட சிறுமிகளை சக்தியாகப் பாவித்து வழிபாடு செய்வர். இவ்வழக்கம் இன்றுவரை இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது.

சைவர்கள் சக்தியை காத்தல் கடவுளாகிய விஷ்ணுவின் தங்கையாகக் கருதி வழிபடும் வழக்கம் காணப்படுகின்றது.

இந்து சமூக மக்கள் தமது இவ்வுல வாழ்வுக்கு வேண்டிய வீரம், செல்வம், கல்வி ஆகியவற்றை சக்தியிடம் இருந்து பெற்றுக் கொள்ளும் நோக்குடன் வருடா வருடம் நவராத்திரி விரதத்தை அனுஷ்டித்து வருவதும் நவராத்திரி இறுதி நாளாகிய "விஜய தசமி" யை மிக முக்கிய புண்ணிய நாளாகக் கருதி செய்யப்படுவர். விஜய தசமியன்று ஏடு தொடக்கல், புதிதாகக் கலைப் பயிற்சிகளைத் தொடங்கல் எனும் விடயங்கள் பக்திபூர்வமாக மக்களால் நிறைவேற்றப்பட்டு வருதல் வழக்கமாகும். விஜய தசமி நாள் அன்று ஆலயங்களில் "மகிடாசுர சங்காரம்" விசேட அம்சமாக நிகழ்தல் குறிப்பிடத்தக்கது.

சமூகத்தில் வீரத்துக்கும், செல்வத்திற்கும், கல்விக்கும் முக்கியத்துவம் அளித்து செயற்படும் தன்மை ஒருவனது சமூக அந்தஸ்தும், உயர்வும் இம்மூன்று நிலைகளினாலும் நிர்ணயிக்கப் படுவதால் இவற்றின் முக்கியத்துவம் சமூகத்தில் முதன்மையானது.

கிராமப்புறங்களில் சக்தி வழிபாடானது கண்ணகி, சீதையம்மன், திரௌபதி அம்மன், பேச்சியம்மன், முத்துமாரி அம்மன், கொத்தி, நாச்சிமார், சப்தகன்னி, காளி என்ற உருவத் தன்மையில் போற்றி வழிபாடு செய்யப்படுகின்றது. இங்கு ஆகம நெறிக்கு உட்படாத வழிபாட்டு அம்சங்களுடன் மேற்குறித்த தெய்வ வழிபாடுகள் இடம்பெறுகின்றன. பொங்கல், மடைகதவு திறத்தல், குளிர்த்தி, மடிப்பிச்சை எடுத்தல் போன்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சடங்கு முறைகளுடன் வழிபாடுகள் மேற்கொள்ளப்படுகின்றது. இதனை இன்று வரையும் கிராமப்புறங்களில் கண்டு கொள்ளலாம்.

கிராமப் புறங்களில் இன்றுவரை கூட அம்மை நோய்கள் சக்தியின் பார்வையால் ஏற்பட்டதெனக் கருதி அவளைச் சாந்தப்படுத்தி நோயின் தாக்கத்தில் இருந்து விடுபடலாம் என்ற நம்பிக்கை ஐதீகமாக நிலைத்து நிற்பதினைக் குறிப்பிடலாம்.

இந்துப் பெண்கள் மத்தியில் பிள்ளைச் செல்வம் வேண்டி சக்தியை நோக்கி மடிப்பிச்சை எடுத்தல், சக்தித் தல யாத்திரைகள் மேற்கொள்ளும் வழக்கம் காணப்படல்.

செல்வத்தில் சிவனின்றி சக்தியில்லை. சக்தியின்றிச் சிவமில்லை என்ற தத்துவம் வலுப்பெற்று நிற்பதுவும், இந்து சமூகத்தில் இதன் அடிப்படையில் ஆண். பெண் சமத்துவத் தன்மை பேணப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

ஓம் சக்தி ஓம்

திரு.எஸ்.றமேஸ் BA (Cey)Dip in Teach Hin (Spl)Dip in Edu (Mgt)
ஆசிரியர்.
மன்/ சித்திவிநாயகர் இந்துக்கல்லூரி,
(தேசிய பாடசாலை)
மன்னார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆலய அமைப்பும் விளக்கமும்

## திருமூலரின் திருமந்திரம்

"உள்ளம் பெருங் கோயில் ஊனுடம் பாலயம்
வள்ளற் பிரானார்க்கு வாய் கோபுர வாசல்
தெள்ளத் தெளிந்தார்க்கு சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்தும் காளா மணி விளக்கே"
என விளக்குகிறது இதையே ஆகமங்கள்
சேஷத்திரம் சரீரப்பிரஸ்தரம்" என்று கூறுகின்றன.

ஆதியும் அந்தமும் இல்லாத அரும்பெரும் சோதி வடிவான இறைவன் ஆன்மாக்களுக்கு அருளுவதற்காக உருவம் கொண்டு எழுந்தருளியிருக்கும் இடமே திருக்கோயிலாகும். இறைவனை மனம் ஒருமைப்படுத்தி வழிபாடு நிகழ்த்துவதற்குரிய தெய்வத்தன்மை பொருந்திய உயர்ந்த இடமே கோயிலாகும். இத் திருக்கோயில்கள் மக்களின் உடலமைப்பு முறையிலே அமைக்கப்பெற்றுள்ளன. ஆகவே மனதில் இறைவனை வழிபடும் முறையைத் திருக்கோயில்களில் நாம் வழிபடும் முறையின் மூலம் அறிந்துகொள்ள முடியும்.

பூமியின்கீழ் எவ்விடத்தும் நீர் பரந்திருந்தாலும் குளம், கேணி, கிணறுகள் தோண்டி நீரை எடுப்பது போலும், பசுவின் உடம்பில் எங்கும் பால் பரந்திருந்தாலும், அதன் மடியினிடமாகவே பெறமுடியும் என்பது போலவும் உள்ளதே இறைவனுக்கு ஆலயம் அமைத்து வழிபாடு செய்வது ஆகும். அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் ஆனந்த மூர்த்தியாகி அருளொடு நிறைந்த கடவுளை ஆலயங்களில் இலகுவாய் வழிபட்டு அடையமுடியும் என்ற உண்மையை உணர்ந்தே" ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்றும், "திருக்கோயில் இல்லாத திருவில் ஊர் அடவி காடே" என்றும் ஆன்றோர் கூறியுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமைப்பு முறை

ஒரு மனிதன் மேல்நோக்கிப் படுத்திருக்கும் முறையாக அமைந்துள்ளது. ஆலயம் அவற்றைப் பின்வருமாறு கூறலாம்.

1. கர்ப்பக்கிரகம் - தலை - மூலாதாரம்
2. அர்த்த மண்டபம் - முகம்- சுவாதிட்டானம்
3. மகாமண்டபம் - மார்பு - மணிபூரகம்
4. ஸ்நபன மண்டபம்- வயிறு - அநாகதம்
5. அலங்கார மண்டபம் - தொடை - விசுத்தி
6. சபாமண்டபம் - முழங்கால்- ஆக்ஞை

ஆலயம் முப்பத்தாறு தத்துவங்களையும் அப்பாலுள்ள ஞானார்த்தங் களையும் அடக்கியுள்ளது. இறைவன் ஒன்றாகவும், வேறாகவும் உடனாயும் நிற்கும் நிலையை விளக்குகிறது.

1. முன்கோபுரம் - பூதான்மா, இது தூலலிங்கத்தைக் குறிப்பது
2. மகாபலிபீடம் - அந்தரன்மா, பத்திரலிங்கத்தைக் குறிப்பது
3. கொடி ஸ்தம்பம் - தத்துவான்மா, இது துவச லிங்கத்தைக் குறிப்பது
4. மூலமூர்த்தி - சீவான்மா, இது சதாசிவ லிங்கத்தைக் குறிப்பது
5. ஆசாரியர் - குருக்கள், அர்ச்சகர், மந்திரான்மா
6. பரவெளி - பரமான்மா, இது அண்டலிங்கம்.

**ராஜகோபுரம்** – "கோபுர தரிசனம் கோடி புண்ணியம்", "கோபுர தரிசனம் பாவவிமோசனம்" என்பன ஆன்றோர் வாக்கு. சுப்பிரதேச ஆகமம்" தூரஸ்ய சிகரே த்ருஷ்ட்வா யாவாத் கைலாச பூதலம்" என்று குறிப்பிட்டுள்ளது. அதாவது கோபுரத்தில் சிகரத்தை எவ்வளவு தூரத்தில் இருந்து பார்க்கத் தெரியுமோ அவ்வளவு தூர இடமும் பூலோக கைலாசம் என்று அழைக்கப்படும். கோபுர அடுக்குகள்

1. மூன்று அடுக்கு - சாக்கிரம்
2. ஏழு அடுக்கு - ஐம்பொறிகளுடன் மனம், புத்தி
3. ஒன்பது அடுக்கு- ஐம்பொறிகளுடன் மனம், புத்தி, சித்தம், அகங்காரம்.
4. ஐந்து அடுக்கு - ஐம்பொறிகள்

## கொடிமரம்

கொடிமரம் சூக்குமலிங்கம் எனப்படும். கொடிமரமானது மும்மூர்த்திகளையும் ஐந்தொழில்களையும் உணர்த்தி நிற்கிறது. அசுரர்களை அகற்றவும் சிவகணங்களையும், தேவர்களையும் அழைக்கவும், ஆலயத்தைக் காக்கவும், அடியார்களைப் பாதுகாக்கவும், கொடிமரம் வைக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித குண்டலினிச்சக்தி உறங்கிக் கிடக்கும் மூலாதாரம் கொடிமரமாகவும், கொடிமரத்திலுள்ள 32 வளையங்களும் முள்ளந்தண்டிலுள்ள 32 எழும்புகளையும் கொடிக்கயிறுகள் இடகலை, பிங்கலை என்னும் நாடிகளையும் குறிக்கின்றன. ஆன்மா யோகம் பயிலும் போது இவற்றின் வழியே பேரானந்தத்தை எய்துகிறது.

சைவசித்தாந்திகள் உயிர் பாசத்தினை நீக்கி பதியை அடையும் தத்துவமே கொடியேற்றம் என்று கூறுவர். கொடிமரம் சிவனையும், கொடிச்சீலை ஆன்மாவையும். தருப்பைக்கயிறு பாசத்தையும் கொடிச் சீலையின் உள்ளே வைத்து மூடப்பட்டுள்ள மஞ்சள் பூசப்பட்ட நூற்கயிறு திருவருளையும் குறிப்பன என்று சிவாகமம் கூறுகின்றது.

## பலிபீடம்

பத்திரலிங்கம் என அழைக்கப்படும் நமது காமக் குரோதாதி அறுபகைகளையும், ஆசை முதலியவற்றையும் பலியிட வேண்டும் என்ற உயர்ந்த தத்துவத்தை இது சுட்டிக் காட்டுகிறது.

## நந்தி

பல பீடத்திற்கு முன்பாக மூலஸ்தானத்தை நோக்கியவாறு எந்த மூலமூர்த்தி அமைந்துள்ளதோ அந்த மூலவரின் வாகனங்கள் வைக்கப்பட்டிருக்கும். நந்தி தூய ஆன்மாவைக் குறிக்கும். நந்தி மூலமூர்த்தியை நோக்கி அதற்கு எதிர்முகமாக இருக்கிறது. நந்தி மூலமூர்த்தியை நோக்கியுள்ள நிலை ஆன்மா தன்னோடு அநாதியே கலந்துள்ள பாசமாகிய உலகப் பொருள்களின் பற்றினைக் கைவிட்டு, அவற்றிற் பாராமுகமுடையதாய், சிவத்திற் பற்று வைத்து அவரைச் சரணடைந்து அவரருளை வேண்டி சிவபுண்ணிய வழியில் நின்றால் சிவத்தோடு அத்துவிதமாகிய பேரின்ப அனுபவத்தைப் பெறமுடியும் என்பதை உணர்த்துகிறது.

## திரைச்சீலை

திரோதான சக்தியை காட்டுவது

## பிரகாரங்கள்

திருக்கோயில்களில் பல பிரகாரங்கள் காணப்படும். அவை உணர்த்தும் பொருள் பின்வருமாறு அமையும்.

1. மூன்று வீதி – தூல சூக்கும காரண தேகங்களைக் குறிக்கும்.
2. ஐந்து வீதி – பஞ்ச கோசங்களைக் குறிக்கும்.
3. ஏழு விதி – ஸப்த தாதுக்களைக் குறிப்பது (தோல், மஞ்சள், இறைச்சி, சுவேதநீர், இரத்தம், எலும்பு, சுக்கிலம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அருள்மிகு அகிலாண்டேஸ்வரி அம்பாள் ஆலய தொண்டர் சபை



## அருள்மிகு அகிலாண்டேஸ்வரி அம்பாள் ஆலய அறநெறி பாடசாலை மாணவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலய அமைப்பு, விளக்கம் ஆகியவற்றையும் விளக்கி கூறுவ தாயின் மேலும் கூறலாம். ஆனால் கட்டுரைகள் அமைவாகவே சுருங்க கூறப்பட்டுள்ளது. எனவே எமது இந்துசமய பண்பாட்டின் நிலைக்களமாக விளங்கும் ஆலயங்களின் அமைப்பினையும் அதன் விளக்கத்தினையும் அறிந்து ஆலய வழிபாட்டிலே ஈடுபட்டு இறைவன் திருவடி அடையவேண்டும் என்பதே எமது சமயத்தின் குறிக்கோள் ஆகும்.

வாழ்க சைவம்! வளர்க சைவஞானம்!
மலர்க கும்பாபிஷேக மலர்!!!

ஆக்கம்
S.T சோபி
அருள்மிகு அகிலாண்டேஸ்வரி அம்பாள்
ஆலய தொண்டர் சபை உறுப்பினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆகமங்கள் கூறும் ஆலய கிரியைகள்

இறை வழிபாட்டை எளிதாக்கும் திருவுருவ வழிபாட்டு முறையிலே வழிபடுவோர் தம் வழிபாட்டை செயல்களிலே ஈடுபடுத்தி சர்வ வியாபகமாய் எங்கும் நிறைந்திருக்கும் இறைவனை அகத்திலும், புறத்திலும் பூசித்தலே "கிரியைகள்" ஆகும். ஆன்மா லயப்படும் இடமாகிய ஆலயத்திலே மனம், வாக்கு, காயம் என்னும் மூன்றாலும் மெய்யன்போடு இறைவனை வழிபட ஒன்றுகூடும் பக்தர்களையும் இறைவனையும் இணைக்கும் பாலமாக இருப்பது ஆலயங்களில் இடம்பெறும் ஆலயக்கிரியை வழிபாடுகளாகும்.

ஆன்ம ஈடேற்றத்தை நோக்காக கொண்டு செய்யப்படும் கிரியைகள் ஆன்மார்த்த கிரியைகள், பரார்த்த கிரியைகள் என இருவகைப்படும். ஆன்மாக்களின் சொந்த நலனுக்காக ஆன்மார்த்த கிரியைகளும், ஆலயத்தில் வாழும் அனைத்து உயிர்களின் நன்மைக்காக பரார்த்த கிரியைகளும் ஆலயங்கள் தோறும் நிகழ்த்தப்படுகின்றன.

மேலும் இவ் ஆலயக் கிரியைகளை கர்ஷணம், பிரதிஷ்டை, உற்சவம், பிராயச்சித்தம் என நால்வகைப்படுத்தலாம். கோயில் கட்டும் நிலத்தை தெரிவு செய்து அதனை மட்டமாக்கி கோயில் கட்டுவதற்கான ஆயத்தங்களை மேற்கொள்ளும் போது நிகழ்த்தப்படும் கிரியைகள் கர்ஷணக் கிரியையினுள் அடங்கும். ஆலயங்களில் விக்கிரகங்களை பிரதிஷ்டை செய்து அவற்றிற்கு செய்யப்படும் கிரியை பிரதிஷ்டை எனப்படும். இதை ஆவர்த்தனம், அநாவர்த்தனம், புனராவர்த்தன அந்தரிதம் என நால்வகையாக பிரிக்கலாம்.

உற்சவம் என்பது உத்தமமான யாகம் எனப்பொருள்படும். இது ஒருவகை விழாவாகும். உற்சவங்களின் பலனாவது படைத்தல் தொழிலைக் குறித்து நிற்கும் போக மோட்சங்களை அருளுதலே ஆகும். பைதிருகம், சௌக்யம், ஸ்ரீ கரம், பார்த்திபம், சாத்துவிகம், சைவம் என உற்சவம் அறுவகைப்படும். அசுரர் அழியவும், தோஷங்கள் நீங்கவும் உலகில் சாந்தி, சமாதானம், மகிழ்ச்சி நிலவவும் பிராணிகள் சுகமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழவும் என பல்வேறு எதிர்பார்க்கைகளுக்காக உற்சவங்கள் நடாத்தப்படுகின்றன. நித்திய, நைமித்திய கிரியைகளில் ஏற்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்து அவற்றை பூரணத்துவம் அடையச் செய்வதற்காகவே பிராயச்சித்தக் கிரியைகள் செய்யப்படுகின்றன. இவை ஜபமாகவோ, அபிஷேகமாகவோ, ஹோமமாகவோ அமையலாம்.

ஆலயங்களிலே நிகழ்த்தப்படும் கிரியைகள் பரார்த்த கிரியைகளாக இருப்பதையே இந்துசமயம் எதிர்பார்த்து நிற்கிறது. சமூக நலனை முக்கியமாக கொண்டே பரார்த்த கிரியைகள் இடம்பெறுகின்றது. பரார்த்த கிரியைகளினும், நித்திய, நைமித்திய கிரியைகள் அடங்கு கின்றன. இவை பலனை எதிர்பாராது செய்யப்படும் கிரியை களாகும். இவற்றை பலனை எதிர்பார்த்து செய்யப்படும் போது காமியக் கிரியைகளாகின்றன.

தினம்தோறும் ஆலயங்களிலே ஆறுகாலப் பூசையாக நித்திய கிரியைகள் இடம்பெறுகின்றன. உஷாக்காலப்பூசை, காலைச் சந்திப் பூசை, உச்சிக்காலப்பூசை, சாயங்காலப்பூசை, இரண்டாம் சாமப்பூசை, அர்த்த சாமப்பூசை என்னும் ஆறுகாலப் பூசைகளும் "ஷட்காலப் பூசைகள்" எனவும் அழைக்கப்படுகிறது. ஆலயங்களில் மரபையும் அவற்றின் வசதியையும் பொறுத்து ஒருகாலம் முதல்ஆறுகாலம் வரை நித்திய கிரியைகள் இடம்பெறுகின்றன.


ஆலயத்தில் நித்திய கிரியைகள் நிகழும் போது அறிந்தோ, அறியாமலோ ஏற்படும் மந்திரக் குறைவு. கிரியைக் குறைவு. ஷரணக் குறைவு, திரவியக்குறைவு, சிரத்தை குறைவு போன்றவற்றை நீக்கி பூரணத்துவத்தை ஏற்படுத்தி இறைவனின் அருளை பரிபூரணமாக பிரகாசிக்கச் செய்யும் வண்ணம் நிகழ்த்தப்படும் கிரியைகள் நைமித்தியக் கிரியைகள் ஆகும். உதாரணமாக சுக்கிரவாரம், பிரதோஷம், நடேசர் அபிஷேகம், ஆடிப்பூரம், கந்தஷஷ்டி போன்ற விஷேட தினங்களில் நிகழும் கிரியைகளை குறிப்பிடலாம். இவ் நைமித்திய கிரியைகள் வாரம் ஒரு முறையோ, மாதம் ஒருமுறையோ, வருடம் ஒரு முறையோ பன்னிரண்டு வருடங்களுக்கு ஒருமுறையோ இடம்பெறலாம்.

சிவாகம முறைப்படி அமைக்கப்பட்ட ஆலயங்களிலே சிற்ப சாஸ்திர முறைப்படி அமைந்த விக்கிரகங்களுக்கு ஆகம முறைப்படி நிகழும் கிரியை வழிபாடுகளை நெறிதவறாமல் கடைப்பிடித்து கிரியை நெறியின் பயனான சாமீப முத்தியடைவோமாக.

சரண்யா ரவிச்சந்திரன்
ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி அம்பாள் ஆலய தொண்டர் சபை கணக்காய்வாளர்
பொறியியல் பீட மாணவி,
மொறட்டுவை பல்கலைக்கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நன்றி நவிலல்

அன்னை அருள்மிகு அகிலாண்டேஸ்வரி அம்பாளின் பாதாரவிந்தங்களைப் பணிந்து போற்றி வணங்குகின்றேன்.

அன்னையின் ஆலயம் 25 வருடகால வரலாற்றினைக் கொண்டதாக இருப்பினும் அது 1998ம் ஆண்டு கார்த்திகைத் திங்கள் 2ம் நாள் முதலாவதான புனராவர்த்தன கும்பாபிஷேகத்தைக் கண்டுள்ளது. அந்த வகையில் குறித்த திகதியிலிருந்து 12 ஆண்டுகளைப் பூர்த்தி செய்துள்ள அம்பாளது ஆலயத்துக்கு ஆகம விதிகளின்படி 2 ஆவது மகாகும்பாபிஷேகப் பெரும் விழாவை நடாத்தி வைப்பது அவசியமாகும்.

ஆதலால் இதுபற்றி 2010ம் ஆண்டின் முற்பகுதியிலும், கடைசிப் பகுதியிலும் கூடி ஆராய்ந்த ஆலய பரிபாலன சபையின் நிர்வாக சபையும், பொதுச்சபையும் ஆலயத்தின் கட்டிடப் பகுதியிலும், கூரைகளிலும் ஏற்பட்டுள்ள உடைவுகள், சிதைவுகள், வெடிப்புகள் ஆகியவற்றை சீரமைத்து மகா கும்பாபிசேகம் செய்யும் போது ஏற்படும் செலவுகளுடன் மேலும் ஒரு சிறு தொகைப்பணத்தை சேர்த்து செலவோடு செலவாக அக்காலத்தில் ஆகமவிதிகளையோ, அளவுப் பிரமானங்களையோ கருத்திற் கொள்ளாது அமைக்கப்பட்டுள்ள கருவறை முதல் மாமண்டபம் வரையான கட்டிடப் பகுதிகளை அப்புறப்படுத்திவிட்டு ஆகம விதிகளுக்கும், அளவுப்பிரமானங்களுக்கும் உட்பட்டதாக ஆலயம் மீள புனமைக்கப்பட்டு மகா கும்பாபிசேகம் செய்யப்பட வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது.

குறித்த தீர்மானங்களுக்கு ஏற்ப 20.11.2010 திகதியன்று ஆலயம் பாலஸ்தாபனம் பண்ணப்பட்டு 24.11.2010 திகதியன்று அடிக்கல் வைக்கப்பட்டு முதலில் மூலஸ்த்தான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டது. மிகக் குறுகிய காலத்தினுள்ளேயே மூலஸ்தான மண்டபம், அர்த்த மண்டபம், மாமண்டபம் ஆகியன மிக அழகிய முறையில பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் மேலதிகமாக சந்தானகோபாலர் ஆலயமும் அமைக்கப்பட்டுள்ளதுடன், தீர்த்தக் கிணறும் அமைக்கப்பட்டுள்ளது. இந்த மகத்தான பணிகளை எமது ஆலய பரிபாலன சபை நிறைவு செய்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19.08.2011 திகதியான இன்று மகா கும்பாபிசேகப் பெருஞ் சாந்தி விழாவை நடாத்துகிறதென்றால் அது மக்களது மகத்தான ஒத்துழைப்புகளும், அவர்களது நன்கொடைகளும், பேராதரவுகளுமே காரணமாகும். எனவே ஆலயத்தின் மகத்தான புனரமைப்புக்கு நிதியாயும், பொருளாயும் வாரி வழங்கிய அனைத்து மக்களுக்கும் ஆலய பரிபாலனசபையின் சார்பாக எங்களது உளம்நிறைந்த நன்றியறிதல்களை சமர்ப்பித்துக் கொள்கின்றோம். அதுமட்டுமல்ல சிலர் தாங்களாகவே முன்வந்து தங்களது செயவிலேயே சிலவேலைகளைப் பொறுப்பேற்று செய்து உதவியுள்ளார்கள். அவர்களுக்கும் பரிபாலன சபையின் நன்றியறிதலைக் கூறிக்கொள்வதுடன் அன்னையில் அருள் கிட்ட பிரார்த்திக்கின்றோம். மேலும் ஆலயத்தின் பரிபாலன சபையின் முன்னாள் தலைவரும், இன்னால் உபதலைவருமான உயர்திரு. பாலஸ்கந்தவேல் அவர்கள் தனது சுகவீனத்துடன் ஆலய புனரமைக்கான பணிக்காக நிதி சேர்ப்பதில் மிகுந்த அக்கறையுடன் செயலாற்றி போற்றுதற்குரிய பணியினை செய்துள்ளார் அவர்களுக்கு எனதும், ஆலய பரிபாலன சபையினதும் நன்றிகளை தெரிவித்துக் கொள்வதுடன் அன்னையின் திருவருள்கிட்ட பிரார்த்திக் கின்றோம்.

மேலும் ஆலய புனரமைப்பு விடயத்தில் ஆலய பரிபாலன சபையினரும் தொண்டர் சபையினரும் நிதிகள் சேகரித்தும், சிரமதான பணிகளை மேற்கொண்டும். ஆலய குருக்கள் பிரம்மஸ்ரீ. பாபுசர்மா அவர்களும் அவர்களது பெற்றோரும் இரவு பகலெனப் பாராமல் பெரிதும் பாடுபட்டுள்ளனர். இவர்களுக்கெல்லாம் அன்னையின் அருளாசிகள் கிடைக்கப் பிரார்த்திப்பதோடு ஆலய பரிபாலன சபையின் மனமார்ந்த நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன். அடுத்ததாக ஆலய புனரமைப்புப் பணிகளை மிகச் சிறப்பான முறையில் செய்து முடித்துள்ள வவுனியா கோவிற்குளத்தை சேர்ந்த ஸ்தபதி உயர்திரு.வினோசிறி அவர்களையும் அவரது உதவியாளர்களையும், அழகியற்சிற்பங்களை அமைத்துத் தந்து உதவியுள்ள தமிழ்நாடு திருவாரூர் இஞ்சிக்குடியைச் சேர்ந்த சிற்பக்கலைஞர் உயர்திரு.ஆர்.சந்திரசேகரன் (ராஜா) அவர்களையும், ஆலயத்துக்கான வர்ணபூச்சு வேலைகளை மிக சிறப்பான முறையில் செய்து உதவியுள்ள நல்லூரைச் சேர்ந்த ஓவியர் உயர்திரு. காங்கேசன் குருபரன் அவர்களையும், அவரது உதவியாளர்களையும் வவுனியா எல்லப்பர் மருதங்குளம் கனகரத்தினம் கனகேஸ்வரன் அவர்களையும் எமது பரிபாலன சபையின் சார்பாயும், பொது மக்களது சார்பாயும், எனது சார்பாயும், ஆலயக் குருக்கள் பிரம்மஸ்ரீ.பாபு சர்மா அவர்களது சார்பாயும் வாழ்த்துக்கூறி உளமார்ந்த பாராட்டுதல் களை தெரிவிப்பதோடு அன்னை அருள்மிகு. அகிலாண் டேஸ்வரி அம்பாளது நல்லாசி கிடைக்கப் பிரார்த்திக் கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்ததாக ஆலயத்துக்குரிய கதவுகள், நிலைகள் ஆகியவற்றை அழகிய சித்திர வேலைப்பாட்டுடன் செய்து தந்து உதவியுள்ள ஆசாரியார் திரு.துரைச்சாமி காந்தி அவர்களுக்கும், அவரது உதவியாளர்கள் ஆகிய அனைவருக்கும் அன்னை அகிலாண்டேஸ்வரி அம்பாளின் நல்லாசிகள் கிடைக்கப் பிரார்த்திப்பதோடு, எங்களது பரிபாலன சபையின் உளமார்ந்த நன்றியறிதல்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன். அவ்வாறே ஆலய கட்டிடத்தின் உள்பகுதி நிலத்துக்கு மிக நல்ல முறையில் ரெறாசோ இட்டு உதவியுள்ள திரு.பாலு அவர்களையும் எமது பரிபாலன சபை உளமாற வாழ்த்திக் கொள்வதுடன் அன்னையின் ஆசி கிட்ட பிரார்த்திக்கின்றது. அதுமட்டுமல்ல மன்னார் ஸ்ரீதானியா நிறுவனத்தின் அனுசரனையுடன் திரு.ஆ.கதிரமலை அவர்களால் ஆலயத்துக்கான மின் இணைப்புகள் மிக நல்ல முறையில் செய்து தரப்பட்டுள்ளது. எனவே திரு.கதிரமலை அவர்களுக்கும், ஸ்ரீதானியா நிறுவனத்தாருக்கும் எமது பரிபாலன சபை தனது உளம் நிறைந்த நன்றியறிதல்களை தெரிவித்துக் கொள்வதோடு அகிலாண்டேஸ்வரி அம்பாளின் ஆசிகள் கிடைக்கப் பிரார்த்திக்கின்றது.

நிறைவாக இந்த கும்பாபிசேகம் சிறப்புற நிறைவுபெற பலவழிகளிலும் ஒத்துழைப்பு தந்து உறுதுணையாக இருந்து ஒத்துழைத்த அடியார்களுக்கும், கும்பாபிசேகக் குழுவினர்களுக்கும், ஆதரவுதந்து தோளோடு தோள்நின்று பணியாற்றிய அனைத்து நண்பர்களுக்கும் நல்லிதையங்களுக்கும், ஆலய பரிபாலன சபையினருக்கும், தொண்டர் சபையினருக்கும், கும்பாபிசேக நிகழ்வினை சிறப்புற நடாத்தி முடித்த சிவாச்சாரிகள், குறிப்பாக பிரதம சிவாச்சாரியார் சிவஸ்ரீ.மனோகர சர்மா அவர்கட்கும், அவரது உதவிக் குருக்களுக்கும், மங்கள வாத்தியக் கலைஞர்களுக்கும், குறிப்பாக பூமாலைகள் தந்து சாத்துப்படி ஒத்தாசை வழங்கிய திரு.கோணேஸ்வரன் அவர்களுக்கும் எமது பரிபாலன சபையினது இதயபூர்வமான நன்றியறிதல்களை இங்கு தெரிவித்துக் கொள்கின்றோம்.

கும்பாபிஷேக மலருக்கான ஆசியுரைகள் வாழ்த்துச் செய்திகள் ஆக்கங்கள் தந்தோருக்கும் அழகான முறையில் கும்பாபிஷேக மலரை அச்சிட்டு உதவிய சாய்ராம் பிறிண்டேர்ஸ் நிறுவனத்திற்கும் நன்றிகள் பல.

